# பள்ளிக்கல்வித்துறை

## விழுப்புரம் மாவட்டம்

## பத்தாம் வகுப்பு

# கணிதம்

## திருத்தப்பட்ட பாடத்திட்டம்

## வினா – விடை வங்கி

## 2020 – 2021

### வாழ்த்துகளுடன்

திருமதி. K. கிருஷ்ணப்பிரியா, B.Sc., M.A., B.Ed.,

முதன்மைக் கல்வி அலுவலர்

விழுப்புரம் மாவட்டம்

**தன்னம்பிக்கை + விடாமுயற்சி + கடின உழைப்பு = வெற்றி**

**“The Struggle you’re in Today will definitely develop the strength you need for Tomorrow”**

# வாழ்த்துச் செய்தி

அன்புடையீர் வணக்கம்!

2020 – 2021 ம் கல்வி ஆண்டில் பத்தாம் வகுப்பு பொது தேர்வு எழுதவிருக்கும் அனைத்து மாணவர்களும் சிறப்பான முறையில் தேர்ச்சி பெற அயராது உழைத்துக் கொண்டிருக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் ''கொரோனா தொற்றுநோய்'' காலகட்டத்திலும் மீத்திறன் மிக்க மாணவர்களையும், மெல்ல கற்கும் மாணவர்களையும் தங்கள் நிலையில் இருந்து முன்னேற்றம் அடைய அதிகபட்ச அக்கறை எடுத்துக் கொள்ளும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது வாழ்த்துக்களை கூறி கொள்வதில் பெருமைக்கொள்கிறேன்.

மாநில அளவில் விழுப்புரம் மாவட்டத்தின் பத்தாம் வகுப்பு தேர்ச்சி சதவீதத்தை உயர்த்துவதே நமது பிராதன நோக்கம் ஆகும். ''சேவை மனப்பான்மையுடனும் அர்பணிப்பு உணர்வுடனும் பணியாற்றும் ஒரு ஆசிரியர் என்றும் கடவுளால் ஆசிர்வதிக்கப்படுவார் என்பது என்னுடைய கருத்து''

ஆதலால் பத்தாம் வகுப்பு எடுக்கும் அனைத்து ஆசிரியர்களும் ஏழை, ஆதரவற்ற, ஒடுக்கப்பட்ட, கிராமப்புற மாணவர்களின் நலன் மற்றும் முன்னேற்றம் கருதி அதிக நேரம் ஒதுக்கி அவர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்த்துக்களுடன்

**திருமதி. K. கிருஷ்ணப்பிரியா,** B.Sc., M.A., B.Ed.,

**முதன்மைக் கல்வி அலுவலர்**

**விழுப்புரம் மாவட்டம்**

## பள்ளிக்கல்வித்துறை விழுப்புரம் மாவட்டம்
## 10ம் வகுப்பு குறைக்கப்பட்ட கணித பாடத்திட்டம்
## 2020 – 2021

| இயல்/ Chapter | எடுத்துக்காட்டு (Example) | பயிற்சி (Exercise) | One Marks |
|---|---|---|---|
| 1 | Eg. 1.1 – 1.5 | Ex.1.1,1.2 | Ex. 1.6<br>Q.No. 1 – 7 |
| 2 | Eg. 2.1 – 2.10 & 2.19 – 2.30 | Ex. 2.1, 2.2, 2.4, 2.5 | Ex. 2.10<br>Q.No.1 – 5 & 7-10 |
| 3 | Eg. 3.1 – 3.46 & 3.51 – 3.55 | Ex.3.1 – 3.14 & 3.16 | Ex. 3.20<br>Q.No. 1 – 13 |
| 4 | Eg. 4.1 – 4.34<br>(அடிப்படை விகிதசம தேற்றத்தின் மறுதலை, கோண இருசமவெட்டித் தேற்றத்தின் மறுதலை, பிதாகரஸ் தேற்றத்தின் மறுதலை, மாற்று வட்டத்துண்டு தேற்றம் ஆகியவற்றின் கூற்றுகள் மட்டும் (நிரூபணமின்றி)<br>Converse of BPT, Converse of ABT, Converse of Phythagorous, Tangent Chord Theorem.(Only Statement, Without Proof ) | Ex.4.1 – 4.4 | Ex. 4.5<br>Q.No. 1 – 15 |
| 5 | Eg.5.1 – 5.29 | Ex. 5.1 - 5.3 | Ex. 5.5<br>Q.No.1 – 9 & 12 - 15 |
| 6 | Eg. 6.18 – 6.33 | Ex. 6.2 - 6.4 | Ex. 6.5<br>Q.No.10 - 15 |
| 7 | Eg. 7.1 – 7.28 | Ex. 7.1 – 7.3 | Ex. 7.5<br>Q.No. 1 – 15 |
| 8 | Eg. 8.17 – 8.25 & Eg. 8.27, 8.31 | Ex. 8.3<br>Ex. 8.4 Q.No. : 2(i), (ii), 3, 5 & 7 | Ex. 8.5<br>Q.No. 9 - 15 |

## அலகுத்தேர்வு பாடத்திட்டம் (Unit Test)

| | |
|---|---|
| அலகுத்தேர்வு 1 / Unit Test 1 | Chapter 1 & 2<br>வடிவியல் – வடிவொத்த முக்கோணங்களை வரைதல் மற்றும் சிறப்பு முக்கோணங்கள் வரைதல்/ Geometry – Construction of Similar Triangles and Special Triangles |
| அலகுத்தேர்வு 2/ Unit Test 2 | Chapter 3 & 4<br>வரைபடம்/Graph Ex.3.16, Eg.3.51 – 3.55 |
| அலகுத்தேர்வு 3/ Unit Test 3 | Chapter 5 & 6<br>வடிவியல் தொடுகோடு வரைதல் / Geometry – Construction of Tangents to a Circle |
| அலகுத்தேர்வு 4/ Unit Test 4 | Chapter 7 & 8<br>வரைபடம்/ Graph Ex.3.16 |

## நிலை – 1

| வ. எண் | பாடப்பொருள் | 1 | 2 | 5 | 8 | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வடிவியல் | 1 | – | 1 | 1 | 14 |
| 2 | வரைபடங்கள் | – | – | – | 1 | 8 |
| 3 | உறவுகளும் சார்புகளும் | 2 | 2 | 1 | – | 11 |
| 4 | எண்களும் தொடர்வரிசைகளும் | 2 | 1 | – | – | 4 |
| 5 | இயற்கணிதம் | 2 | 2 | 1 | – | 11 |
| 6 | ஆயத்தொலை வடிவியல் | 2 | 1 | 1 | – | 9 |
| 7 | முக்கோணவியல் | 1 | 1 | – | – | 3 |
| 8 | அளவியல் | 2 | – | – | – | 2 |
| 9 | நிகழ்தகவு | 2 | 2 | 2 | – | 16 |
| | மொத்தம் | 14 | 18 | 30 | 16 | 78 |

## நிலை – 2

| வ. எண் | பாடப்பொருள் | 1 | 2 | 5 | 8 | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வடிவியல் | 1 | 1 | 1 | 1 | 16 |
| 2 | வரைபடங்கள் | – | – | – | 1 | 8 |
| 3 | உறவுகளும் சார்புகளும் | 2 | 2 | 1 | – | 11 |
| 4 | எண்களும் தொடர்வரிசைகளும் | 2 | 1 | 1 | – | 9 |
| 5 | இயற்கணிதம் | 2 | 2 | 2 | – | 16 |
| 6 | ஆயத்தொலை வடிவியல் | 2 | 1 | 2 | – | 14 |
| 7 | முக்கோணவியல் | 1 | 1 | 1 | – | 8 |
| 8 | அளவியல் | 2 | 1 | 2 | – | 14 |
| 9 | நிகழ்தகவு | 2 | 2 | 2 | – | 16 |
| | மொத்தம் | 14 | 22 | 60 | 16 | 112 |


- ✓ நிலை(1) ஒன்றை மட்டுமே பயிற்சி செய்தால் கண்டிப்பாக குறைந்தபட்சம் 70 மதிப்பெண் பெற முடியும்.
- ✓ நிலை(1) ஒன்றுடன் நிலை(2 ) இரண்டையும் சேர்த்து பயிற்சி செய்தால் 90 மதிப்பெண்ணுக்கு குறைவில்லாமல் பெற முடியும்.

**கையேடு உருவாக்கம்**

**திரு.A.சிவமூர்த்தி,** M.Sc, M.Phil., B.Ed.,
பட்டதாரி ஆசிரியர், அரசு உயர் நிலை பள்ளி,
பெரும்பாக்கம், விழுப்புரம் மாவட்டம்
**9080961984, 9750827997**

# நிலை –1 வடிவியல்


1. கொடுக்கப்பட்ட முக்கோணம் LMN ன் ஒத்தப் பக்கங்களின் விகிதம் $\frac{4}{5}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{4}{5}$)




**வரைதலின் படிகள்**

1. ஏதேனும் ஓர் அளவைக்கொண்டு $\Delta LMN$ வரைக.
2. MN என்ற கோட்டுத்துண்டில் குறுங்கோணத்தை ஏற்படுத்துமாறு MX என்ற கதிரை L என்ற முனைப் புள்ளிக்கு எதிர்திசையில் வரைந்து, அதில் $MM_1$ = $M_1M_2$ = $M_2M_3$ = $M_3M_4$ = $M_4$ $M_5$ என்றவாறு குறிக்கவும்.
3. $M_5N$ ஐ இணைத்து, இதற்கு இணையாக $M_4N'$ வரைக. N'லிருந்து LNக்கு இணையாக L'N' வரைக.
4. $\Delta L'MN'$ ஆனது தேவையான வடிவொத்த முக்கோணம் ஆகும்.


2. கொடுக்கப்பட்ட முக்கோணம் PQR ன் ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{7}{3}$ என்றவாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{7}{3}$)





**வரைதலின் படிகள்**

1. ஏதேனும் ஓர் அளவைக்கொண்டு $\Delta PQR$ வரைக.
2. PR என்ற கோட்டுத்துண்டில் குறுங்கோணத்தை ஏற்படுத்துமாறு PX என்ற கதிரை Q என்ற முனைப் புள்ளிக்கு எதிர்திசையில் வரைந்து, அதில் $P_1,P_2,P_3,P_4,P_5,P_6,P_7$ என்ற புள்ளிகளை சம அளவில் குறிக்க.
3. $P_3R$ ஐ இணைத்து, இதற்கு இணையாக $P_7R'$ வரைக. R'லிருந்து RQக்கு இணையாக R'Q' வரைக.
4. $\Delta PQ'R'$ ஆனது தேவையான வடிவொத்த முக்கோணம் ஆகும்.

3. QR = 5 செ.மீ, ∠P = 40° மற்றும் உச்சி P–யிலிருந்து QR-க்கு வரையப்பட்ட நடுக்கோட்டின் நீளம் PG = 4.4 செ.மீ என இருக்கும்படி Δ PQR வரைக. மேலும் P–லிருந்து QR –க்கு வரையப்பட்ட குத்துக்கோட்டின் நீளம் காண்க.









**வரையறை**

1. QR = 5 செ.மீ என்ற கோட்டுத்துண்டு வரைக. புள்ளி Q வழியே $\angle RQE$ = 40° என இருக்குபடி PE வரைக.
2. QE ⊥ QF வரைக.
3. QR க்கு வரையப்படும் மையக்குத்துக்கோடு QF ஐ Oவிலும் , QR – ஐ G யிலும் சந்திக்கட்டும்.
4. O வை மையமாகவும் OR யை ஆரமாகவும் கொண்டு ஒரு வட்டம் வரைக.
5. G –யிலிருந்து 4.4 செ.மீ ஆரமுள்ள வில்களை வட்டத்தில் வெட்டவும். அவை P,S என்ற புள்ளிகளில் சந்திக்கவும்
6. QR ஐ இடுப்புறம் நீட்டி PM என்ற செங்குத்துகோடு வரைக,

4. PQ = 4.5 செ.மீ, $\angle R$ = 35° மற்றும் உச்சி R –யிலிருந்து வரையப்பட்ட நடுக்கோட்டின் நீளம் RG=6செ.மீ என அமையுமாறு Δ PQR வரைக.









**வரையறை**

1. PQ = 4.5 செ.மீ என்ற கோட்டுத்துண்டு வரைக. புள்ளி P வழியே $\angle QPE$ = 40° என இருக்குபடி PE வரைக.
2. புள்ளி P வழியில் $\angle EPF$ = 90° என இருக்குபடி PF வரைக.
3. PQக்கு வரையப்படும் மையக்குத்துக்கோடு PF ஐ Oவிலும் , PQ – ஐ G யிலும் சந்திக்கிறது.
4. Oவை மையமாகவும் OP-யை ஆரமாகவும் கொண்டு ஒரு வட்டம் வரைக.
5. G –யிலிருந்து 6செ.மீ ஆரமுள்ள வில்களை வட்டத்தில் வெட்டவும். அவை வெட்டும் புள்ளிகள் R,S என குறிக்குவும்.
6. PQ மற்றும் PR – ஐ இணைக்கவும்.ΔPQR தேவையான முக்கோணம் ஆகும்.

5. QR = 6.5 செ.மீ, ∠P = **60**° மற்றும் உச்சி P–யிலிருந்து QRக்கு வரையப்பட்ட குத்துக்கோட்டின் நீளம் **4.5** செ.மீ உடைய Δ PQR வரைக.









**வரையரை**

1. QR = 6.5 செ.மீ என்ற கோட்டுத்துண்டு வரைந்து அதன் வழியே $\angle RQE$ = **60**° என இருக்குமாறு QE வரைக.
2. QEக்கு செங்குத்தாக QF வரைக .
3. QR க்கு மையக்குத்துக்கோடு வரைக. அது QF ஐ Oவிலும் , QR – ஐ Gயிலும் சந்திக்கட்டும்.
4. Oவை மையமாகவும் OQ-வை ஆரமாகவும் கொண்டு ஒரு வட்டம் வரைக.
5. G –யிலிருந்து **4.5**செ.மீ செங்குத்து இடைவெளி உள்ளவாறு QR ‖ AB வரைக.அது P,S புள்ளிகளில் வட்டத்தை வெட்டும்.
7. PQR இணைக்க. PR – ஐ இணைக்கவும். இதுவே ΔPQR ஆன முக்கோணம் ஆகும்.

6. அடிப்பக்கம் BC=5.6 செ.மீ, ∠A =**40** ° மற்றும் ∠A யின் இருசம வெட்டியானது அடிபக்கம் BC ஐ BD = 4 செ.மீ என D யில் சந்திக்குமாறு அமையும் முக்கோணம் ABC வரைக.









**வரையரை**

1. BC = 5.6 செ.மீ என்ற கோட்டுத்துண்டு வரைக. புள்ளி B வழியே $\angle CBE$ = **40**° என இருக்கும்படி BE வரைக.
2. புள்ளி B வழியே $\angle EBF$ = **90** ° என இருக்குபடி BF வரைக.
3. BCக்கு வரையப்படும் மையக் குத்துக்கோடு BF ஐ Oவிலும் , BC ஐ Gயிலும் சந்திக்கட்டும்.
4. Oவை மையமாகவும் OB-யை ஆரமாகவும் கொண்டு ஒரு வட்டம் வரைக.
5. புள்ளி B –யிலிருந்து BC ல் **1.6**செ.மீ தொலைவில் D என்ற புள்ளிக்கு ஒரு வில் வரைக. மையக்குத்துக்கோடானது வட்டத்தை I என்ற புள்ளியில் சந்திக்கிறது. ID ஐ இணைக்கவும்.
6. ID ஐ வட்டத்தில் Aல் சந்திக்குமாறு நீட்டவும். AB மற்றும் AC – யை இணைக்கவும். ΔABC என்பது தேவையானமுக்கோணம் ஆகும்.

7. P ஐ மையமாகக் கொண்ட 3.4 செ.மீ ஆரமுள்ள ஒரு வட்டத்திற்கு R என்ற புள்ளியில் தொடுகோடு வரைக.









**வரையரை**

1. P ஐ மையமாகக் கொண்டு 3.4 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைக.
2. வட்டத்தின் R என்ற புள்ளியைக் குறித்து PR – ஐ இணைக்கவும்.
3. R என்ற புள்ளி PR க்கு செங்குத்தாக TT' வரைக.
4. TT' என்பது தேவையான தொடுகோடாகும்.

8. 4 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைக. வட்டத்தின் மீதுள்ள L என்ற புள்ளி வழியாக மாற்று வட்டத்துண்டு தேற்றத்தைப் பயன்படுத்தி வட்டத்திற்குத் தொடுகோடு வரைக.





**வரையரை**

1. O ஐ மையமாகக் கொண்டு 4 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைக.
2. வட்டத்தின் மேல் L என்ற புள்ளியை குறிக்கவும். L,M,N குறித்து இணைக்கவும்.
3. $\angle TLM = \angle MNL$ எனஅமையுமாறு L வழியே TT' என்ற தொடுகோடு வரைக.
4. TT' என்பது தேவையான தொடுகோடாகும்.


9. 6செ.மீ விட்டமுள்ள வட்டம் வரைந்து வட்டத்தின் மையத்திலிருந்து 8 செ.மீ தொலைவினில் என்ற P புள்ளியை குறிக்கவும். அப்புள்ளியிலிருந்து PA மற்றும் PB என்ற இரு துண்டுகோடுகள் வரைந்து அவற்றின் நீளங்களை அளவிடுக.




**வரையறை**

1. O வை மையமாகக் கொண்டு 3 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைக.
2. 8 செ.மீ நீளமுள்ள OP என்ற கோடு வரைக.
3. OP க்கு மையக்குத்துக்கோடு வரைக.அது OP யை M ல் சந்திக்கும்
4. M யை மையமாகவும் MO வை ஆரமாகவும் கொண்டு வரைபட வட்டமானது முந்தைய வட்டத்தை A மற்றும் B ல் சந்திக்கிறது
5. AP மற்றும் PB யை இணைக்கவும். AP மற்றும் PB தேவையான தொடு கோடுகளாகும். தொடுகோட்டின் நீளம் PA = PB = 7.4 செ.மீ

10. 5 செ.மீ ஆரமுள்ள வட்டத்தின் மையத்திலிருந்து 10 செ.மீ தொலைவிலுள்ள புள்ளியிலிருந்து வட்டத்திற்குத் தொடுகோடுகள் வரையவும். மேலும் தொடுகோட்டின் நீளங்களைக் கணக்கிடுக.




**வரையறை**

1. O வை மையமாகக் கொண்டு 5 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைக.
2. 10 செ.மீ நீளமுள்ள OP வரைந்து அதற்கு மையக்குத்துகோடு வரைக. அது OP ஐ M இல் சந்திக்கப்படும்.
3. M ஐ மையமாகவும் MO வை ஆரமாகவும் கொண்டு ஒரு வட்டம் வரைக. அது முந்தைய வட்டத்தை A,B இல் சந்திக்கிறது.
4. AP மற்றும் BP யை இணைக்கவும். இதுவே நமக்கு தேவையான தொடுகோடாகும்.

**<u>சரிபார்த்தல்</u>**

செங்கோண முக்கோணம் OPA ல்

$PA^2 = OP^2 - OA^2 = 10^2 - 5^2$

$= 100 - 25 = 75$

$PA = \sqrt{75} = 8.6$ செ.மீ (தோராயமாக)

# வரைப்படம்


1. கொடுக்கப்பட்ட இருபடிச் சமன்பாட்டின் வரைபடம் வரைக. அதன் தீர்வுகளின் தன்மையைக் கூறுக : $x^2 - 9x + 20 = 0$.

**அட்டவணை**

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| -9x | 36 | 27 | 18 | 9 | 0 | -9 | -18 | -27 | -36 |
| +20 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 |
| y | 72 | 56 | 42 | 30 | 20 | 12 | 6 | 2 | 0 |

**புள்ளிகள்** (–4, 72), (–3, 56), (–2, 42), (–1, 30), (0, 20), (1,12), (2, 6), (3,2), (4, 0)

**பரவளையம் x அச்சை வெட்டும் புள்ளிகள்:** (4,0) மற்றும் (5, 0) x ஆயத்தொலைவுகள் 4 மற்றும் 5




**தீர்வுகளின் தன்மை**

பரவளையம் x அச்சை இருவேறு புள்ளிகளில் வெட்டுகிறது. எனவே


**மூலங்கள் மெய், சமமில்லை**

2. கொடுக்கப்பட்ட இருபடிச் சமன்பாட்டின் வரைபடம் வரைக. அதன் தீர்வுகளின் தன்மையைக் கூறுக : $x^2 - 4x + 4 = 0$.

அட்டவணை

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| -4x | 16 | 12 | 8 | 4 | 0 | -4 | -8 | -12 | -16 |
| +4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |
| y | 36 | 25 | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 |

புள்ளிகள் (–4, 36), (–3, 25), (–2, 16), (–1, 9), (0, 4), (1,1), (2, 0), (3,1), (4, 4)




தீர்வுகளின் தன்மை

பரவளையம் x அச்சை ஒரே ஒரு புள்ளியில் தொட்டு வெட்டுகிறது. எனவே


**மூலங்கள் மெய், சமம்**

3. **கொடுக்கப்பட்ட இருபடிச் சமன்பாட்டின் வரைபடம் வரைக. அதன் தீர்வுகளின் தன்மையைக் கூறுக : $x^2 + x + 7 = 0$.**

**<u>அட்டவணை</u>**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| +x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| +7 | 7 | 7 | 7 | 7 | 7 | 7 | 7 | 7 | 7 |
| y | 19 | 13 | 9 | 7 | 7 | 9 | 13 | 19 | 27 |

**<u>புள்ளிகள்</u> (–4, 19), (–3, 13), (–2, 9), (–1, 7), (0, 7), (1,9), (2, 13), (3,9), (4, 27)**




**<u>தீர்வுகளின் தன்மை</u>** பரவளையம் x அச்சை வெட்டவும் இல்லை, தொட்டுச் செல்லவில்லை. எனவே **மூலங்கள் மெய்யல்ல**


**4. கொடுக்கப்பட்ட இருபடிச் சமன்பாட்டின் வரைபடம் வரைக. அதன் தீர்வுகளின் தன்மையைக் கூறுக : $(2x - 3)(x + 2) = 0$.**

$y = (2x - 3)(x + 2) = 2x^2 + 4x - 3x - 6 = 2x^2 + x - 6$

**<u>அட்டவணை</u>**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| $2x^2$ | 32 | 18 | 8 | 2 | 0 | 2 | 8 | 18 | 32 |
| +x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| -6 | -6 | -6 | -6 | -6 | -6 | -6 | -6 | -6 | -6 |
| y | 22 | 9 | 0 | -5 | -6 | -3 | 4 | 15 | 30 |

**<u>புள்ளிகள்</u>** (–4, 22), (–3,9), (–2, 0), (–1,–5), (0,–6), (1,–3), (2, 4), (3,15), (4, 30)




**<u>தீர்வுகளின் தன்மை</u>** பரவளையம் x அச்சை ஒரே இருவேறு புள்ளிகளில் வெட்டுகிறது. எனவே **மூலங்கள் மெய், சமமில்லை**

**5.** $y = x^2 + x - 2$ **ன் வரைபடம் வரைந்து அதன் மூலம்** $x^2 + x - 2 = 0$ **என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.**


**<u>அட்டவணை</u>**

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| +x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| -2 | -2 | -2 | -2 | -2 | -2 | -2 | -2 | -2 | -2 |
| y | 10 | 4 | 0 | -2 | -2 | 0 | 4 | 10 | 18 |

**<u>புள்ளிகள்</u>** (–4, 10), (–3,4), (–2, 0), (–1,–2), (0,–2), (1,0), (2, 4), (3,10), (4, 18)

**<u>கழித்தல்</u>**

$$\begin{array}{rrrr} y = & x^2 + & x & -2 \\ 0 = & x^2 + & x & -2 \\ (-) & (-) & (-) & (-) \\ \hline & \mathbf{y = 0} & & \\ \hline \end{array}$$




**<u>தீர்வுகள்</u>** **–2 மற்றும் 1**

**6.** $y = x^2 - 5x - 6$ **யின் வரைபடம் வரைந்து, அதனைப் பயன்படுத்தி** $x^2 - 5x - 14 = 0$ **என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.**

**அட்டவணை**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| -5x | 20 | 15 | 10 | 5 | 0 | -5 | -10 | -15 | -20 |
| -6 | -6 | -6 | -6 | -6 | -6 | -6 | -6 | -6 | -6 |
| y | 30 | 18 | 8 | 0 | -6 | -10 | -12 | -12 | -10 |

**புள்ளிகள்** (–4, 30), (–3,4),(–2, 8), (–1,0),(0,–6),(1,–10),(2, –12),(3,–12),(4, 10)


**கழித்தல்**

$y = x^2 - 5x - 6$

$0 = x^2 - 5x - 14$

(-) (-) (+) (+)

$\mathbf{y = 8}$




**தீர்வுகள்** **–2 மற்றும் 7**

**7.** $y = 2x^2 - 3x - 5$ யின் வரைபடம் வரைந்து, அதனைப் பயன்படுத்தி $2x^2 - 4x - 6 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.

<u>அட்டவணை</u>

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| $2x^2$ | 32 | 18 | 8 | 2 | 0 | 2 | 8 | 18 | 32 |
| -3x | 12 | 9 | 6 | 3 | 0 | -3 | -6 | -9 | -12 |
| -5 | -5 | -5 | -5 | -5 | -5 | -5 | -5 | -5 | -5 |
| y | 39 | 22 | 9 | 0 | -5 | -6 | -3 | 4 | 15 |


<u>புள்ளிகள்</u> (–4, 39), (–3,22), (–2, 9), (–1,0), (0,–5), (1,–6), (2, –3), (3,4), (4, 15)

<u>கழித்தல்</u>

$$\begin{array}{rl} y = & 2x^2 - 3x - 5 \\ 0 = & 2x^2 - 4x - 6 \\ (-) & (-)\ (+)\ (+) \\ \hline y = & x + 1 \end{array}$$

<u>அட்டவணை</u>

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| +1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| y | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |




<u>தீர்வுகள்</u> –1 மற்றும் 3

**8.** $y = 2x^2$ என்ற வரைபடம் வரைந்து அதன் மூலம் $2x^2 - x - 6 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்க.

**அட்டவணை**

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| $2x^2$ | 32 | 18 | 8 | 2 | 0 | 2 | 8 | 18 | 32 |
| y | 32 | 18 | 8 | 2 | 0 | 2 | 8 | 18 | 32 |

**புள்ளிகள்** (–4, 32), (–3,18), (–2, 8), (–1,2), (0,0), (1,2), (2, 8), (3,18), (4, 32)

**கழித்தல்**

$y = 2x^2$


$0 = 2x^2 - x - 6$

(-) (-) (+) (+)

$\mathbf{y = x + 6}$

**அட்டவணை**

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| +6 | 6 | 6 | 6 | 6 | 6 | 6 | 6 | 6 | 6 |
| y | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |




**தீர்வுகள்** –1.5 மற்றும் 2

**9. $y = x^2 - 4x + 3$ யின் வரைபடம் வரைந்து அதன் மூலம் $x^2 -6x +9 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.**

**அட்டவணை**

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| -4x | 16 | 12 | 8 | 4 | 0 | -4 | -8 | -12 | -16 |
| +3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |
| y | 35 | 24 | 15 | 8 | 3 | 0 | -1 | 0 | 3 |


**புள்ளிகள்** (–4, 35), (–3,24), (–2, 15), (–1,8), (0,3), (1,0), (2, –1), (3,0), (4, 3)

**கழித்தல்**

$$y = x^2 - 4x + 3$$
$$0 = x^2 - 6x + 9$$
$$(-) \quad (-) \; (+) \; (-)$$
$$\mathbf{y = 2x - 6}$$

**அட்டவணை**

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2x | -8 | -6 | -4 | -2 | 0 | 2 | 4 | 6 | 8 |
| -6 | -6 | -6 | -6 | -6 | -6 | -6 | -6 | -6 | -6 |
| y | -14 | -12 | -10 | -8 | -6 | -4 | -2 | 0 | 2 |



**தீர்வுகள்** 3

**10.** **$y = (x-1)(x + 3)$ யின் வரைபடம் வரைந்து, அதனைப் பயன்படுத்தி $x^2 - x - 6 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.**

$y = (x-1)(x + 3) \quad = x^2 + 3x - x - 3 \quad = x^2 + 2x - 3$

**அட்டவணை**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| +2x | -8 | -6 | -4 | -2 | 0 | 2 | 4 | 6 | 8 |
| -3 | -3 | -3 | -3 | -3 | -3 | -3 | -3 | -3 | -3 |
| y | 5 | 0 | -3 | -4 | -3 | 0 | 5 | 12 | 24 |


**புள்ளிகள்** (–4,5), (–3,0), (–2, –3), (–1, –4), (0,–3), (1,0), (2, 5), (3,12), (4, 24)

**கழித்தல்**

$$y = x^2 + 2x - 3$$
$$0 = x^2 - x - 6$$
$$(-) \quad (-) \; (+) \; (-)$$
$$\mathbf{y = 3x + 3}$$

**அட்டவணை**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| 3x | -12 | -9 | -6 | -3 | 0 | 3 | 6 | 9 | 12 |
| 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |
| y | -9 | -6 | -3 | 0 | 3 | 6 | 9 | 12 | 15 |




**தீர்வுகள்** **–2 மற்றும் 3**

## பயிற்சிக்காக –வடிவியல்

1. கொடுக்கப்பட்ட முக்கோணம் PQR க்கு ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{3}{5}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{3}{5}$)
2. கொடுக்கப்பட்ட முக்கோணம் PQR யின் ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{2}{3}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக.
3. கொடுக்கப்பட்ட முக்கோணம் PQR க்கு ஒத்தப் பக்கங்களின் விகிதம் $\frac{7}{4}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{7}{4} > 1$)
4. கொடுக்கப்பட்ட முக்கோணம் ABC யின் ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{6}{5}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{6}{5}$)
5. QR = 5 செ.மீ, $\angle P = 30°$ மற்றும் P–யிலிருந்து QRக்கு வரையப்பட்ட குத்துக்கோட்டின் நீளம் 4.2 செ.மீ கொண்ட $\Delta$ PQR வரைக.
6. AB = 5.5 செ.மீ, $\angle C = 25°$ மற்றும் உச்சி C–யிலிருந்து ABக்கு வரையப்பட்ட குத்துக்கோட்டின் நீளம் 4 செ.மீ உடைய $\Delta$ ABC வரைக.
7. PQ = 6.5 செ.மீ, $\angle R = 55°$ மற்றும் உச்சி R –யிலிருந்து வரையப்பட்ட நடுக்கோட்டின் நீளம் RG = 6 செ.மீ என அமையுமாறு $\Delta$ PQR வரைக.
8. PQ = 8 செ.மீ, $\angle R = 60°$, உச்சி R – லிருந்து PQ-க்கு வரையப்பட்ட நடுக்கோட்டின் நீளம் RG = 5.8 செ.மீ என இருக்குமாறு $\Delta$ PQR வரைக. R–லிருந்து PQ –க்கு வரையப்பட்ட குத்துக்கோட்டின் நீளம் காண்க.
9. அடிப்பக்கம் BC = 8 செ.மீ, $\angle A = 60°$ மற்றும் $\angle A$ யின் இருசமவெட்டியானது BC ஐ D என்ற புள்ளியில் BD = 6 செ.மீ என்றவாறு சந்திக்கிறது எனில் முக்கோணம் ABC வரைக.
10. 6 செ.மீ விட்டமுள்ள வட்டம் வரைந்து வட்டத்தின் மையத்திலிருந்து 5 செ.மீ தொலைவிலுள்ள ஒரு புள்ளியைக் குறிக்கவும். அப்புள்ளியிலிருந்து வட்டத்திற்குத் தொடுகோடுகள் வரைந்து தொடுகோட்டின் நீளங்களை அளவிடுக.
11. 4 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைந்து அதன் மையத்திலிருந்து 11 செ.மீ தொலைவிலுள்ள ஒரு புள்ளியைக் குறித்து, அப்புள்ளியிலிருந்து வட்டத்திற்கு இரண்டு தொடுகோடுகள் வரைக.
12. QR = 5 செ.மீ, $\angle P = 40°$ மற்றும் உச்சி P–யிலிருந்து QRக்கு வரையப்பட்ட நடுக்கோட்டின் நீளம் PG = 4.4 செ.மீ என இருக்கும்படி $\Delta$ PQR வரைக. மேலும் P –லிருந்து QR –க்கு வரையப்பட்ட குத்துக்கோட்டின் நீளம் காண்க.
13. PQ = 6.8 செ.மீ, உச்சிக்கோணம் 50 ° மற்றும் உச்சிக்கோணத்தின் இருசமவெட்டியானது அடிப்பக்கத்தை PD = 5.2 செ.மீ என D –யில் சந்திக்குமாறு அமையும் $\Delta$ PQR வரைக

## பயிற்சிக்காக – வரைப்படம்

1. இருபடிச்சமன்பாட்டின் தீர்வுகளின் தன்மையை வரைபடம் மூலம் ஆராய்க : $x^2 + x - 12 = 0$.
2. இருபடிச்சமன்பாட்டின் தீர்வுகளின் தன்மையை வரைபடம் மூலம் ஆராய்க : $x^2 - 8x + 16 = 0$.
3. இருபடிச்சமன்பாட்டின் தீர்வுகளின் தன்மையை வரைபடம் மூலம் ஆராய்க : $x^2 + 2x + 5 = 0$.
4. கொடுக்கப்பட்ட இருபடிச் சமன்பாட்டின் வரைபடம் வரைக. அதன் தீர்வுகளின் தன்மையைக் கூறுக : $x^2 - 9 = 0$.
5. கொடுக்கப்பட்ட இருபடிச் சமன்பாட்டின் வரைபடம் வரைக. அதன் தீர்வுகளின் தன்மையைக் கூறுக : $x^2 - 6x + 9 = 0$.
6. $y = x^2 - 4$ வரைபடம் வரைந்து அதனைப்பயன்படுத்தி $x^2 - x - 12 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.
7. $y = x^2 + 4x + 3$ன் வரைபடம் வரைந்து அதனைப் பயன்படுத்தி $x^2 + x + 1 = 0$ என்ற சமன்பாட்டின் தீர்வைக் காண்க.
8. $y = x^2 + x$ யின் வரைபடம் வரைந்து, $x^2 + 1 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.
9. $y = x^2 + 3x + 2$ யின் வரைபடம் வரைந்து, அதனைப் பயன்படுத்தி $x^2 + 2x + 1 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.
10. $y = x^2 + 3x - 4$ யின் வரைபடம் வரைந்து, அதனைப் பயன்படுத்தி $x^2 + 3x - 4 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.
11. $y = x^2 + x$ –யின் வரைபடம் வரைந்து, $x^2 + 1 = 0$ என்ற சமன்பாட்டைக் தீர்க்கவும்.

# இயல் – 1

# உறவுகளும் சார்புகளும்

## 1 MARKS

1. n(AxB) = 6 மற்றும் A = {1,3} எனில் n(B)ஆனது
   (1) 6 **(2) 3** (3) 2 (4) 1
2. A ={a,b,p}, B ={2, 3}, C ={p,q,r,s}, எனில் , n[(A∪C)xB]ஆனது
   (1) 8 **(2) 12** (3) 16 (4) 20
3. A={1,2}, B = {1,2,3,4}, C ={5,6} மற்றும் D={5,6,7,8} எனில், கீழே கொடுக்கப்பட்டவைகளில் எது சரியான கூற்று
   (1) (B x D) ⊂(A x C ) **(2) (A x C) ⊂(B x D)** (3) (Ax B) ⊂(A x D) (4) (DxA) ⊂(B x A )
4. A ={1, 2,3,4,5} –லிருந்து , B என்ற கணத்திற் கு1024 உறவுகள் உள்ளது எனில் , B ல் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை
   **(1) 2** (2) 3 (3) 4 (4) 8
5. R={(x, $x^2$) | x ஆனது 13–ஐ விடக் குறைவான பகா எண்கள்} என்ற உறவின் வீச்சகமானது
   **(1) {4, 9, 25,49,121}** (2) {1, 4, 9, 25, 49,121} (3) { 2, 3, 4, 5,7} (4) {2, 3, 5, 7, 11}
6. (a+2, 4) மற்றும் (5, 2a + b )ஆகிய வரிசைச் சோடிகள் சமம் எனில், (a,b) என்பது
   (1) (2,-2) (2) (5, 1) (3) (2, 3) **(4) (3, -2)**
7. n(A) = m மற்றும் n(B) = n என்க. A–யிலிருந்து B–க்கு வரையறுக்கப்பட்ட வெற்று கணமில்லாத உறவுகளின் மொத்த எண்ணிக்கை .
   (1) $m^n$ (2) $n^m$ (3) $2^{mn}$ **(4) $2^{mn}$ - 1**

## 2 MARKS

**1. If A = {1,3,5}, B = {2,3} எனில் A X B மற்றும் B X A –ஐ காண்க .**

**தீர்வு**

A = {1, 3, 5}மற்றும் B = {2, 3} கொடுக்கப்பட்டுள்ளன.

A X B = {1, 3, 5} x {2x 3} = {(1,2), (1,3), (3,2), (3,3), (5,2), (5,3)}

B X A = {2, 3} x {1, 3, 5} = {(2,1), (2,3), (2,5), (3,1), (3,3), (3,5)}

**2. If A = {1,3,5}, B = {2,3} எனில் A X B = B X A? ஆகுமா ? இல்லையெனில் ஏன் ?**

**தீர்வு**

A = {1, 3, 5}மற்றும் B = {2, 3} கொடுக்கப்பட்டுள்ளன.

A X B = {1, 3, 5} x {2x 3} = {(1,2), (1,3), (3,2), (3,3), (5,2), (5,3)} ………(1)

B X A = {2x 3} x {1, 3, 5} = {(2,1), (2,3), (2,5), (3,1), (3,3), (3,5)} ………(2)

(1) மற்றும் (2) –ன் மூலமாக A x B ≠ B x A ஏனெனில் (1,2) ≠ (2,1) and (1,3) ≠ (3,1)…

**3. If A = {1,3,5}, B = {2,3} எனில் n(A×B) = n(B×A) = n(A)× n(B) எனக் காட்டுக.**

**தீர்வு**

A X B = {1, 3, 5} x {2x 3} = {(1,2), (1,3), (3,2), (3,3), (5,2), (5,3)} ………(1)

B X A = {2x 3} x {1, 3, 5} = {(2,1), (2,3), (2,5), (3,1), (3,3), (3,5)} ………(2)

n(A) = 3 ; n(B) = 2

(1) மற்றும் (2) –லிருந்து நாம் காண்பது, n(A x B) = n(B x A) = 6;

n(A) x n(B) = 3 x 2 = 6 மற்றும் n(B) x n(A) = 2 x 3 = 6

எனவே,n(A x B) = n(B x A) = n(A) x n(B) = 6.

ஆகவே, n(A x B) = n(B x A) = n(A) x n(B).

**4. A×B = {(3,2), (3,4), (5,2), (5,4)} எனில் A மற்றும் B –ஐ காண்க.**

**தீர்வு**

A×B = {(3,2), (3,4), (5,2), (5,4)}

A = { A×B –யின் முதல் ஆயத்தொலைவு உறுப்புகளின் கணம்}. எனவே, A = {3, 5}

B = { A×B –யின் இரண்டாம் ஆயத்தொலைவு உறுப்புகளின் கணம்}. எனவே, B={2, 4}

எனவே, A = {3, 5} மற்றும் B={2, 4}

5. **பின்வருவனவற்றிற்கு A x B, A x A மற்றும் B x A ஐக் காண்க.A={2, -2, 3} மற்றும் B={1, -4}**

**தீர்வு**

A x B = {2, -2, 3} x{1, -4} = {(2,1), (2, -4), (-2,1), (-2, -4), (3, 1), (3,-4)}

A x A = {2,-2,3}x{2,-2,3}={(2, 2),(2, -2),(2,3),(-2, 2),(-2, -2),(-2, 3),(3, 2),(3,-2), (3,3)}

B x A = {1, -4} x {2, -2, 3} = {(1,2), (1,-2), (1,3), (-4,2), (-4,-2), (-4,3)}

6. **பின்வருவனவற்றிற்கு A x B, A x A மற்றும் B x A ஐக் காண்க. A = B = {p, q}**

**தீர்வு**

A = B = {p, q}

A x B = {(p, p), (p, q), (q, p),(q ,q)}

A x A = {(p, p), (p, q), (q, p),(q ,q)}

B x A = {(p, p), (p, q), (q, p),(q ,q)}

**7. பின்வருவனவற்றிற்கு A x B, A x A மற்றும் B x A ஐக் காண்க. A = {m, n} ; B = $\phi$**

**தீர்வு**

A = {m, n}, B = $\phi$ A x B = {(m, n)} x { } = { }

A x A = {(m, n) } x {m, n} = {(m, m), (m, n), (n, m), (n,n)}

B x A = { } x {m, n} = { }

**8. A = {1, 2, 3} மற்றும் B = { x |x என்பது 10–ஐ விடச் சிறிய பகா எண்} எனில் A x B மற்றும் B x A ஆகியவற்றைக் காண்க.**

**தீர்வு**

A = {1, 2, 3} B = {2, 3, 5, 7}

A x B={1,2,3}x{2,3,5,7}={(1,2),(1,3),(1,5),(1,7),(2,2),(2,3),(2,5),(2,7),(3,2),(3,3),(3,5),(3,7)}

B x A ={2,3,5,7}x{1,2,3}={(2,1),(2,2),(2,3),(3,1),(3,2),(3,3),(5,1),(5,2),(5,3),(7,1),(7,2),(7,3)}

**9. B x A={(-2, 3), (-2, 4), (0,3), (0,4), (3,3), (3,4)} எனில், A மற்றும் B ஆகியவற்றைக் காண்க.**

**தீர்வு**

A = {3,4} B = {-2, 0,3}

**10. A={3,4,7,8} மற்றும் B = {1,7,10} எனில் கீழ் உள்ள கணங்களில் எவை A –லிருந்து – B க்கு ஆன உறவைக் குறிக்கின்றது ?**

**(i) $R_1$ = {(3,7), (4,7), (7,10), (8,1)} (ii) $R_2$= {(3,1), (4,12)}**

**(iii) $R_3$ = {(3,7), (4,10), (7, 7), (7, 8), (8, 11), (8, 7), (8,10)}**

**<u>தீர்வு</u>**

A x B = {(3,1),(3,7),(3,10),(4,1),(4,7),(4,10),(7,1), (7,7), (7,10), (8,1), (8,7), (8,10) }


(i) $R_1 \subseteq A \times B$ என்பதைக் காணலாம். எனவே, $R_1$ என்பது A –லிருந்து B–க்கு ஆன உறவு ஆகும்.

(ii) இங்கு, (4, 12) $\epsilon$ $R_2$ , ஆனால் (4,12) $\notin$A x B. எனவே, $R_2$ ஆனது A –லிருந்து B–க்கு ஆன உறவு இல்லை.

(iii) இங்கு, (7, 8) $\epsilon$ $R_3$ , ஆனால் (7,8) $\notin$A x B. எனவே, $R_3$ ஆனது A –லிருந்து B–க்கு ஆன உறவு இல்லை.

**11. படத்தில் காட்டப்பட்டுள்ள (படம்) அம்புக்குறி படமானது P மற்றும்Q கணங்களுக்கான உறவைக் குறிக்கின்றது. இந்த உறவை (i) கணகட்டமைப்பு முறை (ii) பட்டியல் முறைகளில் எழுதுக. (iii) R–ன் மதிப்பகம் மற்றும் வீச்சகத்தைக்காண்க.**

**<u>தீர்வு</u>**




(i) R யின் கணகட்டமைப்பு முறை = {(x,y) | y = x – 2, x ∈ P, y ∈ Q}

(ii) R யின் பட்டியல் முறை = {(5,3), (6,4), (7,5)}

(iii) R யின் மதிப்பகம் = {5,6,7} மற்றும் R யின் வீச்சகம் = {3,4,5}

**12. A = {1,2,3,7} மற்றும் B= {3,0,-1,7} எனில், பின்வருவனவற்றில் எவை A –லிருந்து B–க்கான உறவுகளாகும் ? (i) $R_1$ = {(2,1),(7,1)} (ii) $R_2$ = {(-1,1)} (iii) $R_3$ = {(2,-1), (7,7), (1,3)} (iv)$R_4$={(7,-1),(0,3), (3,3),(0,7)}**

**<u>தீர்வு</u>**

A = {1,2,3,7} and B = {3,0,-1,7}

∴ A x B ={(1,3),(1,0), (1,-1), (1,7), (2,3), (2,0), (2,-1), (2,7),
(3,3), (3,0), (3,-1), (3,7), (7,3), (7,0), (7,-1), (7,7)}

i) $R_1$ = {(2,1), (7,1)}

(2,1) ∈ $R_1$ ஆனால் (2, 1) ∉ A x B, ∴ $R_1$ ஒரு உறவு அல்ல.

ii) $R_2$ = {(-1,1)}

(-1,1) ∈ $R_2$ ஆனால் (-1, 1) ∉ A x B, ∴ $R_2$ ஒரு உறவு அல்ல.

iii) $R_3$ = {(2,-1), (7,7), (1,3)}

$R_3 \subseteq A \times B$

∴ $R_3$ ஒரு உறவு.

iv) $R_4$ = {(7,-1), (0,3), (3,3), (0,7)}

(0,3), (0,7) ∈ $R_4$ என்பது A x B ல் உறுப்பு அல்ல.

∴ $R_4$ ஒரு உறவு அல்ல

**13. A={1,2,3,4,...,45}மற்றும் R என்ற உறவு “A – யின் மீது, ஓர் எண்ணின் வர்க்கம்” என வரையறுக்கப்பட்டால் R –ஐ A x A – யின் உட்கணமாக எழுதுக. மேலும் R-க்கான மதிப்பகத்தையும், வீச்சகத்தையும் காண்க.**

**<u>தீர்வு</u>** A = {1,2,3,….,45} , R = {(1,1), (2,4), (3,9), (4,16), (5,25), (6,36)}

R ஆனது A x A யின் உட்கணம் என்பது தெளிவாகிறது.

∴ மதிப்பகம் = {1,2,3,4,5,6} வீச்சகம் = {1,4,9,16,25,36}

**14. R என்ற ஒரு உறவு {(x, y) / y = x + 3 , x ∈{0,1, 2,3,4,5} எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பகத்தையும் வீச்சகத்தையும் கண்டறிக.**

**<u>தீர்வு</u>** x = {0,1,2,3,4,5}

f(x) = y = x +3 f(0) = 3; f(1) = 4 ; f(2) = 5 ; f(3) = 6 ; f(4) = 7 ; f(5) = 8

∴R = {(0,3),(1,4),(2,5),(3,6),(4,7),(5,8)}

மதிப்பகம் = {0,1,2,3,4,5} வீச்சகம் = {3,4,5,6,7,8}

## 5 MARKS

**1.** $\mathbf{A = \{ x \in \mathbb{N} \mid 1 < x < 4\}, B = \{x \in \mathbb{W} \mid 0 \le x < 2\}}$ **மற்றும்** $\mathbf{C = \{ x \in \mathbb{N} \mid x < 3\}}$ **என்க.**

$\mathbf{A \times ( B \cup C) = (A \times B) \cup (A \times C)}$ **காண்க.**

**<u>தீர்வு</u>** $A = \{ x \in \mathbb{N} \mid 1 < x < 4\} = \{2, 3\}$,

$B = \{x \in \mathbb{W} \mid 0 \le x < 2\} = \{0, 1\}$,

$C = \{ x \in \mathbb{N} \mid x < 3\} = \{1, 2\}$

(i) $A \times ( B \cup C) = (A \times B) \cup (A \times C)$

B∪C = {0,1 } ∪{ 1 ,2} = { 0, 1, 2} → (1)

A x ( B ∪ C) = {2, 3} x {0, 1, 2} = {(2,0), (2,1), (2,2), (3,0), (3,1), (3,2)} → (2)

A x B = {2, 3} x {0, 1} = {(2,0), (2,1), (3, 0), (3, 1)} → (3)

A x C = {2, 3} x {1, 2} = {(2,1), (2, 2), (3, 1), (3, 2)} → (4)

(A x B ) ∪ (A x C ) = { (2,0), (2,1), (3, 0), (3,1) } ∪ {(2,1), (2, 2), (3, 1), (3, 2)}

= { (2,0), (2,1), (2, 2), (3,0) , (3, 1), (3, 2)} → (5)

(2) = (5) ∴ $A \times ( B \cup C) = (A \times B) \cup (A \times C)$ என்பது சரிபார்க்கப்பட்டது

**2.** $\mathbf{A = \{ x \in \mathbb{N} \mid 1 < x < 4\}, B = \{x \in \mathbb{W} \mid 0 \le x < 2\}}$ **மற்றும்** $\mathbf{C = \{ x \in \mathbb{N} \mid x < 3\}}$ **என்க.**

$\mathbf{A \times ( B \cap C) = (A \times B) \cap (A \times C)}$ **காண்க.**

**<u>தீர்வு</u>** $A = \{ x \in \mathbb{N} \mid 1 < x < 4\} = \{2, 3\}$,

$B = \{x \in \mathbb{W} \mid 0 \le x < 2\} = \{0, 1\}$,

$C = \{ x \in \mathbb{N} \mid x < 3\} = \{1, 2\}$

$A \times (B \cap C) = (A \times B) \cap (A \times C)$

$B \cap C = \{0,1\} \cap \{1, 2\} = \{1\}$ → (1)

$A \times (B \cap C) = \{2,3\} \cap \{1\} = \{(2,1), (3,1)\}$ → (2)

$A \times B = \{2, 3\} \times \{0,1\} = \{(2,0), (2,1), (3,0), (3,1)\}$ → (3)

$A \times C = \{2, 3\} \times \{1,2\} = \{(2,1), (2,2), (3,1), (3,2)\}$ → (4)

$(A \times B) \cap (A \times C) = \{(2,0), (2,1), (3,0), (3,1)\} \cap \{(2,1), (2,2), (3,1), (3,2)\}$

$= \{(2,1), (3,1)\}$ → (5)

(2) = (5) ∴ $A \times (B \cap C) = (A \times B) \cap (A \times C)$ என்பது சரிபார்க்கப்பட்டது

**3. A = {5,6}, B={4,5,6}, C={5,6,7} எனில் A x A = (B x B) ∩ (C x C) எனக் காட்டுக.**

<u>**தீர்வு**</u> A = {5,6}, B = {4,5,6}, C = {5,6,7}

LHS : A x A = {5,6} x {5,6}

= {(5,5), (5,6), (6,5), (6,6)} ---------- (1)

RHS : B x B = {4,5,6} x {4,5,6}

= {(4,4), (4,5), (4,6), (5,4), (5,5), (5,6), (6,4), (6,5), (6,6)}

C x C = {5,6,7} x {5,6,7}

= {(5,5), (5,6), (5,7), (6,5), (6,6), (6,7), (7,5), (7,6), (7,7)}

∴ (B x B) ∩ (C x C) = { (5,5), (5,6), (6,5), (6,6)} ---------- (2)

∴ (1) = (2). LHS = RHS.

**4. A = {1, 2, 3}, B = {2, 3, 5}, C={3,4} மற்றும் D = {1, 3, 5}, எனில்**

**$(A \cap C) \times (B \cap D) = (A \times B) \cap (C \times D)$ என்பது உண்மையா என சோதிக்கவும்.**

<u>**தீர்வு**</u> $A \cap C = \{3\}$ , $B \cap D = \{3, 5\}$

$(A \cap C) \times (B \cap D) = \{3\} \times \{3, 5\} = \{(3, 3), (3, 5)\}$ → (1)

A x B = {1, 2, 3} x {2, 3, 5} ={(1, 2),(1, 3), (1,5), (2, 2), (2, 3),(2, 5),(3, 2), (3, 3),(3, 5)}

C x D = {3, 4} x {1, 3, 5} = {(3, 1), (3, 3), (3, 5), (4, 1), (4, 3), (4, 5)}

(A x B) ∩ (C x D) = {(3, 3), (3, 5)} → (2)

(1) = (2). ∴$(A \cap C) \times (B \cap D) = (A \times B) \cap (C \times D)$ என்பது சரிபார்க்கப்பட்டது

**5. A = {x ϵ W / x < 2}, B = {x ϵ N / 1< x ≤ 4} மற்றும் C = {3,5} எனில், கீழேக் கொடுக்கப்பட்டுள்ள சமன்பாடுகளைச் சரிபார்க்க.**

**(i) A x (B∪C)= (A x B) ∪ (A x C) (ii) A x (B∩C) = (A x B) ∩ (A x C)**

(iii) **$(A \cup B) \times C = (A \times C) \cup (B \times C)$**

<u>**தீர்வு**</u>

**(i) A x (B∪C)= (A x B) ∪ (A x C)**

A = {x ϵ W / x < 2} ⇒ A = {0,1}

$B = \{x \in N / 1< x \leq 4\} \Rightarrow B = \{2, 3, 4\}$

$C = \{ 3, 5\}$

$A \times (B\cup C)= (A \times B) \cup (A \times C)$ .

$B\cup C = \{2, 3, 4, 5\}$

$A \times (B\cup C) = \{(0,2), (0,3), (0,4), (0,5), (1,2), (1,3), (1,4), (1,5)\}$ ------- (1)

$A \times B = \{(0,2), (0,3), (0,4), (1,2), (1,3), (1,4)\}$

$A \times C = \{(0,3), (0,5), (1,3), (1,5)\}$

$\therefore (A \times B) \cup (A \times C) = \{(0,2), (0,3), (0,4), (0,5), (1,2), (1,3), (1,4), (1,5)\}$ ------- (2)

$\therefore$ (1) = (2). என்பது சரிபார்க்கப்பட்டது

**(ii)** **$A \times (B\cap C) = (A \times B) \cap (A \times C)$**

$A = \{x \in W / x < 2\} \Rightarrow A = \{0,1\}$

$B = \{x \in N / 1\leq x \leq 4\} \Rightarrow B = \{2, 3, 4\}$

$C = \{ 3, 5\}$

$A \times (B\cap C) = (A \times B) \cap (A \times C)$

$B\cap C = \{3\}$

$A \times (B\cap C) = \{(0,3), (1,3)\}$ ------- (1)

$A \times B = \{(0,2), (0,3), (0,4), (1,2), (1,3), (1,4)\}$

$A \times C = \{(0,3), (0,5), (1,3), (1,5)\}$

$\therefore (A \times B) \cap (A \times C) = \{(0,3), (1,3)\}$ ------- (2)

$\therefore$ (1) = (2). என்பது சரிபார்க்கப்பட்டது

**(iii)** **$(A\cup B) \times C = (A \times C) \cup (B \times C)$**

$A = \{x \in W / x < 2\} \Rightarrow A = \{0,1\}$

$B = \{x \in N / 1\leq x \leq 4\} \Rightarrow B = \{2, 3, 4\}$

$C = \{ 3, 5\}$

$(A\cup B) \times C = (A \times C) \cup (B \times C)$

$A \cup B = \{ 0, 1, 2, 3, 4\}$

$\therefore (A \cup B) \times C = \{ 0, 1, 2, 3, 4\} \times \{3,5\}$

$= \{ (0,3), (0,5), (1,3), (1,5), (2,3), (2,5), (3,3), (3,5) , (4,3), (4,5)\}$….(1)

$A \times C = \{(0,3), (0,5), (1,3), (1,5)\}$

$B \times C = \{(2,3), (2,5), (3,3), (3,5), (4,3), (4,5)\}$

$\therefore (A \times C)\cup(B \times C)=\{(0,3), (0,5), (1,3), (1,5), (2,3), (2,5), (3,3), (3,5), (4,3), (4,5)\}$….(2)

$\therefore$ (1) = (2) LHS = RHS.

**6. A என்பது 8−ஐ விடக் குறைவான இயல் எண்களின் கணம், B என்பது 8−ஐ விடக் குறைவான பகா எண்களின் கணம் மற்றும் C என்பது இரட்டைப்படை பகா எண்களின் கணம் எனில், கீழ்கண்டவற்றைச் சரிபார்க்க $(A\cap B) \times C=(A \times C) \cap (B \times C)$**

**தீர்வு** A = {1, 2, 3, 4, 5, 6, 7} B = {2, 3, 5, 7} C = {2}

நிரூபிக்க: (A∩ $B$) $\times C$=(A x C) ∩(B x C)

A∩ $B$ = {2, 3, 5, 7}

∴ (A∩ $B$) x C = {(2,2), (3,2), (5,2), (7,2)} ……………(1)

A x C = {(1,2), (2,2), (3,2), (4,2), (5,2), (6,2), (7,2)}

B x C = {(2,2), (3,2), (5,2), (7,2)}

(A x C) ∩(B x C) ={(2,2), (3,2), (5,2), (7,2)} ……… (2)

∴ (1) மற்றும் (2) லிருந்து , LHS = RHS.

**7. A என்பது 8–ஐ விடக் குறைவான இயல் எண்களின் கணம், B என்பது 8–ஐ விடக் குறைவான பகா எண்களின் கணம் மற்றும் C என்பது இரட்டைப்படை பகா எண்களின் கணம் எனில், கீழ்கண்டவற்றைச் சரிபார்க்க. A x (B – C)=(A x B)–(A x C)**

**தீர்வு** A = {1, 2, 3, 4, 5, 6, 7} B = {2, 3, 5, 7} C = {2}

நிரூபிக்க :A x (B – C)=(A x B) – (A x C)

A = {1, 2, 3, 4, 5, 6, 7} B = {2, 3, 5, 7} C = {2}

B – C = {2, 3, 5, 7} – {2} = {3, 5, 7} → (1)

A x (B - C) = {1, 2, 3, 4, 5, 6, 7} x {3, 5, 7}

={(1,3),(1,5),(1,7),(2,3),(2,5),(2,7),(3,3),(3,5),(3,7),(4,3),(4,5), (4,7),
(5,3), (5,5), (5,7), (6,3), (6,5), (6,7), (7,3), (7,5), (7,7)} → (2)

A x B = {1,2,3,4,5,6,7} x {2,3,5,7}

= {(1,2),(1,3),(1,5),(1,7), (2,2),(2,3),(2,5),(2,7),(3,2),(3,3),(3,5),(3,7),
(4,2),(4,3),(4,5),(4,7),(5,2),(5,3),(5,5),(5,7),(6,2),(6,3),(6,5),(6,7),(7,2)
(7,3),(7,5),(7,7)} → (3)

A x C = {1, 2, 3, 4, 5, 6, 7}x{2} = {(1,2),(2,2),(3,2),(4,2),(5,2),(6,2),(7,2)} → (4)

(A x B) – (A x C) = {(1,3),(1,5),(1,7),(2,3),(2,5),(2,7),(3,3),(3,5),(3,7),(4,3),
(4,5),(4,7),(5,3),(5,5), (5,7),(6,3),(6,5),(6,7),(7,3),(7,5),(7,7)} → (5)

(2) = (5) . ∴ A X (B – C) = (A X B) – (A X C) என்பது சரிபார்க்கப்பட்டது


**8. கொடுக்கப்பட்ட உறவுகள் ஒவ்வொன்றையும் (1) அம்புக்குறி படம் (2) வரைபடம் (3) பட்டியல் முறையில் குறிக்க. (i) {(x,y)|x = 2y, x ∈ {2,3,4,5}, y ∈ {1,2,3,4} (ii) {(x,y)|y=x+3, x,y ஆகியவை இயல் எண்கள் < 10}**


**தீர்வு** **(i)** {(x,y)|x = 2y, x ∈ {2,3,4,5}, y ∈ {1,2,3,4}

x = 2y

f(x) = y = $\frac{x}{2}$ ; f(2) = $\frac{2}{2}$ = 1 ; f(3) = $\frac{3}{2}$ ; f(4) = $\frac{4}{2} = 2$ ; f(5) = $\frac{5}{2}$

(1)அம்புக்குறி படம் (2) வரைபடம் (3) வரிசை சோடி









{ (2,1 ),(4,2) }

**(ii) {(x,y)|y=x+3, x,y ஆகியவை இயல் எண்கள் < 10}**

$f(x) = y = x + 3$ ; $f(2) = 5$ ; $f(3) = 6$ ; $f(4) = 7$ ; $f(5) = 8$

(1)அம்புக்குறி படம் (2) வரைபடம் (3) வரிசை சோடி




**{(2,5),(3,6),(4,7), (5,8)}**


**9.** **ஒரு நிறுவனத்தில் உதவியாளர்கள்(A), எழுத்தர்கள் (C), மேலாளர்கள் (M) மற்றும் நிர்வாகிகள் (E) ஆகிய நான்கு பிரிவுகளில் பணியாளர்கள் உள்ளனர். A, C, M மற்றும் E பிரிவு பணியாளர்களுக்கு ஊதியங்கள் முறையே ₹10,000, ₹ 25,000, ₹50,000 மற்றும் ₹1,00,000 ஆகும். $A_1$, $A_2$, $A_3$, $A_4$ மற்றும் $A_5$ ஆகியோர் உதவியாளர்கள் $C_1$, $C_2$, $C_3$, $C_4$ ஆகியோர் எழுத்தர்கள்; $M_1$, $M_2$, $M_3$ ஆகியோர் மேலாளர்கள் மற்றும் $E_1$, $E_2$ஆகியோர் நிவாகிகள் ஆவர். xRy என்ற உறவில் x என்பது y என்பவருக்குக் கொடுக்கப்பட்ட ஊதிய எனில் R –எ.ற உறவை, வரிசைச் சோடிகள் மூலமாகவும் அம்புக்குறி படம் மூலமாகவும் குறிப்பிடுக.**

**தீர்வு**

a) **வரிசை சோடி**:

{(10000, $A_1$), (10000, $A_2$), (10000, $A_3$), (10000, $A_4$), (10000, $A_5$) (25000, $C_1$), (25000, $C_2$), (25000, $C_3$), (25000, $C_4$), (50000, $M_1$), (50000, $M_2$), (50000, $M_3$) (100000, $E_1$), (100000, $E_2$)}

b) **அம்புக்குறி படம்**



# இயல் - 2

## எண்களும் தொடர்வரிசைகளும்

### 1 MARKS

1. யூக்ளிடின் வகுத்தல் துணைத் தேற்றத்தின் படி a மற்றும் b என்ற மிகை முழுக்களுக்கு தனித்த மிகை முழுக்கள் q மற்றும் r, a = bq + r என்றவாறு அமையுமானால் இங்கு r ஆனது.
   (1) $0 < r < b$ (2) $1 < r < b$ (3) $0 < r \leq b$ **(4) $0 \leq r < b$**
2. யூக்ளிடின் வகுத்தல் துணைத் தேற்றத்தைப் பயன்படுத்தி, எந்த மிகை முழுவின் கனத்தையும் 9 ஆல் வகுக்கும் போது கிடைக்கம் மீதிகள்
   (1) 1,3,5 (2) 1,4,8 (3) 0,1,3 **(4) 0,1,8**
3. 65 மற்றும் 117–யின் மீ.பொ.வ–வை 65m-117 என்ற வடிவில் எழுதும்போது m–ன் மதிப்பு
   (1) 1 (2) 3 **(3) 2** (4) 4
4. 1729–ஐ பகாக் காரணிப்படுத்தும்போது, அந்தப் பகா எண்களின் அடுக்குகளின் கூடுதல்
   (1) 4 **(2)3** (3) 2 (4) 1
5. 1 முதல் 10 வரையுள்ள (இரண்டு எண்களும் உட்பட) அனைத்து எண்களாலும் வகுபடும் மிகச்சிறிய எண் (1) 2025 **(2)2520** (3) 5025 (4) 5220
6. $F_1 = 1$, $F_2 = 3$ மற்றும் $F_n = F_{n-1} + F_{n-2}$ எனக் கொடுக்கப்படின் $F_5$ ஆனது
   (1) 8 **(2) 11** (3) 3 (4) 5
7. ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் முதல் உறுப்பு 1 மற்றும் பொது வித்தியாசம் 4. இந்தக் கூட்டுத் தொடர்வரிசையின் எத்தனை உறுப்புகளைக் கூட்டினால் அதன் கூடுதல் 120 கிடைக்கம் ?
   **(1) 4551** (2)10091 (3) 7881 (4) 13531
8. ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் 6–வது உறுப்பின் 6 மடங்கும், 7–வது உறுப்பின் 7 மடங்கும் சமம் எனில், அக்கூட்டுத்தொடர்வரிசையின் 13–வது உறுப்பு
   **(1) 0** (2) 6 (3) 7 (4) 13
9. ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் 31 உறுப்புகள் உள்ளன. அதன் 16–வது உறுப்பு m எனில், அந்தக் கூட்டுத்தொடர்வரிசையில் உள்ள எல்லா உறுப்புகளின் கூடுதல்.
   (1)16m (2) 62m (3) $\frac{31}{2}$ m **(4) 31 m**

### 2 MARKS

**1. $a^b \times b^a = 800$ என்றவாறு அமையும் இரு மிகை முழுக்கள் a மற்றும் b ஐ காண்க.**

**தீர்வு**

$800 = a^b \times b^a$


$800 = 2 \times 2 \times 2 \times 2 \times 2 \times 5 \times 5$

$a^b \times b^a = 2^5 \times 5^2$

$\therefore a = 2$ , $b = 5$ (அ) $a = 5$, $b = 2$

**2. $13824 = 2^a \times 3^b$ எனில் a மற்றும் b யின் மதிப்பு காண்க.**

**தீர்வு**




$\Rightarrow 13824 = 2^9 \times 3^3$

$2^a \times 3^b = 2^9 \times 3^3$

$\therefore a = 9, b = 3$

3. $p_1^{x_1} \times p_2^{x_2} \times p_3^{x_3+} \times p_4^{x_4}$ **= 113400 இங்கு, $P_1, P_2, P_3, P_4$ என்பன ஏறு வரிசையில் அமைந்த பகா எண்கள் மற்றும் $x_1, x_2, x_3, x_4$ என்பன முழுக்கள் எனில் $P_1, P_2, P_3, P_4$ மற்றும் $x_1, x_2, x_3, x_4$ ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க.**

| | |
|---|---|
| 2 | 113400 |
| 2 | 56700 |
| 2 | 28350 |
| 3 | 14175 |
| 3 | 4725 |
| 3 | 1575 |
| 3 | 525 |
| 5 | 175 |
| 5 | 35 |
| 7 | 7 |
| | 1 |

**<u>தீர்வு</u>** $113400 = 2^3 x 3^4 x 5^2 x 7^1$

$\therefore P_1 = 2, P_2 = 3, P_3 = 5, P_4 = 7$

$x_1 = 3, x_2 = 4, x_3 = 2, x_4 = 1$

4. **முதல் உறுப்பு 20 ஆகவும் பொது வித்தியாசம் 8 ஆகவும் கொண்ட கூட்டுத் தொடர்வரிசையை எழுதவும்.**

**<u>தீர்வு</u>**

முதல் உறுப்பு a = 20; பொது வித்தியாசம் d = 8

கூட்டுத் தொடர்வரிசையின் பொது வடிவம் a, a+d, a+3d,…

இந்த நிகழ்வில் நாம் பெறுவது 20, 20 + 8, 20+ 2(8), 20 + 3(8),...

எனவே, தேவையான கூட்டுத் தொடர்சரிவை 20, 28, 36, 44, ... ஆகும்.

5. **3,6,9,12...111 என்ற கூட்டுத் தொடர்வரிசையி ல் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கையைக் காண்க**

**<u>தீர்வு</u>**

முதல் உறுப்பு a = 3 மற்றும் பொது வித்தியாசம் d = 6 – 3 = 3, கடைசி உறுப்பு, $l$ = 111

$n = \left(\frac{l-a}{d}\right) + 1$ என நாம் அறிவோம்.

$n = \left(\frac{111-3}{3}\right) + 1 = 37$

எனவே, இந்த கூட்டுத்தொடர் வரிசையில் 37 உறுப்புகள் உள்ளன.

6. **கீழே கொடுக்கப்பட்டுள்ள முதல் உறுப்பு a மற்றும் பொது வித்தியாசம் dக்குக் கூட்டுத் தொடர் வரிசைகளைக் காண்க. (i) a = 5, d= 6 (ii) a =7, d = -5 (iii) a = $\frac{3}{4}$, d= $\frac{1}{2}$**

**<u>தீர்வு</u>**

(i) a = 5, d = 6 A.P –ன் வடிவம் ⇒ a, a + d, a + 2d, … ⇒5, 11, 17, 23,…

(ii) a = 7, d = -5 A.P –ன் வடிவம் ⇒ a, a + d, a + 2d, … ⇒7, 2, -3, -8,…

(iii) $a = \frac{3}{4}, d = \frac{1}{2}$ A.P –ன் வடிவம் ⇒ a, a + d, a + 2d, … ⇒ $\frac{3}{4}, \frac{5}{4}, \frac{7}{4}, \frac{9}{4}, \ldots$

7. **–11,–15,–19,... என்ற கூட்டுத் தொடரின் 19ஆவது உறுப்பைக் காண்க ?**

**<u>தீர்வு</u>** a = -11; d = -15+11 = -4; n=19

கூட்டுத் தொடரின் n–வது உறுப்பு

$t_n = a+(n-1)d$

$t_{19} = -11 + 18(-4)$

$= -11-72$

$t_{19} = -83$

**8. 16,11,6,... என்ற கூட்டுத் தொடரின் –54 என்பது எத்தனையாவது உறுப்பு ?**

**தீர்வு** $n = \frac{l-a}{d} + 1$

$a = 16; d = 11-16= -5; l = -54$

$n = \frac{-54-16}{-5} + 1$

$n = \frac{-70}{-5} + 1$

$n = 14 + 1$

$n = 15$

**9. 3 + k, 18 – k, 5k + 1 என்பவை ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் உள்ளன எனில், k–யின் மதிப்புக் காண்க.**

**தீர்வு** 3 + k, 18 – k, 5k + 1 என்பவை ஒரு கூட்டுத் தொடர்வரிசை

$t_2 - t_1 = t_3 - t_2$

$(18 - k) - (3 + k) = (5k + 1) - (18 - k)$

$15 - 2k = 6k - 17$

$-2k - 6k = -17 - 15$

$-8k = -32$

$k = 4$

10. **ஒரு திரையரங்கின் முதல் வரிசையில் 20 இருக்கைகளும் மொத்தம் 30 வரிசைகளும் உள்ளன. அடுத்தடுத்த ஒவ்வொரு வரிசையிலும் அதற்கு முந்தைய வரிசையை விட இரண்டு இருக்கைகள் கூடுதலாக உள்ளன. கடைசி வரிசையில் எத்தனை இருக்கைகள் இருக்கும் ?**

**தீர்வு** முதல் உறுப்பு a = 20

பொது வித்தியாசம் d = 2

கடைசி வரிசையில் உள்ள இருக்கைகளின் எண்ணிக்கை = $t_n = a + (n-1)d$

$t_{30} = a + 29d$

$= 20 + 29(2)$

$= 20 + 58 = 78$

# இயல் - 3

# இயற்கணிதம்

## 1 MARKS

**1.** மூன்று மாறிகளில் அமைந்த மூன்று நேரிய சமன்பாடுகளின் தொகுப்பிற்கு தீர்வுகள் இல்லையெனில், அத்தொகுப்பில் உள்ள தளங்கள்

(1) ஒரே ஒரு புள்ளியில் வெட்டுகின்றன **(2) ஒன்றையொன்று வெட்டாது**

(3) ஒரே ஒரு கோட்டில் வெட்டுகின்றன (4) ஒன்றின் மீது ஒன்று பொருந்தும்

2. x+y – 3z = -6, -7y + 7z = 7, 3z=9 என்ற தொகுப்பின் தீர்வு

(1) x=-1,y=2,z=3 (2)x=1,y=-2,z=3 **(3)x=1,y=2, z = 3** (4) x = -1, y = -2, z = 3

**3.** $x^2 - 2x - 24$ மற்றும் $x^2 - kx - 6$ –யின் மீ.பொ.வ. (x – 6) எனில், k–யின் மதிப்பு

(1) 8 (2) 6 **(3) 5** (4) 3

**4.** $\frac{3y-3}{y} \div \frac{7y-7}{3y^2}$ என்பது

(1) $\frac{9y^3}{(21y-21)}$ **(2) $\frac{9y}{7}$** (3) $\frac{21y^2-42y+21}{3y^3}$ (4) $\frac{7(y^2-2y+1)}{y^2}$

**5.** கீழ்க்கண்டவற்றுள் எது $y^2 + \frac{1}{y^2}$ –க்கு சமம் இல்லை

(1) $\left[y - \frac{1}{y}\right]^2 + 2$ (2) $\left[y + \frac{1}{y}\right]^2 - 2$ **(3) $\left[y + \frac{1}{y}\right]^2$** (4) $\frac{y^4+1}{y^2}$

6. $\frac{x}{x^2-25} - \frac{8}{x^2+6x+5}$ – ன் சுருங்கிய வடிவம்

(1) $\frac{x^2-7x+40}{(x-5)(x+5)}$ (2) $\frac{x^2+7x+40}{(x-5)(x+5)(x+1)}$ (3) $\frac{x^2+10}{(x^2-25)(x+1)}$ **(4) $\frac{x^2-7x+40}{(x^2-25)(x+1)}$**

**7.** $\frac{256\, x^8y^4z^{10}}{25\, x^6y^6z^6}$–ன் வர்க்கமூலம்

(1) $\frac{16}{5}\left|\frac{x^2z^4}{y^2}\right|$ **(2) $\frac{16}{5}\left|\frac{xz^2}{y}\right|$** (3) 16 $\left|\frac{y^2}{x^2z^4}\right|$ (4) $\frac{16}{5}\left|\frac{y}{xz^2}\right|$

**8.** $x^2 + 64$ முழு வர்க்கமாக மாற்ற அதனுடன் பின்வருவனவற்றுள் எதைக் கூட்ட வேண்டும் ?

(1) $4x^2$ (2) $8x^2$ (3) $-8x^2$ **(4) $16x^2$**

**9.** $(2x - 1)^2 = 9$–யின் தீர்வு

**(1) –1, 2** (2) –1 (3) 2 (4) இதில் எதுவும் இல்லை

**10.** $4x^4 - 24x^3 + 76x^2 + ax + b$ ஒரு முழு வர்க்கம் எனில் a மற்றும் b –யின் மதிப்பு

**(1) -120, 100** (2) 100,120 (3) 10, 12 (4) 12, 10

**11.** $q^2x^2 + p^2x + r^2 = 0$ என்ற சமன்பாட்டின் மூலங்களின் வர்க்கங்கள், $qx^2 + px + r = 0$ என்ற சமன்பாட்டின் மூலங்கள் எனில் q,p,r என்பன.

(1) கூட்டுத் தொடர்வரிசை மற்றும் பெருக்குத் தொடர்வரிசை இரண்டிலும் உள்ளன

(2) ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் உள்ளன

(3) **ஒரு பெருக்குத் தொடர்வரிசையில் உள்ளன.** (4) இதில் எதுவும் இல்லை

**12.** ஒரு நேரிய பல்லுறுப்புக் கோவையின் வரைபடம் ஒரு

(1) பரவளையம் (2) அதிபரவளையம் (3) வட்டம் **(4) நேர்கோடு**

**13.** $x^2 + 4x + 4$ என்ற இருபடி பல்லுறுப்புக் கோவை X அச்சோடு வெட்டும் புள்ளிகளின் எண்ணிக்கை

(1) 0 அல்லது 1 (2) 0 **(3) 1** (4) 2

## 2 MARKS

**1. மீ.பொ.ம காண்க : $4x^2y, 8x^3y^2$**

**தீர்வு**

$4x^2y = 2^2x^2y$

$8x^3y^2 = 2^3x^3y^2$

∴ மீ.பொ.ம = $2^3x^3y^2 = 8x^3y^2$

**2. மீ.பொ.ம காண்க: $-9a^3b^2, 12a^2b^2c$**

**தீர்வு**

$-9a^3b^2 = (-1)(3)^2 a^3b^2$

$12a^2b^2c = 2^2 \times 3 \times a^2 \times b^2 \times c$

∴ மீ.பொ.ம = $(-1) \times 2^2 \times 3^2 \times a^3 \times b^2 \times c = -36a^3b^2 c$

**3. மீ.பொ.ம காண்க : $16m, 12m^2n^2, 8n^2$**

**தீர்வு**

$16m = 2^4 \text{ x } m$

$12m^2n^2 = 2^2 \text{ x } 3\text{x } m^2 \text{ x} n^2$

$8n^2 = 2^3 \text{ x } n^2$

∴ மீ.பொ.ம = $2^4 \text{ x } 3 \text{ x } m^2 \text{ x } n^2 = 48\, m^2\, n^2$

**4. மீ.பொ.ம காண்க : $p^2 – 3p + 2, p^2 – 4$**

**தீர்வு**

$p^2 – 3p + 2 = (p -1) (p – 2)$

$p^2 – 4 = (p + 2) (p – 2)$

∴ மீ.பொ.ம = $(p -1) (p + 2) (p – 2)$

**5. மீ.பொ.ம காண்க : $2x^2 – 5x – 3, 4x^2 – 36$**

**தீர்வு**

$2x^2 – 5x – 3 = (x - 3) (2x + 1)$

$4x^2 – 36 = 4 (x^2 – 9 ) = 4 (x^2 – 3^2 ) = 4 (x + 3) ( x – 3)$

∴ மீ.பொ.ம = $4(x - 3) ( x + 3) (2x + 1)$

**6. மீ.பொ.ம காண்க : $(2x^2 – 3xy)^2, (4x – 6y)^3, 8x^3 – 27y^3$**

**தீர்வு**

$(2x^2 – 3xy)^2 = \{x(2x – 3y)\}^2 = x^2(2x – 3y)^2$

$(4x – 6y)^3 = 2^3 (2x – 3y)^3$

$8x^3 – 27y^3 = (2x)^3 – (3y)^3 = (2x – 3y) (4x^2 + 6xy + 9y^2)$

∴ மீ.பொ.ம = $2^3 \times x^2 \times (2x – 3y)^3 (4x^2 + 6xy + 9y^2)$

$= 8x^2(2x – 3y)^3 (4x^2 + 6xy + 9y^2)$

**7. மீ.பொ.ம காண்க : $8x^4y^2, 48x^2y^4$**

**<u>தீர்வு</u>**

$8x^4y^2 = 2^3\ x^4y^2$

$48x^2y^4 = 2^4 \times 3\ x^2y^4$

மீ.பொ.ம = $2^4 \times 3\ x^4y^4$

மீ.பொ.ம $(8x^4y^2, 14x^2y^4) = 48\ x^4y^4$

**8. மீ.பொ.ம காண்க : $5x - 10, 5x^2 - 20$**

**<u>தீர்வு</u>**

$5x - 10 = 5(x - 2)$

$5x^2 - 20 = 5(x^2 - 4) = 5(x + 2)(x - 2)$

எனவே, மீ.பொ.ம $[(5x - 10), (5x^2 - 20)] = 5(x + 2)(x - 2)$

**9. மீ.பொ.ம காண்க : $x^4 - 1, x^2 - 2x + 1$**

**<u>தீர்வு</u>**

$x^4 - 1 = (x^2)^2 - 1 = (x^2 + 1)(x^2 - 1) = (x^2 + 1)(x + 1)(x - 1)$

$x^2 - 2x + 1 = (x - 1)^2$

எனவே, மீ.பொ.ம $[x^4 - 1, x^2 - 2x + 1] = (x^2 + 1)(x + 1)(x - 1)^2$

**10. மீ.பொ.ம காண்க : $x^3 - 27, (x - 3)^2, (x^2 - 9)$**

**<u>தீர்வு</u>**

$x^3 - 27 = x^3 - 3^3 = (x - 3)(x^2+3x+3^2) = (x - 3)(x^2 + 3x + 9)$

$(x - 3)^2 = (x - 3)^2$

$(x^2 - 9) = x^2 - 3^2 = (x + 3)(x - 3)$

எனவே, மீ.பொ.ம. = $(x - 3)^2 (x + 3)(x^2 + 3x + 9)$

**11. விகிதமுறு கோவைகயை எளிய வடிவில் சுருக்குக $\frac{x-3}{x^2-9}$**

**<u>தீர்வு</u>**

$$\frac{x-3}{x^2-9} = \frac{x-3}{(x+3)(x-3)} = \frac{1}{(x+3)}$$

**12. விகிதமுறு கோவைகயை எளிய வடிவில் சுருக்குக $\frac{x^2-16}{x^2+8x+16}$**

**<u>தீர்வு</u>**

$$\frac{x^2-16}{x^2+8x+16} = \frac{x^2-4^2}{(x+4)(x+4)} = \frac{(x+4)(x-4)}{(x+4)(x+4)} = \frac{x-4}{(x+4)}$$

**13. பின்வரும் கோவையின் விலக்கப்பட்ட மதிப்பு காண்க. $\frac{x+10}{8x}$**

**<u>தீர்வு</u>**

$\frac{x+10}{8x}$ என்ற கோவையானது $8x = 0$ (அல்லது) $x = 0$ எனும்போது வரையறுக்க இயலாததாகிறது. ஆகவே விலக்கப்பட்ட மதிப்பு **0** ஆகும்.

**14. பின்வரும் கோவையின் விலக்கப்பட்ட மதிப்பு காண்க. $\frac{7p+2}{8p^2+13p+5}$**

**<u>தீர்வு</u>**

$\frac{7p+2}{8p^2+13p+5}$ என்ற கோவையானது $8p^2 + 13p + 5 = 0$ அதாவது $(8p+5)(p+1) = 0$ – லிருந்து, $p = \frac{-5}{8}$, $p = -1$, எனும்போது கோவை வரையறுக்க இயலாததாகிறது. எனவே, விலக்கப்பட்ட மதிப்புகள் $\frac{-5}{8}$ மற்றும் **−1.**

**15. பின்வரும் கோவையின் விலக்கப்பட்ட மதிப்பு காண்க.** $\frac{x}{x^2+1}$

**<u>தீர்வு</u>**

இங்கு அனைத்து x மதிப்புகளுக்கும், $x^2 \geq 0$

எனவே, $x^2 + 1 \geq 0 + 1$

எந்தவொரு x, மதிப்புக்கும் $x^2 + 1 \neq 0$

எனவே $\frac{x}{x^2+1}$ என்ற கோவைக்கு விலக்கப்பட்ட மெய் மதிப்புகள் எதுவுமில்லை

**16. பின்வரும் விகிதமுறு கோவையை எளிய வடிவிற்குச் சுருக்குக.** $\frac{x^2-1}{x^2+x}$

**<u>தீர்வு</u>**

$$\frac{x^2-1}{x^2+x} = \frac{x^2-1^2}{x(x+1)} = \frac{(x+1)(x-1)}{x(x+1)} = \frac{(x-1)}{x}$$

**17. பின்வரும் விகிதமுறு கோவையை எளிய வடிவிற்குச் சுருக்குக.** $\frac{x^2-11x+18}{x^2-4x+4}$

**<u>தீர்வு</u>** $\frac{x^2-11x+18}{x^2-4x+4} = \frac{(x-9)(x-2)}{(x-2)(x-2)} = \frac{x-9}{x-2}$

**18. கீழ்க்கண்ட கோவைக்கு விலக்கப்பட்ட மதிப்புகள் இருப்பின் அவற்றைக் காண்க.** $\frac{y}{y^2-25}$

**<u>தீர்வு</u>**

$\frac{y}{y^2-25}$ என்ற கோவையானது $y^2 - 5^2 = 0$

$y^2 - 5^2 = 0$

$(y + 5)(y - 5) = 0$

$y + 5 = 0$ , $y - 5 = 0$

$y = -5$, $y = 5$

எனும்போது கோவை வரையறுக்க இயலாததாகிறது.

∴ விலக்கப்பட்டட மதிப்புகள் **−5** மற்றும் **5**

**19. கீழ்க்கண்ட கோவைக்கு விலக்கப்பட்ட மதிப்புகள் இருப்பின் அவற்றைக் காண்க.** $\frac{t}{t^2-5t+6}$

**<u>தீர்வு</u>**

$\frac{t}{t^2-5t+6}$ என்ற கோவையானது $t^2 - 5t + 6 = 0$

$t^2 - 5t + 6 = 0$

$(t - 2)(t - 3) = 0$

$t - 2 = 0$, $t - 3 = 0$

$t = 2$, $t = 3$

எனும்போது கோவை வரையறுக்க இயலாததாகிறது.

∴ விலக்கப்பட்டட மதிப்புகள் **2** மற்றும் **3.**

**20. கீழ்க்கண்ட கோவைக்கு விலக்கப்பட்ட மதிப்புகள் இருப்பின் அவற்றைக் காண்க.** $\frac{x^2+6x+8}{x^2+x-2}$

**தீர்வு**

$\frac{x^2+6x+8}{x^2+x-2} = \frac{(x+4)(x+2)}{(x+2)(x-1)} = \frac{x+4}{x-1}$

$\frac{x+4}{x-1}$ என்பது $x - 1 = 0$ எனும்போது வரையறுக்கப்படவில்லை .

∴விலக்கப்பட்ட மதிப்புகள் **1.**

**21. கீழ்க்கண்ட கோவைக்கு விலக்கப்பட்ட மதிப்புகள் இருப்பின் அவற்றைக் காண்க.** $\frac{x^3-27}{x^3+x^2-6x}$ **தீர்வு**

$\frac{x^3-27}{x^3+x^2-6x} = \frac{x^3-3^3}{x(x^2+x-6)} = \frac{(x-3)(x^2+3x+9)}{x(x^2+x-6)} = \frac{(x-3)(x^2+3x+9)}{(x)(x+3)(x-2)}$

$\frac{x^3-27}{x^3+x^2-6x}$ என்பது $x^3+x^2-6x = 0$ எனும்போது வரையறுக்கப்படவில்லை .

$\Longrightarrow (x)(x+3)(x-2) = 0 \Longrightarrow x = 0$ அல்லது $x = -3$ அல்லது $x = 2$

∴விலக்கப்பட்ட மதிப்புகள் **0, −3, 2**

**22.** $\frac{x^3}{9y^2}$ **ஐ** $\frac{27y}{x^5}$ **ஆல் பெருக்குக**

**தீர்வு**

$\frac{x^3}{9y^2} \times \frac{27y}{x^5} = \frac{27}{9yx^2} = \frac{3}{x^2y}$

**23.** $\frac{x^4b^2}{x-1}$ **ஐ** $\frac{x^2-1}{a^4b^3}$ **ஆல் பெருக்குக**

**தீர்வு**

$\frac{x^4b^2}{x-1} \times \frac{x^2-1}{a^4b^3} = \frac{x^4}{x-1} \times \frac{(x+1)(x-1)}{a^4b} = \frac{x^4(x+1)}{a^4b}$

**24. பின்வருவனவற்றைக் காண்க (i)** $\frac{14x^4}{y} \div \frac{7x}{3y^4}$

**தீர்வு**

$\frac{14x^4}{y} \div \frac{7x}{3y^4} = \frac{14x^4}{y} \times \frac{3y^4}{7x} = 6x^3y^3$

**25. பின்வருவனவற்றைக் காண்க** $\frac{x^2-16}{x+4} \div \frac{x-4}{x+4}$

**தீர்வு**

$\frac{x^2-16}{x+4} \times \frac{x+4}{x-4} = \frac{(x+4)(x-4)}{x+4} \times \frac{x+4}{x-4} = x+4$

**26. பின்வருவனவற்றைக் காண்க** $\frac{16x^2-2x-3}{3x^2-2x-1} \div \frac{8x^2+11x+3}{3x^2-11x-4}$

**தீர்வு**

$\frac{16x^2-2x-3}{3x^2-2x-1} \div \frac{8x^2+11x+3}{3x^2-11x-4} = \frac{16x^2-2x-3}{3x^2-2x-1} \times \frac{3x^2-11x-4}{8x^2+11x+3}$

$= \frac{(8x+3)(2x-1)}{(3x+1)(x-1)} \times \frac{(3x+1)(x-4)}{(8x+3)(x+1)}$

$= \frac{(2x-1)(x-4)}{(x-1)(x+1)} = \frac{2x^2-9x+4}{x^2-1}$

**27. சுருக்குக $\frac{4x^2y}{2z^2} \times \frac{6xz^3}{20y^4}$**

**<u>தீர்வு</u>**

$$\frac{4x^2y}{2z^2} \times \frac{6xz^3}{20y^4} \quad = \frac{3x^3z}{5y^3}$$

**28. சுருக்குக $\frac{p^2-10p+21}{p-7} \times \frac{p^2+p-12}{(p-3)^2}$**

**<u>தீர்வு</u>**

$$\frac{p^2-10p+21}{p-7} \times \frac{p^2+p-12}{(p-3)^2} = \frac{(p-7)(p-3)}{(p-7)} \times \frac{(p+4)(p-3)}{(p-3)^2} = (p+4)$$

**29. சுருக்குக $\frac{5t^3}{4t-8} \times \frac{6t-12}{10t}$**

**<u>தீர்வு</u>**

$$\frac{5t^3}{4t-8} \times \frac{6t-12}{10t} = \frac{5t^3}{4(t-2)} \times \frac{6(t-2)}{10t} = \frac{3t^2}{4}$$

**30. சுருக்குக $\frac{x(x+1)}{x-2} + \frac{x\,(1-x)}{x-2}$**

**<u>தீர்வு</u>**

$$\frac{x(x+1)}{x-2} + \frac{x\,(1-x)}{x-2} = \frac{x(x+1+1-x)}{x-2} = \frac{2x}{x-2}$$

**31. சுருக்குக $\frac{x^3}{x-y} + \frac{y^3}{y-x}$**

**<u>தீர்வு</u>**

$$\frac{x^3}{x-y} + \frac{y^3}{y-x} = \frac{x^3}{x-y} - \frac{y^3}{x-y} = \frac{x^3-y^3}{x-y} = \frac{(x^2+xy+y^2)(x-y)}{(x-y)} = x^2+xy+y^2$$

**32. கீழ்க்கண்ட கோவைகளின் வர்க்க மூலம் காண்க.** $256(x-a)^8 (x-b)^4 (x-c)^{16} (x-d)^{20}$

**<u>தீர்வு</u>**

$$256(x-a)^8 (x-b)^4 (x-c)^{16} (x-d)^{20} = \sqrt{(256(x-a)^8(x-b)^4\,(x-c)^{16}\,(x-d)^{20})}$$

$$= 16\,|(x-a)^4(x-b)^2\,(x-c)^8\,(x-d)^{10}|$$

**33. கீழ்க்கண்ட கோவைகளின் வர்க்க மூலம் காண்க.** $\frac{144\,a^8b^{12}c^{16}}{81f^{12}g^4h^{14}}$

**<u>தீர்வு</u>**

$$\sqrt{\frac{144\,a^8b^{12}c^{16}}{81f^{12}g^4h^{14}}} = \frac{4}{3}\left|\frac{a^4b^6c^8}{f^6g^2h^7}\right|$$

**34. பின்வருவனவற்றின் வர்க்கமூலம் காண்க.** $\frac{400x^4\,y^{12}\,z^{16}}{100x^8y^4\,z^4}$

**<u>தீர்வு</u>**

$$\sqrt{\frac{400x^4\,y^{12}\,z^{16}}{100x^8y^4\,z^4}} = \sqrt{\frac{4y^8z^{12}}{x^4}} = 2\left|\frac{y^4z^6}{x^2}\right|$$

**35. பின்வருவனவற்றின் வர்க்கமூலம் காண்க.** $\frac{121\,(a+b)^8(x+y)^8(b-c)^8}{81(b-c)^4(a-b)^{12}\,(b-c)^4}$

**தீர்வு**

$$\sqrt{\frac{121\,(a+b)^8(x+y)^8(b-c)^8}{81\,(b-c)^4(a-b)^{12}\,(b-c)^4}} = \frac{11}{9}\left|\frac{(a+b)^4(x+y)^4}{(a-b)^6}\right|$$

**36. கீழ்க்காணும் கோவைகளின் வர்க்கமூலம் காண்க : $4x^2+20x+25$**

**தீர்வு**

$\sqrt{4x^2+20x+25} = \sqrt{(2x)^2+(2)(2)(5)x+5^2} = \sqrt{(2x+5)^2} = |2x+5|$

**37. கீழ்க்காணும் கோவைகளின் வர்க்கமூலம் காண்க : $9x^2-24xy+30xz-40yz+25z^2+16y^2$**

**தீர்வு**

$9x^2-24xy+30xz-40yz+25z^2+16y^2$

$=\sqrt{(3x)^2+(2)(3x)(-4y)+(2)(3x)(5z)+(2)(-4y)(5z)+(5z)^2+(-4y)^2}$

$\because (a+b+c)^2 = a^2+b^2+c^2+2ab+2bc+2ca$

$=\sqrt{(3x-4y+5z)^2} = |3x-4y+5z|$

**38. $x^2+8x+12$ என்ற இருபடி கோவையின் பூச்சியங்களைக் காண்க.**

**தீர்வு**

$p(x) = x^2+8x+12 = (x+2)(x+6)$ என்க

$p(-2) = 4-16+12 = 0$

$p(-6) = 36-48+12 = 0$

எனவே, $p(x) = x^2+8x+12$ –யின் பூச்சியங்கள் **–2** மற்றும் **–6.**

**39. மூலங்களின் கூடுதல் மற்றும் பெருக்கல் கீழ்க்காணுமாறு கொடுக்கப்பட்டுள்ளன எனில், அவற்றுக்கு தகுந்த இருபடிச் சமன்பாடுகளைக் கண்டறிக. 9,14**

**தீர்வு**

மூலங்கள் கொடுக்கப்பட்டால், இருபடிச் சமன்பாட்டின் பொது வடிவம்

$x^2$ – ( மூலங்களின் கூடுதல்) x + மூலங்களின் பெருக்கற்பலன் = **0**

$x^2-9x+14=0$

**40. மூலங்களின் கூடுதல் மற்றும் பெருக்கல் கீழ்க்காணுமாறு கொடுக்கப்பட்டுள்ளன எனில், அவற்றுக்கு தகுந்த இருபடிச் சமன்பாடுகளைக் கண்டறிக. $-\frac{7}{2},\frac{5}{2}$**

**தீர்வு**

$x^2-\left(-\frac{7}{2}\right)x+\frac{5}{2}$ எனவே, $2x^2+7x+5=0$

**41. மூலங்களின் கூடுதல் மற்றும் பெருக்கல் கீழ்க்காணுமாறு கொடுக்கப்பட்டுள்ளன எனில், அவற்றுக்கு தகுந்த இருபடிச் சமன்பாடுகளைக் கண்டறிக. $-\frac{3}{5},-\frac{1}{2}$**

**தீர்வு**

$x^2-\left(-\frac{3}{5}\right)x+\left(-\frac{1}{2}\right)=0 \Rightarrow x^2+\frac{3}{5}x-\frac{1}{2}=0 \Rightarrow \frac{10x^2+6x-5}{10}=0$

$10x^2+6x-5=0$

**42. கீழே கொடுக்கப்பட்டுள்ள இருபடிச் சமன்பாடுகளின் மூலங்களின் கூடுதல் மற்றும் பெருக்கற்பலன் ஆகியவற்றைக் காண்க. $x^2+8x-65 = 0$**

**<u>தீர்வு</u>**

$\alpha$ மற்றும் $\beta$ என்பன கொடுக்கப்பட்ட இருபடிச் சமன்பாட்டின் மூலங்கள் என்க.

$x^2 + 8x - 65 = 0$

$a = 1, b = 8, c = -65$

$\alpha + \beta = -\frac{b}{a} = -8$ மற்றும் $\alpha\beta = \frac{c}{a} = -65$

**43. கீழே கொடுக்கப்பட்டுள்ள இருபடிச் சமன்பாடுகளின் மூலங்களின் கூடுதல் மற்றும் பெருக்கற்பலன் ஆகியவற்றைக் காண்க. $2x^2+5x+7 = 0$**

**<u>தீர்வு</u>**

$\alpha$ மற்றும் $\beta$ என்பன கொடுக்கப்பட்ட இருபடிச் சமன்பாட்டின் மூலங்கள் என்க.

$2x^2+5x+7 = 0$

$a = 2, b = 5, c = 7$

$\alpha + \beta = -\frac{b}{a} = -\frac{5}{2}$ மற்றும் $\alpha\beta = \frac{c}{a} = \frac{7}{2}$

**44. கீழே கொடுக்கப்பட்டுள்ள இருபடிச் சமன்பாடுகளின் மூலங்களின் கூடுதல் மற்றும் பெருக்கற்பலன் ஆகியவற்றைக் காண்க. $kx^2 - k^2x - 2k^3 = 0$**

**<u>தீர்வு</u>**

$\alpha$ மற்றும் $\beta$ என்பன கொடுக்கப்பட்ட இருபடிச் சமன்பாட்டின் மூலங்கள் என்க.

$kx^2 - k^2x - 2k^3 = 0$

$a = k, b = -k^2, c = -2k^3$

$\alpha + \beta = -\frac{b}{a} = -\frac{(-k)^2}{k} = k$ மற்றும் $\alpha\beta = \frac{c}{a} = \frac{-2k^3}{k} = -2k^2$

**45. மூலங்களின் கூடுதல் மற்றும் பெருக்கற்பலன் கொடுக்கப்பட்டுள்ளது. இருபடிச் சமன்பாடுகளைக் காண்க. -9, 20**

**<u>தீர்வு</u>** தேவையான இருபடி சமன்பாடு

$x^2 - [\propto + \beta]x + \alpha\beta = 0$

$x^2 - [-9]x + 20 = 0 \Longrightarrow x^2 + 9x + 20 = 0$

**46. மூலங்களின் கூடுதல் மற்றும் பெருக்கற்பலன் கொடுக்கப்பட்டுள்ளது. இருபடிச் சமன்பாடுகளைக் காண்க. $\frac{5}{3}, 4$**

**<u>தீர்வு</u>** தேவையான இருபடி சமன்பாடு

$x^2 -$ [மூலங்களின் கூடுதல் பலன்] x + மூலங்களின் பெருக்கற்பலன் = **0**

$x^2 - \frac{5}{3}x + 4 = 0$

இருபுறமும் **3** ஆல் பெருக்க

$3x^2 - 5x + 12 = 0$

**47. மூலங்களின் கூடுதல் மற்றும் பெருக்கற்பலன் கொடுக்கப்பட்டுள்ளது. இருபடிச் சமன்பாடுகளைக் காண்க. $\frac{-3}{2}$, -1**

**<u>தீர்வு</u>** தேவையான இருபடி சமன்பாடு

$$x^2 - [\propto + \beta]x + \alpha\beta = 0$$

$$x^2 - \left[-\frac{3}{2}\right] - 1 = 0 \qquad \Rightarrow x^2 + \frac{3}{2}x - 1 = 0$$

இருபுறமும் 2 ஆல் பெருக்க

$$2x^2 + 3x - 2 = 0$$

**48. பின்வரும் இருபடிச் சமன்பாடுகளின் மூலங்களின் தன்மையைக் காண்க. $x^2 - x - 20 = 0$**

**<u>தீர்வு</u>** $x^2 - x - 20 = 0$

இங்கு, a = 1, b = -1, c = -20

தன்மைகாட்டி, $\Delta = b^2 - 4ac$ ; $\Delta = (-1)^2 - 4(1)(-20) = 81$

$\Delta = \mathbf{81} > 0.$

எனவே, சமன்பாட்டின் மூலங்கள் மெய் மற்றும் சமமில்லை

**49. பின்வரும் இருபடிச் சமன்பாடுகளின் மூலங்களின் தன்மையைக் காண்க. $9x^2 - 24x + 16 = 0$**

**<u>தீர்வு</u>** $9x^2 - 24x + 16 = 0$

இங்கு, a = 9, b = -24, c = 16

தன்மைகாட்டி, $\Delta = b^2 - 4ac$ ; $\Delta = (-24)^2 - 4(9)(16) = 0$

$\Delta = 0.$

எனவே, சமன்பாட்டின் மூலங்கள் மெய் மற்றும் சமம்

**50. பின்வரும் இருபடிச் சமன்பாடுகளின் மூலங்களின் தன்மையைக் காண்க. $2x^2 - 2x + 9 = 0$**

**<u>தீர்வு</u>**

$2x^2 - 2x + 9 = 0$

இங்கு, a = 2, b = -2, c = 9

தன்மைகாட்டி, $\Delta = b^2 - 4ac$ ; $\Delta = (-2)^2 - 4(2)(9) = -68$

$\Delta = \mathbf{-68} < 0.$

எனவே, சமன்பாட்டிற்கு மெய் மூலங்கள் இல்லை.

**51. இருபடிச் சமன்பாட்டு $kx^2 - (8k+4) + 81 = 0$ –யின் மூலங்கள் மெய் மற்றும் சமம் எனில், k–ன் மதிப்பைக் காண்க.**

**<u>தீர்வு</u>** $kx^2 - (8k+4) + 81 = 0$

சமன்பாட்டின் மூலங்கள் மெய் மற்றும் சமம், எனவே , $\Delta = 0.$

அதாவது, $b^2 - 4ac = 0$, இங்கு, a = k, b = -(8k+4), c = 81

எனவே, $[-(8k+4)]^2 - 4(k)(81) = 0$

$64k^2 + 64k + 16 - 324k = 0$

$64k^2 - 260k + 16 = 0$

4 ஆல் வகுக்க, $16k^2 - 65k + 4 = 0$

$(16k – 1)(k – 4) = 0$ –லிருந்து, $k = \frac{1}{16}$ அல்லது $k = 4$.

**52. $(k + 9)x^2 + (k + 1)x + 1 = 0$ –யின் மூலங்கள் மெய் இல்லை எனில், k–ன் மதிப்பைக் காண்க.**

**<u>தீர்வு</u>**

$(k + 9)x^2 + (k + 1)x + 1 = 0$ சமன்பாட்டின் மூலங்கள் மெய் இல்லை. எனவே, $\Delta < 0$

அதாவது, $b^2 - 4ac = 0$, இங்கு, $a = k+9$, $b = k + 1$, $c = 1$

எனவே, $(k + 1)^2 – 4(k + 9)(1) < 0$

$k^2 + 2k + 1 – 4k – 36 < 0$

$k^2 – 2k – 35 < 0$

$(k + 5)(k – 7) < 0$

எனவே, $-5 < k < 7$. $\{\alpha < \beta\ (x - \alpha)(x - \beta) < 0$ எனில், $\alpha < x < \beta\ \}$.

**53. கொடுக்கப்பட்ட சமன்பாடுகளின் மூலங்கள் மெய் மற்றும் சமம் எனில், k-யின் மதிப்பைக் காண்க.**
**$(5k – 6)x^2 + 2kx + 1 = 0$**

**<u>தீர்வு</u>**

$a = 5k – 6$, $b = 2k$, $c = 1$

மூலங்கள் மெய் மற்றும் சமம் என்பதால்

$b^2 – 4ac = 0$

$(2k)^2 – 4(5k-6)1 = 0 \Longrightarrow 4k^2 – 20k + 24 = 0 \quad \div 4$

$k^2 – 5k + 6 = 0 \quad \Longrightarrow (k – 2)(k – 3) = 0$

$\therefore k = 3$ (அல்லது) $k = 2$

**54. கொடுக்கப்பட்ட சமன்பாடுகளின் மூலங்கள் மெய் மற்றும் சமம் எனில், k-யின் மதிப்பைக் காண்க.**
**$kx^2 + (6k+2)x + 16 = 0$**

**<u>தீர்வு</u>**

(i) $kx^2 + (6k+2)x + 16 = 0$

$a = k$, $b = 6k+2$, $c = 16$

மூலங்கள் மெய் மற்றும் சமம் என்பதால்

$b^2 – 4ac = 0$

$\Longrightarrow (6k+2)^2 – 4(k)16 = 0$

$\Longrightarrow 36k^2 + 24k + 4 – 64k = 0$

$\Longrightarrow 36k^2 - 40k + 4 = 0 \ (\div 4)$

$\Longrightarrow 9k^2 – 10k + 1 = 0$

$\Longrightarrow (k – 1)(9k – 1) = 0$

$\therefore k = 1$ (அல்லது) $k = \frac{1}{9}$

## 5 marks

**1. $64x^4 - 16x^3 + 17x^2 - 2x + 1$ என்பதன் வர்க்கமூலம் காண்க.**

<u>**தீர்வு**</u>

| | | 8 | -1 | 1 | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | 64 | -16 | 17 | -2 | 1 | |
| | (-)64 | | | | | |
| 16 -1 | | -16 | 17 | | | $-\frac{16}{16}$ = -1 |
| | | (+) -16 | (-) 1 | | | |
| 16 – 2 1 | | | 16 | -2 | 1 | $\frac{16}{16}$ = 1 |
| | | | (-) 16 | (+) -2 | (-) 1 | |
| | | | 0 | | | |

தேவையான வர்க்க மூலம் = $|8x^2 - x + 1|$

**2. $9x^4 + 12x^3 + 28x^2 + ax + b$ ஆனது ஒரு முழு வர்க்கம் எனில் a,b ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க.**

<u>**தீர்வு**</u>

| | 3 | 2 | 4 | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 12 | 28 | a | b | |
| | (-) 9 | | | | | |
| 6 2 | | 12 | 28 | | | $\frac{12}{6}$ =2 |
| | | (-) 12 | (-) 4 | | | |
| 6 4 4 | | | 24 | a | b | |
| | | | (-) 24 | (-)16 | (-) 16 | $\frac{24}{6}$ = 4 |

a = 16 , b = 16

**3. வகுத்தல் முறையில் பின்வரும் பல்லுறுப்புக் கோவையின் வர்க்கமூலம் காண்க.**

**$x^4 - 12x^3 + 42x^2 - 36x + 9$**

<u>**தீர்வு**</u> $x^4 - 12x^3 + 42x^2 - 36x + 9$

| | 1 | -6 | 3 | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | -12 | 42 | -36 | 9 | |
| | (-)1 | | | | | |
| 2 - 6 | | -12 | 42 | | | $\frac{-12}{2}$ = -6 |
| | | (+)-12 | (-) 36 | | | |
| 2 – 12 3 | | | 6 | -36 | 9 | $\frac{6}{2}$ = 3 |
| | | | (-)6 | (+) -36 | (-) 9 | |
| | | | 0 | | | |

தேவையான வர்க்க மூலம் = $|x^2 - 6x + 3|$

**4. வகுத்தல் முறையில் பின்வரும் பல்லுறுப்புக் கோவையின் வர்க்கமூலம் காண்க.**

**$37x^2 - 28x^3 + 4x^4 + 42x + 9$**

**<u>தீர்வு</u>**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2 | -7 | - 3 | | | |
| 2 | 4 | -28 | 37 | 42 | 9 | |
| | (-) 4 | | | | | |
| 4 – 7 | | -28 | 37 | | | $\frac{-28}{4}$ = -7 |
| | | (+) -28 | (-) 49 | | | |
| 4 – 14 -3 | | | - 12 | 42 | 9 | $\frac{-12}{4}$ = -3 |
| | | (+) | - 12 | (-)4 2 | (-) 9 | |
| | | | 0 | | | |

தேவையான வர்க்க மூலம் = $|2x^2 - 7x - 3|$

**5. வகுத்தல் முறையில் பின்வரும் பல்லுறுப்புக் கோவையின் வர்க்கமூலம் காண்க.**

**$16x^4 + 8x^2 + 1$**

**<u>தீர்வு</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 4 | 0 | 1 | | |
| 4 | **16** | **0** | **8** | **0** | **1** |
| | (-) 16 | | | | |
| 8 0 | | 0 | 8 | | |
| | | (-) 0 | (-)0 | | |
| 8 0 1 | | | 8 | 0 | 1 |
| | | | (-) 8 | (-)0 | (-)1 |
| | | | 0 | | |

தேவையான வர்க்க மூலம் = $|4x^2 + 1|$

**6. வகுத்தல் முறையில் பின்வரும் பல்லுறுப்புக் கோவையின் வர்க்கமூலம் காண்க.**

**$121x^4 - 198x^3 - 183x^2 + 216x + 144$**

**<u>தீர்வு</u>**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 11 | - 9 | -12 | | | |
| 11 | 121 | -198 | -183 | 216 | 144 | |
| | (-) 121 | | | | | |
| | | - 198 | -183 | | | $-\frac{198}{22}$ = -9 |
| 22 –9 | | (+) - 198 | (-)81 | | | |
| | | | -264 | 216 | 144 | |
| 22 -18 -12 | | | (+)-264 | (-)216 | (-)144 | - $\frac{264}{22}$ = -12 |
| | | | 0 | | | |

தேவையான வர்க்க மூலம் = $|11x^2 - 9x - 12|$

**7.** பின்வருபவை முழு வர்க்கப் பல்லுறுப்புக் கோவைகள் எனில் **a** மற்றும் **b** –யின் மதிப்பு காண்க.
**$4x^4 - 12x^3 + 37x^2 + bx + a$**

**<u>தீர்வு</u>**

| | 2   -3   7 | |
|---|---|---|
| | 4   -12   37   b   a | |
| 2 | (-) 4 | |
| | -12   37 | $-\frac{12}{4}$ = -3 |
| 4 –3 | (+) -12   (-) 9 | |
| | 28   b   a | $\frac{28}{4}$ = 7 |
| 4 -6 7 | (-) 28   (+)-42   (-) 49 | |
| | 0 | |

**a = 49 , b = -42**

**8.** பின்வருபவை முழு வர்க்கப் பல்லுறுப்புக் கோவைகள் எனில் **a** மற்றும் **b** –யின் மதிப்பு காண்க.
**$ax^4 + bx^3 + 361x^2 + 220x + 100$**

**<u>தீர்வு</u>**

| | 10   11   12 | |
|---|---|---|
| 10 | 100   220   361   b   a | |
| | (-) 100 | |
| | 220   361 | $\frac{220}{20}$ = 11 |
| 20 11 | (-)220   (-)121 | |
| | 240   b   a | $\frac{240}{20}$ = 12 |
| 20 22 12 | (-) 240   (-) 264   (-)144 | |
| | 0 | |

a = 144 , b = 264

**9.** கீழ்க்காணும் பல்லுறுப்புக்கோவைகள் முழு வர்க்கங்கள் எனில், **m** மற்றும் **n** –யின் மதிப்பு காண்க.
**$36x^4 - 60x^3 + 61x^2 - mx + n$.**

**<u>தீர்வு</u>**

| | 6   -5   3 |
|---|---|
| 6 | 36   -60   61   -m   n |
| | (-) 36 |
| 12 - 5 | - 60   61 |
| | - 60   25 |
| | (+)   (-) |
| 12 – 10 + 3 | 36   -m   n |
| | 36   -30   9 |
| | (-)   (+)   (-) |
| | 0 |

-m = -30 , m = 30
n = 9

**10. கீழ்க்காணும் பல்லுறுப்புக்கோவைகள் முழு வர்க்கங்கள் எனில், m மற்றும் n –யின் மதிப்பு காண்க.**

**$x^4 - 8x^3 + mx^2 + nx + 16$**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1 | -4 | 4 | | | |
| 1 | 1 | -8 | m | n | 16 | |
| | (-)1 | | | | | |
| | | -8 | m | | | $-\frac{8}{2} = -4$ |
| 2 –4 | | (+)-8 | (-)16 | | | |
| | | | m-16 | n | 16 | $\frac{m-16}{2}$ |
| 2 -8 4 | | | (-) 8 | (+) -32 | (-) 16 | |
| | | | | 0 | | |


m-16 = 8 , n = -32

m = 8 + 16


m = 24

# இயல் – 4
# வடிவியல்
## 1 MARKS


1. $\frac{AB}{DE} = \frac{BC}{FD}$ எனில், ABC மற்றும் EDF எப்பொழுது வடிவொத்தவையாக அமையும் ?
   **(1) $\angle B = \angle D$** (2) $\angle A = \angle D$ (3) $\angle B = \angle E$ (4) $\angle A = \angle F$
2. $\Delta$LMN -யில் $\angle$L=60° , $\angle$M=50°, மேலும் $\Delta$LMN ~ $\Delta$PQR எனில், $\angle$R –யின் மதிப்பு
   (1) 30° (2) 40° **(3) 70°** (4) 110°
3. இருசமபக்க முக்கோணம் $\Delta$ABC- யில் $\angle$C=90° மற்றும் AC=5செ.மீ, எனில் AB ஆனது
   **(1) $5\sqrt{2}$ செ.மீ** (2) 10 செ.மீ (3) 2.5 செ.மீ (4) 5 செ.மீ
4. கொடுக்கப்பட்ட படத்தில் ST||QR, PS = 2செ.மீ மற்றும் SQ =3செ.மீ
   எனில், $\Delta$PST –யின் பரப்பளவுக்கும் $\Delta$PQR -யின் பரப்பளவுக்கும் உள்ள விகிதம்
   (1) 25 : 7 **(2) 25 : 4** (3) 25 : 13 (4) 25 : 11





5. இரு வடிவொத்த முக்கோணங்கள் $\Delta$ABC மற்றும் $\Delta$PQR – யின் சுற்றளவுகள் முறையே 36 செ.மீ மற்றும் 24 செ.மீ ஆகும். PQ = 10 செ.மீ எனில், AB –யின் நீளம்.
   (1) $6\frac{2}{3}$ செ.மீ (2) $66\frac{2}{3}$ செ.மீ (3) $\frac{10\sqrt{6}}{3}$ செ. மீ **(4) 15 செ.மீ**
6. $\Delta$ABC- யில் DE || BC, AB = 3.6செ.மீ, AC=2.4செ.மீ மற்றும் AD=2.1செ.மீ எனில், AE–யின் நீளம்
   (1) 1.05 செ.மீ (2) 1.2 செ.மீ **(3) 1.4 செ.மீ** (4) 1.8 செ.மீ
7. $\Delta$ABC-யில் AD ஆனது, $\angle BAC$ –யின் இருசமவெட்டி.AB=8 செ.மீ, BD=6 செ.மீ மற்றும் DC=3 செ.மீ எனில், பக்கம் AC–யின் நீளம்.
   (1) 3 செ.மீ **(2) 4 செ.மீ** (3) 6 செ.மீ (4) 8 செ.மீ
8. கொடுக்கப்பட்ட படத்தில் $\angle BAC$ = 90° மற்றும் AD ⊥BC எனில்,
   (1) BD.CD = $BC^2$ (2) AB.AC = $BC^2$ **(3) BD.CD = $AD^2$** (4) AB.AC = $AD^2$




9. 6 மீ மற்றும் 11 மீ உயரமுள்ள இரு கம்பங்கள் சமதளத் தரையில் செங்குத்தாக உள்ளன. அவற்றின் அடிகளுக்கு இடையேயுள்ள தொலைவு 12மீ எனில், அவற்றின் உச்சிகளுக்கு இடையே உள்ள தொலைவு என்ன ?
   (1) 12.8 மீ **(2) 13 மீ** (3) 14 மீ (4) 15 மீ
10. கொடுக்கப்பட்ட படத்தில் , PR = 24 செ.மீ , QR = 26 செ.மீ $\angle$PAQ = 90°,
    PA = 6 செ.மீ , QA = 8 செ.மீ. $\angle$PQR –ஐக் காண்க.
    **(1) 90°** (2) 85° (3) 80° (4) 75°





11. வட்டத்தின் தொடுகோடு அதன் ஆரமும் செங்குத்தாக அமையும் இடம்
    (1) மையம் (2) நாண் **(3) தொடுபுள்ளி** (4) முடிவிலி
12. வட்டத்தின் வெறிப்புறப் புள்ளியிலிருந்து வட்டத்திற்கு எத்தனை தொடுகோடுகள் 
    (1) பூஜ்ஜியம் (2) ஒன்று **(3) இரண்டு** (4) முடிவுற்ற எண்ணிக்
13. O– ஐ மையமாக உடைய வட்டத்திற்கு, வெளியேயுள்ள புள்ளி P–யிலிருந்த
    தொடுகோடுகள் PA மற்றும் PB ஆகும். $\angle A$PB = 70° எனில் $\angle AO$B–யின் மதிப்பு
    (1) 120° (2) 130° (3) 100° **(4) 110°**
14. படத்தில் O-ஐ மையமாக உடைய வட்டத்தின் தொடுகோடுகள் CP மற்றும் CQ ஆகும். ARB ஆனது வட்டத்தின் மீதுள்ள புள்ளி R வழியாகச் செல்லும் மற்றொரு தொடுகோடு ஆகும். CP = 11 செ.மீ மற்றும் BC = 7 செ.மீ, எனில் BR – யின் நீளம்.
    (1) 8 செ.மீ (2) 6 செ.மீ (3) 5 செ.மீ **(4) 4 செ.மீ**




15. படத்தில் உள்ளவாறு O - ஐ மையமாகக் கொண்ட வட்டத்தின் தொடுகோடு PR எனில், $\angle$POQ ஆனது (1) 90° **(2) 120°** (3) 100° (4) 110°

# 2 MARKS

1. **படத்தில் ∠A–யின் இருசமவெட்டி AD ஆகும். BD=4 செ.மீ, DC=3 செ.மீ மற்றும் AB=6 செ.மீ எனில் , AC – யைக் காண்க ?**




**தீர்வு** Δ–ABCயில், ∠A–யின் இருசமவெட்டி AD ஆகும்.


எனவே, கோண இருசமவெட்டித் தேற்றத்தன்படி

$$\frac{BD}{DC} = \frac{AB}{AC}.$$

$\frac{4}{3} = \frac{6}{AC}$ – யிருந்து, 4 AC = 18. எனவே, AC = $\frac{9}{2}$ = 4.5 செ.மீ

2. **சுவரின் அடியிலிருந்து 4 அடி தொலைவில் உள்ள ஏணியானது சுவரின் உச்சியை 7 அடி உயரத்தில் தொடுமெனில் தேவையான ஏணியின் நீளத்தைக் காண்க. விடையை ஒரு தசம இடத்திருத்தமாக தருக.**

**தீர்வு**




ஏணியின் நீளம் AB = x என்க , BC = 4 அடி, AC = 7 அடி,

பிதாகரஸ் தேற்றத்தின்டி, $AB^2 = AC^2 + BC^2$

$x^2 = 7^2 + 4^2$ –லிருந்து $x^2 = 49 + 16$


$x^2 = 65$. எனவே, $x = \sqrt{65}$

$\sqrt{65}$ ஆனது 8 மற்றும் 8.1 –க்கு இடையில் அமைகிறது.

$8^2 = 64 < 65 < 65.61 = 8.1^2$

எனவே, ஏணியின் நீளம் தோராயமாக 8.1 அடி ஆகும்.

3. **3 செ.மீ ஆரமுள்ள வட்டத்தின் மையத்திலிருந்து 5செ.மீ தொலையில் உள்ள புள்ளியிலிருந்து வட்டத்திற்கு வரையப்பட்ட தொடுகோட்டின் நீளம் காண்க.**




**தீர்வு** கொடுக்கப்பட்டது OP = 5செ.மீ, ஆரம் r= 3 செ.மீ

தொடுகோட்டின் நீளம் PT ஐ காண


செங்கோண முக்கோணம் OTP–யில்

$OP^2 = OT^2 + PT^2$ (பிதாகரஸ் தேற்றத்தின்படி)

$5^2 = 3^2 + PT^2 \Rightarrow PT^2 = 25 - 9 = 16$

தொடுகோட்டின் நீளம் PT = 4 செ.மீ

4. **படத்தில் Δ ABC ஆனது ஒரு வட்டத்தைத் தொட்டுக்கொண்டு வட்டத்தைச் சுற்றி அமைந்துள்ளது எனில் BC –யின் நீளத்தைக் காண்க.**




**தீர்வு** AN = AM = 3 செ.மீ (ஒரே வெளிப்புற புள்ளியிலிருந்து வரையப்பட்ட தொடுகோடுகள் சமம்)

BN = BL = 4 செ.மீ


CL = CM = AC – AM

= 9 – 3 = 6 செ.மீ

BC = BL + CL

= 4 + 6

**5. இரண்டு பொது மைய வட்டங்களின் ஆரங்கள் 4 செ.மீ, 5 செ.மீ ஆகும். ஒரு வட்டத்தின் நாணானது மற்றொரு வட்டத்திற்குத் தொடுகோடாக அமைந்தால் அவ்வட்டத்தின் நாணின் நீளம் காண்க.**




**<u>தீர்வு</u>** OA = 4 செ.மீ , OB = 5 செ.மீ, மேலும் OA ⊥ BC

$OB^2 = OA^2 + AB^2 \quad \Rightarrow 5^2 = 4^2 + AB^2 \quad \Rightarrow AB^2 = 25 - 16 = 9$

எனவே, AB = 3 செ.மீ , BC = 2AB எனவே, BC = 2 X 3 = 6 செ.மீ

**6. வட்டத்தின் மையத்திலிருந்து 25 செ.மீ தொலைவினில் உள்ள P என்ற புள்ளியிலிருந்து வட்டத்திற்கு வரையப்பட்ட தொடுகோட்டின் நீளம் 24 செ.மீ எனில், வட்டத்தின் ஆரம் என்ன ?**

**<u>தீர்வு</u>**




படத்திலிருந்து OP = 25 செ.மீ , PT = 24 செ.மீ

$r = \sqrt{OP^2 - PT^2}$

$= \sqrt{25^2 - 24^2}$

$= \sqrt{625 - 576} = \sqrt{49}$

r = 7 செ.மீ


## 5 MARKS

**1. அடிப்படை விகிதசம தேற்றத்தை எழுதி நிறுவுக.**

**கூற்று**

ஒரு நேர்கோடு முக்கோணத்தன் ஒரு பக்கத்திற்கு இணையாகவும் மற்ற இரு பக்கங்களை வெட்டுமாறும் வரையப்பட்டால் அக்கோடு அவ்விரண்டு பக்கங்களையும் சம விகிதத்தில் பிரிக்கிறது.

**நிருபணம்**




**கொடுக்கப்பட்டவை:** ΔABC – யில் AB யின் மேலுள்ள புள்ளி D, AC - யின் மேல் உள்ள புள்ளி E ஆகும்.

**நிருபிக்க :** $\frac{AD}{DB} = \frac{AE}{EC}$. அமைப்பு : **DE ||BC** வரைக.


| எண் | கூற்று | காரணம் |
|---|---|---|
| 1. | ∠ABC = ∠ADE = ∠1 | ஒத்த கோணங்கள் சமம். ஏனெனில் DE ||BC |
| 2. | ∠ACB = ∠AED = ∠2 | ஒத்த கோணங்கள் சமம். ஏனெனில் DE ||BC |
| 3. | ∠DAE = ∠BAC = ∠3 | இரு முக்கோணங்களும் ஒரு பொதுவான கோணத்தைக் கொண்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 4. | $\Delta ABC \sim \Delta ADE$<br>$\frac{AB}{AD} = \frac{AC}{AE}$<br>$\frac{AD+DB}{AD} = \frac{AE+EC}{AE}$<br>$1 + \frac{DB}{AD} = 1 + \frac{EC}{AE}$<br>$\frac{DB}{AD} = \frac{EC}{AE}$<br>$\frac{AD}{DB} = \frac{AE}{EC}$ | AAA விதிமுறைப்படி<br>ஒத்த பக்கங்கள் விகிதச்சமம்<br>D மற்றும் E–ஐப் பயன்படுத்தி AB மற்றும் AC– ஐ பிரித்தல்.<br>சுருக்குதல்<br>இரு பக்கங்களிலும் 1–ஐ நீக்குக.<br>தலைகீழாக மாற்றுக |
| தேற்றம் நிரூபிக்கப்பட்டது | | |

**2. கோண இருசமவெட்டி தேற்றத்தை எழுதி நிறுவுக. (Angle Bisector Theorem)**

**கூற்று**

ஒரு முக்கோணத்தின் ஒரு கோணத்தின் உட்புற இருசமவெட்டியானது அக்கோணத்தின் எதிர்பக்கத்தை உட்புறமாக அக்கோணத்தினை அடக்கிய பக்கங்களின் விகிதத்தில் பிரிக்கும்.




**நிரூபணம்**

**கொடுக்கப்பட்டவை:** $\Delta ABC$ – யில் AD – யானது $\angle A$ –யின் உட்புற இருசமவெட்டி.


**நிரூபிக்க :** $\frac{AB}{AC} = \frac{BD}{CD}$. அமைப்பு : AB - க்கு இணையாக C வழியாகச் ஒரு இணைகோடு வரைக. AD-யின் நீட்டிசியானது C வழியாக செல்லும் கோட்டினை E–யில் சந்திக்கிறது.

| எண் | கூற்று | காரணம் |
|---|---|---|
| 1. | $\angle AEC = \angle BAE = \angle 1$ | ஒரு குறுக்குவெட்டியானது இரண்டு இணைகோடுகளை வெட்டுவதால் ஏற்படும் ஒன்றுவிட்ட கோணங்கள் சமம். |
| 2. | $\Delta ACE$ என்பது இரு சமபக்க முக்கோணம்.<br>AC = CE …. (1) | $\Delta ACE$ – யில் $\angle CAE = \angle CEA$. |
| 3. | $\Delta ABD \sim \Delta ECD$<br>$\frac{AB}{CE} = \frac{BD}{CD}$ | AA விதிமுறைப்படி |
| 4. | $\frac{AB}{AC} = \frac{BD}{CD}$ | (1)- லிருந்து, AC = CE. தேற்றம் நிரூபிக்கட்டது. |

**3. பிதாகரஸ் தேற்றத்தை எழுதி நிறுவுக (Pythagoras Theorem)**

**கூற்று**

ஒரு செங்கோண முக்கோணத்தில் கர்ணத்தின் வர்க்கம் மற்ற இரு பக்கங்களின் வர்க்கங்களின் கூடுதலுக்குச் சமம்.




**நிரூபணம் : கொடுக்கப்பட்டது:** $\Delta ABC$ – யில் $\angle A = 90°$

**நீருபிக்க :** $AB^2 + AC^2 = BC^2$

**அமைப்பு :** AD ⊥ BC வரைக.

| எண் | கூற்று | காரணம் |
|---|---|---|
| 1. | ΔABC மற்றும் ΔABD – ஐ ஒப்பிடுக.<br>$\angle B$ பொதுவானது<br>$\angle BAC = \angle BDA = 90°$<br>எனவே, ΔABC ~ ΔABD<br>$\frac{AB}{BD} = \frac{BC}{AB}$<br>$AB^2 = BC \times BD$ ... (1) | $\angle BAC = 90°$ கொடுக்கப்பட்டது மற்றும்<br>$\angle BDA = 90°$ அமைப்பிலிருந்து<br><br>AA விதிமுறைப்படி |
| 2. | ΔABC மற்றும் ΔADC – ஐ ஒப்பிடுக.<br>$\angle C$ பொதுவானது<br>$\angle BAC = \angle ADC = 90°$<br>எனவே, ΔABC ~ ΔADC<br>$\frac{BC}{AC} = \frac{AC}{DC}$<br>$AC^2 = BC \times DC$ ... (2) | $\angle BAC = 90°$ கொடுக்கப்பட்டது மற்றும்<br>$\angle CDA = 90°$ அமைப்பிலிருந்து<br><br>AA விதிமுறைப்படி |

(1) மற்றும் (2) –ஐக் கூட்ட நாம் பெறுவது,

$$AB^2 + AC^2 = BC \times BD + BC \times DC$$


$$= BC(BD + DC)$$

$$AB^2 + AC^2 = BC \times BC = BC^2.$$ தேற்றம் நிரூபிக்கபட்டது.

**4. ஒரு முக்கோணத்தின் நடுக்கோடுகள் ஒரு புள்ளி வழிச் செல்லும் எனக் காட்டுக.**

**தீர்வு** முக்கோணத்தின் ஒவ்வொரு முனையிலிருந்தும் அதன் எதிர் பக்கத்தின் மையப்புற்றிக்கு வரையப்படும் கோட்டுத்துண்டு நடுக்கோடு எனப்படும்.

பக்கங்கள் BC, CA மற்றும் AB –யின் மையப்புள்ளிகள் முறையே D, E மற்றும் F–க்கு வரையப்படும் நடுக்கோடுகளானது சீவியன்களாகவும் இருக்கும்.




BC–ன் நடுபுள்ளி D. எனவே, BD = DC. அதாவது $\frac{BD}{DC} = 1$ ------ (1)

CA –ன் நடுபுள்ளி E. எனவே, CE = EA. அதாவது $\frac{CE}{EA} = 1$ ------ (2)

AB –ன் நடுபுள்ளி F. எனவே, AF = FB. அதாவது $\frac{AF}{FB} = 1$ ------ (3)

(1) (2) மற்றும் (3) –ஐ பெருக்க நாம் பெறுவது, $\frac{BD}{DC} \times \frac{CE}{EA} \times \frac{AF}{FB} = 1$

எனவே சீவாஸ் தேற்றம் நிரூபிக்கப்பட்டது.


ஆகையால், நடுக்கோடுகள் ஒரு புள்ளி வழிச் செல்கின்றன.

**5. படத்தில் காட்டியுள்ளபடி, 8 செ.மீ, 10 செ.மீ மற்றும் 12 செ.மீ பக்கங்கள் உடைய முக்கோணத்தினுள் ஒரு வட்டம் அமைந்துள்ளது எனில், AD, BE மற்றும் CFஐக் காண்க.**

**தீர்வு**

வெளியில் உள்ள புள்ளியிலிருந்து வரையப்படும் தொடுகோடு

AD = AF = x , DB = BE = y, EC = CF = z




AB + BC + AC = 30

⇒ AD + BD + BE + CE+ CF + FA = 30

⇒ x + y + y + z + z + x = 30

⇒ 2(x + y + z) = 30

x + y + z = 15 …….(1)

AB = AD + BD = 12

⇒ $x + y = 12$ …….(2)

BC = 8 ⇒ $y + z = 8$ …….(3)

AC = 10 ⇒ $x + z = 10$ …….(4)

(3) – (4) ⇒ $y - x = -2$ …….(5)

(5) + (2) ⇒ $2y = 10$ ⇒ $y = 5$


y = 5–ஐ (2) – ல் ⇒ $x = 7$ மற்றும் y = 5–ஐ (1) – ல் ⇒ z = 3

AD = 7 செ.மீ , BE = 5 செ.மீ, CF = 3 செ.மீ

**6. O –வை மையமாக உடைய வட்டத்திற்கு P–யிலிருந்து வரையப்பட்ட தொடுகோடு PQ. QOR ஆனது விட்டம் ஆகும். வட்டத்தில் ∠PQR = 120° எனில், ∠OPQ –ஐக் காண்க.**

**தீர்வு**

படத்திலிருந்து




$\angle ROQ = 180°$

$\angle ROP = 120°$

$\therefore \angle POQ = 60°$ ($\because$ $\angle ROQ = \angle ROP + \angle POQ$)

$\angle POQ + \angle OQP + \angle QPO = 180°$ ( Δ தின் பண்பின்படி)

$60° + 90° + \angle QPO = 180°$ ($\angle OQP = 90°$ Δதின் பண்பின்படி)

$\angle QPO = 30°$. $\angle OPQ = 30°$

# இயல் – 5
# ஆயத்தொலைவு வடிவியல்
## 1 MARKS

1. (–5,0), (0,–5) மற்றும் (5,0) ஆகிய புள்ளிகளால் அமைக்கப்படும் முக்கோணத்தின் பரப்பு

   (1) 0 ச.அலகுகள் (2) 5 ச.அலகுகள் **(3) 25 ச.அலகுகள்** (4) எதுவுமில்லை

2. ஒரு சுவரின் அருகே நடந்து சென்று கொண்டிருக்கும் ஒரு நபருக்கும் சுவருக்கும் இடையே உள்ள தூரம் 10 அலகுகள். சுவரை Y-அச்சாகக் கருதினால், அந்த நபர் செல்லும் பாதை என்பது.

   (1) x = 0 **(2) x = 10** (3) y = 0 (4) y = 10

3. x = 11 எனக் கொடுக்கப்பட்ட நேர்கோட்டின் சமன்பாடானது

   (1) ஆதிப் புள்ளி வழிச் செல்லும் (2) (0,11) என்ற புள்ளி வழிச் செல்லும்

   (3) X - அச்சுக்கு இணை **(4) Y - அச்சுக்கு இணை**

4. (5,7), (3,p) மற்றும் (6,6) என்பன ஒரு கோட்டமைந்தவை எனில், p –யின் மதிப்பு

   **(1) 9** (2) 12 (3) 3 (4) 6

5. 3x – y = 4 மற்றும் x + y = 8 ஆகிய நேர்கோடுகள் சந்திக்கும் புள்ளி

   **(1) (3,5)** (2) (2,4) (3) (5,3) (4) (4,4)

6. (12,3), (4,a) என்ற புள்ளிகளை இணைக்கும் கோாடடின் சாய்வு $\frac{1}{8}$ எனில் a –யின் மதிப்பு

   (1) 1 **(2) 2** (3) 4 (4) -5

7. (0,0) மற்றும் (–8,8) என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டிற்குச் செங்குத்தான கோட்டின் சாய்வு

   (1) -1 **(2) 1** (3) $\frac{1}{3}$ (4) -8

8. கோட்டுத்துண்டு PQ–யின் சாய்வு $\frac{1}{\sqrt{3}}$ எனில், PQ –க்கு செங்குத்தான இரு சம வெட்டியில் சாய்வு

   (1) 0 (2) $\sqrt{3}$ **(3) - $\sqrt{3}$** (4) $\frac{1}{\sqrt{3}}$

9. Yஅச்சில் அமையும் புள்ளி A–யின் செங்குத்துத் தொலைவு 8 மற்றும் X– அச்சில் அமையும் புள்ளி B–யின் கிடைமட்டத் தொலைவு 5 எனில், AB என்ற நேர்கோட்டின் சமன்பாடு

   (1) 8x – 5y = 40 **(2) 8x + 5y = 40** (3) y = 5 (4) x = 8

10. 8y= 4x + 21, என்ற நேர்கோட்டின் சமன்பாட்டிற்குக் கீழ்க்கண்டவற்றுள் எது உண்மை ?

    (1) சாய்வு 0.5 மற்றும் y வெட்டுத்துண்டு 1.6 **(2) சாய்வு 0.5 மற்றும் y வெட்டுத்துண்டு2.6**

    (3) சாய்வு 5 மற்றும் y வெட்டுத்துண்டு 2.6 (4) சாய்வு 5 மற்றம் y வெட்டுத்துண்டு 1.6

11. ஒரு நாற்கரமானது ஒரு சரிவகமாக அமையத் தேவையான நிபந்தனை

    **(1) இரு பக்கங்கள் இணை மற்றும் இரு பக்கங்கள் இணையற்றவை**

    (2) இரு பக்கங்கள் இணை (3) எதிரெதிர் பக்கங்கள் இணை (4) அனைத்துப் பக்கங்களும் சமம்

12. சாய்வைப் பயன்படுத்தி நாற்கரமானது ஓர் இணைகரமாக உள்ளது எனக் கூற நாம் காண வேண்டியவை

    (1) அனைத்துப் பக்கங்களின் நீளங்கள் (2) இரு பக்கங்களின் சாய்வுகள் மற்றும் நீளங்கள்

    (3) இரு சோடி எதிர் பக்கங்களின் சாய்வுகள் **(4) இரு பக்கங்களின் சாய்வுகள்**

13. (2,1) ஐ வெட்டுப் புள்ளியாகக் கொண்ட இரு நேர்கோடுகள்

    (1) x + 3y – 3 = 0; x – y – 7 =0 (2) 3x + y = 3; x + y =7

    **(3) x + y = 3; 3x + y = 7** (4) x – y – 3 = 0; 3x – y – 7 = 0

## 2 MARKS

**1. (−3,5), (5,6) மற்றும் (5,−2)ஆகியவற்றை முனைகளாகக் கொண்ட முக்கோணத்தின் பரப்பைக் காண்க.**

**தீர்வு** Δன் பரப்பு $= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix}$

$= \frac{1}{2}\begin{vmatrix} -3 & 5 \\ 5 & 6 \\ 5 & -2 \\ -3 & 5 \end{vmatrix} = \frac{1}{2}$ [(-18-10+25) – (25 + 30 +6)]

$=\frac{1}{2}$ [-3-61] $= \left|\frac{-64}{2}\right|$ = 32 ச.அலகுகள்

**2. P(−1.5, 3), Q (6,−2) மற்றும் R(−3, 4) ஆகிய புள்ளிகள் ஒரே நேர்கோட்டில் அமையும் எனக் காட்டுக.**

**தீர்வு** Δ PQR ன் பரப்பு = 0

$\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -1.5 & 3 \\ 6 & -2 \\ -3 & 4 \\ -1.5 & 3 \end{vmatrix}$

$= \frac{1}{2}$ [(3+24-9) – (18+ 6 - 6) ] $= \frac{1}{2}$ [18 – 18] = 0.

∴ கொடுக்கப்பட்ட மூன்று புள்ளிகள் ஒரே நேர்கோட்டில் அமையும்.

**3. A (−1, 2), B( k,−2) மற்றும் C (7, 4) ஆகியவற்றை வரிசையான முனைப் புள்ளிகளாகக் கொண்ட முக்கோணத்தின் பரப்பு 22 சதுர அலுகுகள் எனில், k –யின் மதிப்புக் காண்க.**

**தீர்வு** A (−1, 2), B( k,−2) மற்றும் C (7, 4) ஆகியன முனைப் புள்ளிகள் ஆகும்

ΔABC–யின் பரப்பு 22 சதுர அலகுகள்

$\frac{1}{2}\begin{vmatrix} -1 & 2 \\ k & -2 \\ 7 & 4 \\ -1 & 2 \end{vmatrix} = 22$

$\begin{vmatrix} -1 & 2 \\ k & -2 \\ 7 & 4 \\ -1 & 2 \end{vmatrix} = 44$

{(2 + 4k + 14) – (2k – 14 -4)} = 44

4k + 16 - 2k + 18 = 44

2k + 34 = 44. ஆகையால், 2k = 10 எனவே k = 5

**4. ஓர் அறையின் தளமானது ஒரே மாதிரியான முக்கோண வடிவத் தரை ஓடுகளைக் கொண்டு (tiles) அமைக்கப்படுகிறது. அதில் ஓர் ஓட்டின் முனைகள் (−3,2), (−1,−1) மற்றும் (1,2) ஆகும். தரைத்தளத்தை முழுமையாக அமைக்க 110 ஓடுகள் தேவைப்படுகின்றது எனில் அதன் பரப்பைக் காண்க.**

**<u>தீர்வு</u>**

ஓர் ஓட்டின் முனை புள்ளிகள் **(−3,2), (−1,−1)** மற்றும் **(1,2)** ஆகும்.

இந்த ஓட்டின் பரப்பு = $\frac{1}{2}\begin{vmatrix} -3 & 2 \\ -1 & -1 \\ 1 & 2 \\ -3 & 2 \end{vmatrix}$ ச.அலகுகள்

$= \frac{1}{2}$ **(12) = 6** ச.அலகுகள்

தரைத்தளமானது ஒரே மாதிரியான **110** ஓடுகளால் நிரப்பப்படுவதால்,

தரைத்தளத்தின் பரப்பு = **110 × 6 = 660** ச.அலகுகள்

**5. கீழ்க்கண்ட புள்ளிகளால் அமைக்கப்படும் முக்கோணத்தின் பரப்பு காண்க.**
**(1, -1), (-4, 6) மற்றும் (-3, -5)**

**<u>தீர்வு</u>**

.Δ ன் பரப்பு = $\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} 1 & -1 \\ -4 & 6 \\ -3 & -5 \\ 1 & -1 \end{vmatrix}$

$= \frac{1}{2}[(6 + 20 + 3) - (4 - 18 - 5)]$

$= \frac{1}{2}[29 + 19] \quad = \frac{1}{2}[48] = 24$ ச.அ

**6. கீழ்க்கண்ட புள்ளிகளால் அமைக்கப்படும் முக்கோணத்தின் பரப்பு காண்க.**
**(−10, −4), (−8, −1) மற்றும் (−3, −5)**

**<u>தீர்வு</u>**

Δ ன் பரப்பு = $\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -10 & -4 \\ -8 & -1 \\ -3 & -5 \\ -10 & -4 \end{vmatrix}$

$= \frac{1}{2}[(10 + 40 + 12) - (32 + 3 + 50)]$

$= \frac{1}{2}[62 - 85] \quad = \frac{1}{2}[-23] = -11.5 = 11.5$ ச.அ

**7. கீழ்க்காணும் புள்ளிகள் ஒரே நேர்கோட்டில் அமையுமா எனத் தீர்மானிக்கவும். $\left(-\frac{1}{2}, 3\right)$, (−5, 6) மற்றும் (−8, 8)**

**<u>தீர்வு</u>**

Δ ன் பரப்பு $= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -\frac{1}{2} & 3 \\ -5 & 6 \\ -8 & 8 \\ -\frac{1}{2} & 3 \end{vmatrix}$

$= \frac{1}{2}[(-3 - 40 - 24) - (-15 - 48 - 4)]$

$= \frac{1}{2}[(-67) - (-67)] = 0$ ச.அ.

**8. வரிசையில் அமைந்த முக்கோணத்தின் முனைப் புள்ளிகளும், அதன் பரப்பளவுகளும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள. ‘p’ –யின் மதிப்பைக் காண்க**

| முனைப் புள்ளிகள் | பரப்பு (சதுர அலகில்) |
|---|---|
| **(0,0), (p,8), (6,2)** | **20** |

**<u>தீர்வு</u>**

$\Delta ABC$ ன் பரப்பு = **20 ச.அ**

$$\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = 20 \quad \Rightarrow \frac{1}{2}\begin{vmatrix} 0 & 0 \\ p & 8 \\ 6 & 2 \\ 0 & 0 \end{vmatrix} = 20$$

$(0 + 2p + 0) - (0 + 48 + 0) = 40$

**2**p – **48 = 40**

**2**p = 88

p = 44

**9. வரிசையில் அமைந்த முக்கோணத்தின் முனைப் புள்ளிகளும், அதன் பரப்பளவுகளும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள. 'p' –யின் மதிப்பைக் காண்க**

| முனைப் புள்ளிகள் | பரப்பு (சதுர அலகில்) |
|---|---|
| **(p,p), (5,6), (5,-2)** | **32** |

**<u>தீர்வு</u>** $\Delta$ ன் பரப்பு =**32**

$$\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = 32 \quad \Rightarrow \frac{1}{2}\begin{vmatrix} p & p \\ 5 & 6 \\ 5 & -2 \\ p & p \end{vmatrix} = 32$$

$$\begin{vmatrix} p & p \\ 5 & 6 \\ 5 & -2 \\ p & p \end{vmatrix} = 64$$

$(6p - 10 + 5p) - (5p + 30 - 2p) = 64$

11p – 10 – (3p +30) = 64 ⇒ 11p–10–3p – 30 = 64

8p – 40 = 64 ⇒ 8p = 64 + 40

8p = 104 ⇒ p = $\frac{104}{8}$ ⇒ p = 13

**10. கொடுக்கப்பட்ட புள்ளிகள் ஒரு கோட்டில் அமைந்தவை எனில், `a` –யின் மதிப்பைக் காண்க.**

**(2,3), (4,a) மற்றும் (6,-3)**

**<u>தீர்வு</u>**

$\Delta$ = 0ச.அ

$$\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = 0 \Rightarrow \frac{1}{2}\begin{vmatrix} 2 & 3 \\ 4 & a \\ 6 & -3 \\ 2 & 3 \end{vmatrix} = 0$$

$\frac{1}{2}$ [(2a – 12 + 18) – (12 + 6a - 6)] = 0

$(2a + 6) - (6 + 6a) = 0 \times \frac{2}{1}$ ⇒ 2a + 6 – 6 – 6a = 0

-4a=0 ⇒a=0

∴ a = 0

**11. கொடுக்கப்பட்ட புள்ளிகளை இணைக்கும் நேர்க்கோட்டின் சாய்வைக் காண்க (-6,1) மற்றும் (–3,2)**

**தீர்வு**

சாய்வு, $m = \frac{y_2-y_1}{x_2-x_1} = \frac{2-1}{-3-(-6)} = \frac{2-1}{-3+6}$

∴சாய்வு, $m = \frac{1}{3}$

**12. கொடுக்கப்பட்ட புள்ளிகளை இணைக்கும் நேர்க்கோட்டின் சாய்வைக் காண்க.**

$\left(-\frac{1}{3}, \frac{1}{2}\right)$ **மற்றும்** $\left(\frac{2}{7}, \frac{3}{7}\right)$

**தீர்வு**

சாய்வு, $m = \frac{y_2-y_1}{x_2-x_1} = \frac{\frac{3}{7}-\frac{1}{2}}{\frac{2}{7}-(-\frac{1}{3})} = \frac{\frac{6-7}{14}}{\frac{6+7}{21}} = -\frac{1}{14} \times \frac{21}{13} = -\frac{3}{26}$

∴சாய்வு, $m = -\frac{3}{26}$

**13. கொடுக்கப்பட்ட புள்ளிகளை இணைக்கும் நேர்க்கோட்டின் சாய்வைக் காண்க.**

**(14, 10 ) மற்றும் (14,– 6)**

**தீர்வு**

சாய்வு, $m = \frac{y_2-y_1}{x_2-x_1} = \frac{-6-10}{14-14} = \frac{-16}{0}$

∴சாய்வு, $m = \frac{-16}{0}$

**14. (–2, 5), (6, –1) மற்றும் (2,2) ஆகிய புள்ளிகள் ஒரு கோடமைந்த புள்ளிகள் எனக் காட்டு.**

**தீர்வு**

கொடுக்கப்பட்டுள்ள புள்ளிகளை A, B, C என கொள்வோம்

AB –யின் சாய்வு = $\frac{-1-5}{6+2} = \frac{-6}{8} = \frac{-3}{4}$

BC –யின் சாய்வு = $\frac{2+1}{2-6} = \frac{3}{-4} = \frac{-3}{4}$

AB –யின் சாய்வு = BC –யின் சாய்வு

எனவே, A, B, C என்ற புள்ளிகள் ஒரே நேர்கோட்டின் மேல் அமைந்துள்ளன. ஆகவே, A, B, C என்பன ஒரு கோட்டமைந்த புள்ளிகள் ஆகும்.

**15. (–3, –4), (7, 2) மற்றும் (12, 5) என்ற புள்ளிகள் ஒரு கோடமைந்தவை எனக் காட்டுக.**

**தீர்வு**

கொடுக்கப்பட்டுள்ள புள்ளிகளை A, B, C என கொள்வோம்

AB–யின் சாய்வு = $\frac{2-(-4)}{7-(-3)} = \frac{6}{10} = \frac{3}{5}$ .......(1)

BC–யின் சாய்வு = $\frac{5-2}{12-7} = \frac{3}{5}$ .......(2)

AC–யின் சாய்வு = $\frac{5-(-4)}{12-(-3)} = \frac{9}{15} = \frac{3}{5}$ .......(3)

**(1), (2), (3)** ⇒ A, B, C என்பன ஒரு கோடமைவன ஆகும்.

**16. (3, −1), (a, 3) மற்றும் (1, −3) ஆகிய மூன்று புள்ளிகள் ஒரு கோடமைந்தவை எனில் a−யின் மதிப்பு காண்க ?**

**<u>தீர்வு</u>**

A (3, −1), B (a, 3) மற்றும் C(1, −3) ஆகிய மூன்று புள்ளிகள் ஒரு கோடமைந்தவை.

∴ $AB$ – யின் சாய்வு = BC –யின் சாய்வு

$\Rightarrow \dfrac{3-(-1)}{a-3} = \dfrac{-3-3}{1-a}$

$\Rightarrow \dfrac{4}{a-3} = \dfrac{-6}{1-a}$

⇒ 4 – 4a = - 6a + 18

⇒ 2a = 14 ⇒ $a = 7$

## <u>5 MARKS</u>

**1. (8, 6), (5, 11), (−5, 12) மற்றும் (−4, 3) ஆகிய புள்ளிகளை முனைகளாக கொண்ட நாற்கரத்தின் பரப்பைக் காண்க.**

**<u>தீர்வு</u>** நாற்கரத்தின் பரப்பைக் காண்பதற்கு முன்பாக

கொடுக்கப்பட்ட புள்ளிகளை வரைபடத்தில் குறிக்க வேண்டும்

A(8, 6), B (5, 11), C(−5, 12) மற்றும் D(−4, 3) என்பன முனைப் புள்ளிகள்

ஆகும். எனவே, நாற்கரம் ABCD – யின் பரப்பு

$$\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_4 & y_4 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} 8 & 6 \\ 5 & 11 \\ -5 & 12 \\ -4 & 3 \\ 8 & 6 \end{vmatrix}$$

$= \frac{1}{2}$ [( 88+ 60–15 – 24) – (30 –55– 48 + 24 )]

$= \frac{1}{2}$ [88+60-15-24-30+55+48-24]

$= \frac{1}{2}$ [88+60+55+48-15-24-30-24]

$= \frac{1}{2}[251-93]$

$= \frac{1}{2}$ [158] = 79 ச.அலகுகள்

**2. கொடுக்கப்பட்ட படமானது ஒரு வளாகத்தில் புதிய வாகன நிறுத்தம் ஏற்படுத்த அமைக்கப்பட்ட பகுதியைக் காட்டுகிறது. இதை அமைப்பதற்கு ஒரு சதுர அடிக்கு ₹1300 செலவாகும் என மதிப்பிடப்படுகிறது எனில், வாகன நிறுத்தம் ஏற்படுத்துவதற்குத் தேவையான மொத்த செலவைக் கணக்கிடவும்.**

**<u>தீர்வு</u>** A(2, 2), B (5, 5), C(4, 9) மற்றும் D(1, 7) மற்றும் என்பது

நாற்கர வடிக வாகன நிறுத்தத்தின் முனைப் புள்ளிகள் ஆகும்

எனவே, வாகன நிறுத்தத்தின் பரப்பு

$$\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_4 & y_4 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} 2 & 2 \\ 5 & 5 \\ 4 & 9 \\ 1 & 7 \\ 2 & 2 \end{vmatrix} = \frac{1}{2}[(10+ 45 +28 + 2) – (10 + 20 + 9 + 14)]$$

$= \frac{1}{2}$ [85 – 53]

$= \frac{1}{2}$ [32] = 16 சதுர அடிகள்

எனவே, வாகன நிறுத்தத்தின் பரப்பு = **16** சதுர அடிகள்,


ஒரு சதுர அடி அமைக்க ஆகும் செலவு = **₹1300**

ஆகையால் , வாகன நிறுத்தம் அமைக்க ஆகும் மொத்தச் செலவு = 16 x 1300 = ₹ 20800

**3. கொடுக்கப்பட்ட புள்ளிகளை முனைகளாகக் கொண்ட நாற்கரத்தின் பரப்பைக் காண்க ?**

**(i) (−9, − 2), (−8, −4), (2, 2) மற்றும் (1, −3) (ii) (-9, 0) , (-8, 6), (-1, -2) மற்றும் (-6, -3)**

**<u>தீர்வு</u> (i)** A(-9,-2), B(-8,-4), C(**1**, **−3**), D(**2**,**2**) என்க




நாற்கரத்தின் பரப்பு $= \frac{1}{2}\begin{vmatrix} -9 & -2 \\ -8 & -4 \\ 1 & -3 \\ 2 & 2 \\ -9 & -2 \end{vmatrix}$

$= \frac{1}{2}$ [(36 +24 +2 - 4) – (16 – 4 -6 - 18)]

$= \frac{1}{2}$ [ 58 + 12 ] $= \frac{1}{2}$ [70] = 35 ச.அ

**(ii) (−9, 0), (−8, 6), (−1, −2) மற்றும் (−6, −3)**

**<u>தீர்வு</u>** A(-8,6), B(-9,0), C(-6, -3), D(-1, -2)



நாற்கரத்தின் பரப்பு $= \frac{1}{2}\begin{vmatrix} -8 & 6 \\ -9 & 0 \\ -6 & -3 \\ -1 & -2 \\ -8 & 6 \end{vmatrix}$

$= \frac{1}{2}$ [(0 +27+12 - 6) – (-54 + 0 + 3 + 16)]

$= \frac{1}{2}$ [33 + 35] $= \frac{1}{2}$ [68] = 34 ச.அ

**4. (−4,−2), (−3, k), (3, −2) மற்றும் (2, 3) ஆகியவற்றை முனைகளாகக் கொண்ட நாற்கரத்தின் பரப்பு 28 ச.அலகுகள் எனில், k− யின் மதிப்புக் காண்க.**

**<u>தீர்வு</u>** $\frac{1}{2}\begin{vmatrix} -4 & -2 \\ -3 & k \\ 3 & -2 \\ 2 & 3 \\ -4 & -2 \end{vmatrix} = 28$


⇒ (-4k + 6 + 9 - 4) – ( 6 +3k - 4 -12) = 56

⇒ (11 – 4k) – (3k – 10 ) = 56

$\Rightarrow 11 - 4k - 3- +10 = 56$

⇒ 21 – 7k = 56 ⇒ 7k = -35 ⇒ k = -5

**5. நாற்கர வடிவ நீச்சல் குளத்தின் கான்கிரீட் உள்முற்றமானது படத்தில் காட்டியுள்ளபடி அமைக்கப்பட்டுள்ளது எனில், உள்முற்றத்தின் பரப்பு காண்க ?**




**<u>தீர்வு</u>**

உள்முற்றத்தின் பரப்பு = ABCD யின் பரப்பு − EFGH யின் பரப்பு

$$= \frac{1}{2}\begin{vmatrix} -4 & -8 \\ 8 & -4 \\ 6 & 10 \\ -10 & 6 \\ -4 & -8 \end{vmatrix} - \frac{1}{2}\begin{vmatrix} -3 & -5 \\ 6 & -2 \\ 3 & 7 \\ -6 & 4 \\ -3 & -5 \end{vmatrix}$$

$= \frac{1}{2}$ [(16+80+36 + 80)–(– 64 - 24 - 100 - 24)] – $\frac{1}{2}$ [(6+42+12+30) – (–30-6-42-12)]

$= \frac{1}{2}$ [212 – (-212)] - $\frac{1}{2}$ [90- (-90)]

$= \frac{1}{2}$ [424] - $\frac{1}{2}$ [180]

= 212 – 90 = 122 சதுர அலகுகள்

**6. A (–5, –4), B(1, 6) மற்றும் C(7, –4) ஆகியவற்றை முனைப் புள்ளிகளாகக் கொண்ட முக்கோண வடிவக் கண்ணாடிக்கு வர்ணம் பூசப்படுகிறது. 6 சதுர அடி பரப்புக்கு வர்ணம் பூச ஒரு வாளி தேவைப்படுகிறது எனில் கண்ணாடியின் முழுப் பகுதியையும் ஒரு முறை வர்ணம் பூச எத்தளை வாளிகள் தேவைப்படும் ?**

**<u>தீர்வு</u>**

தேவையான வாளியின் பரப்பளவு = $\dfrac{\Delta ABC\text{–ன் பரப்பளவு}}{\text{ஒரு வாளியினால் நிரப்பப்படும் பகுதியின் பரப்பளவு}}$

$\Delta$ABC–ன் பரப்பளவு $= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -5 & -4 \\ 1 & 6 \\ 7 & -4 \\ -5 & -4 \end{vmatrix}$

$= \frac{1}{2}$ [(-30 – 4 - 28)- (-4 + 42 + 20)]

$= \frac{1}{2}$ [-62 - 58]

$= \frac{1}{2}$ [-120]

= **60** ச.அ

∴ வாளியின் பரப்பளவு = $\frac{60}{6} = 10$ சதுர அலகுகள்

**7. A (2.5, 3.5), B(10, -4) , C (2.5, –2.5) மற்றும் D(-5, 5) ஆகியன இணைகரத்தின் முனைப் புள்ளிகள் எனக் காட்டுக.**

**<u>தீர்வு</u>** A(2.5, 3.5) B = (10, -4) , AB ன் சாய்வு = $\frac{y_2-y_1}{x_2-x_1} = \frac{-4-3.5}{10-2.5} = -\frac{7.5}{7.5}$ = **–1**

C ( 2.5, - 2.5 ), D (-5, 5) ,CD ன் சாய்வு = $\frac{5-(-2.5)}{-5-2.5} = \frac{5+2.5}{-7.5} = \frac{7.5}{-7.5}$ = **–1**

∴AB ன் சாய்வு = CD ன் சாய்வு . எனவே AB யும் CD யும் இணைகோடுகள்.

B ( 10, -4 ), C (2.5, -2.5) , BC ன் சாய்வு = $\frac{2.5-(-4)}{-2.5-10} = \frac{-2.5+4}{-7.5} = \frac{1.5}{-7.5} \times \frac{10}{10} = \frac{15}{-75} = -\frac{1}{5}$

A ( 2.5, 3.5 ), D (-5, 5) , AD ன் சாய்வு = $\frac{5-(3.5)}{-5-2.5} = \frac{1.5}{-7.5} = \frac{1.5}{-7.5} \times \frac{10}{10} = \frac{15}{-75} = -\frac{1}{5}$

∴BC ன் சாய்வு = AD ன் சாய்வு . எனவே BC யும் AD யும் இணைகோடுகள்.

எனவே ABCD ஓர் இணைகரத்தை அமைக்கும்

**8. A (2, 2), B(-2, -3) , C (1, −3) மற்றும் D(x, y) ஆகிய புள்ளிகள் இணைகரத்தை அமைக்கும் எனில், x மற்றும் y –யின் மதிப்பைக் காண்க.**

**தீர்வு**

A (2, 2), B(-2, -3) , C (1, −3) மற்றும் D(x, y) என்ற புள்ளிகள் இணைகரத்தை அமைக்கும்

AB || CD மற்றும் BC ||AD

∴ AD - ன் சாய்வு = BC- ன் சாய்வு

$\Rightarrow \frac{y-2}{x-2} = \frac{-3-(-3)}{1-(-2)} \Rightarrow \frac{y-2}{x-2} = 0$

$y - 2 = 0 \Rightarrow y = 2$

CD - ன் சாய்வு = AB- ன் சாய்வு

$\Rightarrow \frac{y-(-3)}{x-1} = \frac{-3-2}{-2-2} \Rightarrow \frac{y+3}{x-1} = \frac{-5}{-4}$

$\Rightarrow \frac{5}{x-1} = \frac{5}{4} \Rightarrow x-1 = 4 \Rightarrow x = 5$

$\therefore x = 5, y = 2$

# இயல் – 6

# முக்கோணவியல்

## 1 MARKS

1. ஒரு கோபுரத்தின் உயரத்திற்கும், அதன் நிழலின் நீளத்திற்கும் உள்ள விகிதம் $\sqrt{3} : 1$, எனில் சூரியனைக் காணும் ஏற்றக்கோண அளவானது

   (1) 90° **(2) 60°** (3) 45° (4) 30°

2. ஒரு மின்கம்பமானது அதன் அடியில் சமதளப் பரப்பில் உள்ள ஒரு புள்ளியில் 30° கோணத்தை ஏற்படுத்துகிறது. முதல் புள்ளிக்கு bமீ உயரத்தில் உள்ள இரண்டாவது புள்ளியிலிருந்து மின்கம்பத்தின் அடிக்கு இறக்ககோணம் 60°. எனில், மின் கம்பத்தின் உயரமானது.

   **(1) $\frac{b}{3}$** (2) $\frac{b}{\sqrt{3}}$ (3) $\sqrt{3}$ b (4) $\frac{b}{2}$

3. ஒரு கோபுரத்தின் உயரம் 60 மீ ஆகும். சூரியனைக் காணும் ஏற்றக்கோணம் 30° –யிலிருந்து 45° ஆக உயரும்போது, கோபுரத்தின் நிழலானது x மீ குறைகிறது எனில், x ன் மதிப்பு

   (1) 43 m (2) 41.92 m **(3) 43.92** m (4) 45.6 m

4. பல அடுக்குக் கட்டடத்தின் உச்சியிலிருந்து 20மீ உயரமுள்ள கட்டடத்தின் உச்சி, அடி ஆகியவற்றின் இறக்கக்கோணங்கள் முறையே 30° மற்றும் 60° எனில், பல அடுக்குக் கட்டடத்தின் உயரம் மற்றும் இரு கட்டடங்களுக்கு இடையேயுள்ள தொலைவானது (மீட்டரில்)

   **(1) $30, 10\sqrt{3}$** (2) $30, 5\sqrt{3}$ (3) 20,10 (4) $20, 10\sqrt{3}$

5. இரண்டு நபர்களுக்கு இடைப்பட்ட தொலைவு x மீ ஆகும். முதல் நபரின் உயரமானது இரண்டாவது நபரின் உயரத்தைப் போல இரு மடங்காக உள்ளது. அவர்களுக்கு இடைப்பட்ட தொலைவு நேர்கோட்டின் மையப் புள்ளியிலிருந்து இரு நபர்களின் உச்சியின் ஏற்றக் கோணங்கள் நிரப்புக்கோணங்கள் எனில், குட்டையாக உள்ள நபரின் உயரம்(மீட்டரில்) காண்க.


   (1)2x (2) $\sqrt{2x}$ (3) $\frac{x}{\sqrt{2}}$ **(4) $\frac{x}{2\sqrt{2}}$**

6. ஓர் ஏரியின் மேலே h மீ உயரத்தில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து மேகத்திற்கு உள்ள ஏற்றக்கோணம் $\beta$. மேக பிம்பத்தின் இறக்கக் கோணம் 45° எனில், ஏரியில் இருந்து மேகத்திற்கு உள்ள உயரமானது.

   (1) $\frac{h(1-tan\beta)}{1+tan\beta}$ **(2) $\frac{h(1+tan\beta)}{1-tan\beta}$** (3) $h\tan(45° - \beta)$ (4) இவை ஒன்றும் இல்லை.

## 2 MARKS

**1. ஒரு கோபுரம் தரைக்குச் செங்குத்தாக உள்ளது. கோபுரத்தின் அடிப்பகுதியிலிருந்து தரையில் 48 மீ, தொலைவினில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து கோபுர உச்சியின் ஏற்றக்கோணம் 30° எனில், கோபுரத்தின் உயரத்தைக் காண்க.**




<u>தீர்வு</u> $\Delta PQR$ ல் $\tan\theta = \frac{\text{எதிர்பக்கம்}}{\text{கர்ணம்}}$


$$\tan 30° = \frac{h}{48}$$

$$\frac{1}{\sqrt{3}} = = \frac{h}{48}$$

$$h = \frac{48}{\sqrt{3}} \times \frac{\sqrt{3}}{\sqrt{3}} = \frac{48\sqrt{3}}{3}$$

$h = 16\sqrt{3}$ மீ

**2. தரையிலிருந்து ஒரு பட்டம் 75மீ உயரத்தில் பறக்கிறது. ஒரு நூல் கொண்டு தற்காலிகமாகத் தரையின் ஒரு புள்ளியில் பட்டம் கட்டப்பட்டுள்ளது. நூல் தரையுடன் ஏற்படுத்தும் சாய்வுக் கோணம் 60° எனில், நூலின் நீளம் காண்க. (நூலை ஒரு நேர்க்கோடாக எடுத்துக்கொள்ளவும்.)**




<u>தீர்வு</u> $\Delta ABC$ யில் $\sin\theta = \frac{\text{எதிர்பக்கம்}}{\text{கர்ணம்}}$

$$\sin 60° = \frac{75}{AC}$$

$$\frac{\sqrt{3}}{2} = = \frac{75}{AC}$$


$$AC = \frac{75 \times 2}{\sqrt{3}} \times \frac{\sqrt{3}}{\sqrt{3}} = \frac{150\sqrt{3}}{3}$$

$AC = 50\sqrt{3}$ மீ

∴கயிற்றின் நீளம் = **50** $\sqrt{3}$ மீ

**3. $10\sqrt{3}$ மீ. உயரமுள்ள கோபுரத்தி ன்அடியிலிருந்து 30 மீ தொலைவில் தரையில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து கோபுரத்தின் உச்சியின் ஏற்றக்கோணத்தைக் காண்க.**

<u>தீர்வு</u> $\Delta ABC$ யில் $\tan\theta = \frac{\text{எதிர்பக்கம்}}{\text{அடுத்துள்ள பக்கம்}}$




$$\tan\theta = \frac{10\sqrt{3}}{30}$$


$$\tan\theta = \frac{\sqrt{3}}{3}$$

$$\tan\theta = \frac{\sqrt{3}}{\sqrt{3}\sqrt{3}}$$

$$\tan\theta = \frac{1}{\sqrt{3}} \qquad \theta = 30°$$

4. **20மீ உயரமுள்ள கட்டிடத்தின் உச்சியில் ஒரு விளையாட்டு வீரர் அமர்ந்து கொண்டு தரையில் உள்ள ஒரு பந்தை 60° இறக்கக்கோணத்தில் காண்கிறார் எனில் கட்டிட அடிப்பகுதிக்கும் பந்திற்கும் இடையேயுள்ள தொலைவைக் காண்க. ($\sqrt{3} = 1.732$)**

**<u>தீர்வு</u>**




கட்டிடத்தின் உயரம், BC = **20** மீ என்க

தரையில் பந்து இருக்கும் இடத்தை $A$ என்க

செங்கோண முக்கோணம் $ABC$ யில் $\tan\theta = \frac{BC}{AB}$

$\tan 60° = \frac{20}{AB}$


$\sqrt{3} = \frac{20}{AB}$

$AB = \frac{20}{\sqrt{3}} \times \frac{\sqrt{3}}{\sqrt{3}}$

$BC = \frac{20\sqrt{3}}{3} = \frac{20 \times 1.732}{3} = \frac{34.640}{3} = 11.54$ செ.மீ

5. **$50\sqrt{3}$ மீ உயரமுள்ள ஒரு பாறையின் உச்சியிலிருந்து 30° இறக்கக்கோணத்தில் தரையிலுள்ள மகிழுந்து ஒன்று பார்க்கப்படுகிறது எனில், மகிழுந்திற்கும் பாறைக்கும் இடையேயுள்ள தொலைவைக் காண்க.**

**<u>தீர்வு</u>** $\Delta RKC$ C யில் $\tan\theta = \frac{\text{எதிர்பக்கம்}}{\text{அடுத்துள்ள பக்கம்}}$




$\tan 30° = \frac{50\sqrt{3}}{KC}$

$\frac{1}{\sqrt{3}} = \frac{50\sqrt{3}}{KC}$

$KC = 50\sqrt{3} \times \sqrt{3}$

$= 50\,(3) = 150$ மீ

# இயல் – 7

# அளவியல்

**1 MARKS**

**1.** 15 செ.மீ உயரமும் 16 செ.மீ விட்டமும் கொண்ட ஒரு நேர்வட்டக் கூம்பின் வளைபரப்பு

(1) $68\pi$ ச.செ.மீ (2) $60\pi$ ச.செ.மீ **(3) $136\pi$ ச.செ.மீ** (4) $120\pi$ ச.செ.மீ

**2.** r அலகுகள் ஆரம் உடைய இரு சம அரைக் கோளங்களின் அடிப்பகுதிகள் இணைக்கப்படும் போது உருவாகும் திண்மத்தின் புறப்பரப்பு

(1) $3\pi r^2$ ச.அ **(2) $4\pi r^2$ ச.அ** (3) $6\pi r^2$ ச.அ (4) $8\pi r^2$ ச.அ

**3.** ஆரம் 5 செ.மீ மற்றும் சாயுயரம் 13 செ.மீ உடைய நேர்வட்டக் கூம்பின் உயரம்

(1) 5 செ.மீ (2) 10 செ.மீ **(3) 12 செ.மீ** (4) 13 செ.மீ

**4.** ஒரு உருளையின் உயரத்தை மாற்றாமல் அதன் ஆரத்தைப் பாதியாகக் கொண்டு புதிய உருளை உருவாக்கப்படுகிறது. புதிய மற்றும் முந்தைய உருளைகளின் கன அளவுகளின் விகிதம்

(1) 1:6 (2) 1:8 (3) 1:2 **(4) 1:4**

**5.** ஒரு உருளையின் ஆரம் அதன் உயரத்தில் மூன்றில் ஒரு பங்கு எனில், அதன் மொத்தப் புறப்பரப்பு

**(1) $\frac{8\pi h^2}{9}$ ச.அ** (2) $\frac{9\pi h^2}{8}$ ச.அ (3) $\frac{56\pi h^2}{9}$ ச.அ (4) $24\pi h^2$ ச.அ

**6.** ஓர் உள்ளீடற்ற உருளையின் வெளிப்புற மற்றும் உட்புற ஆரங்களின் கூடுதல் 14 செ.மீ மற்றும் அதன் தடிமன் 4 செ.மீ ஆகும். உருளையின் உயரம் 20 செ.மீ எனில், அதனை உருவாக்கப் பயன்பட்ட பொருளின் கன அளவு

(1) $56\pi$ க.செ.மீ (2) $3600\pi$ க.செ.மீ (3) $5600\pi$ க.செ.மீ **(4) $11200\pi$ க.செ.மீ**

**7.** ஒரு கூம்பின் அடிப்புற ஆரம் மும்மடங்காகவும் உயரம் இரு மடங்காகவும் மாறினால் கன அளவு எத்தனை மடங்காக மாறும் ?

(1) 6 மடங்கு (2) 12 மடங்கு **(3)18 மடங்கு** (4) மாற்றமில்லை

**8.** ஓர் அரைக்கோளத்தின் மொத்தப் பரப்பு அதன் ஆரத்தினுடைய வர்க்கத்தின் ––––– மடங்காகும்.

(1) $4\pi$ **(2) $3\pi$** (3) $2\pi$ (4) $\pi$

**9.** x- செ.மீ ஆரமுள்ள ஒரு திண்மக் கோளம் அதே ஆரமுள்ள ஒரு கூம்பாக மாற்றப்படுகிறது எனில், கூம்பின் உயரம் **(1) $4x$ செ.மீ** (2) 3x செ.மீ (3) 2x செ.மீ (4) x செ.மீ

10. 16 செ.மீ உயரமுள்ள ஒரு நேர்வட்டக் கூம்பின் இடைக்கண்ட ஆரங்கள் 8 செ.மீ மற்றும் 20 செ.மீ எனில், அதன் கன அளவு (1) $3228\pi$ க.செ.மீ (2) 3240 $\pi$ க.செ.மீ **(3) $3328\pi$ க.செ.மீ** (4) $3340\pi$ க.செ.மீ

**11.** கீழ்க்காணும் எந்த இரு உருவங்களை இணைத்தால் ஒரு இறகுபந்தின் வடிவம் கிடைக்கும்

**(1) கூம்பின் இடைக்கண்டம் மற்றும் அரைக்கோணம்** **(2)** உருளை மற்றும் கோளம்

**(3)** கோளம் மற்றும் கூம்பு **(4)** அரைக்கோளம் மற்றும் கூம்பு

**12.** $r_1$ அலகுகள் ஆரமுள்ள ஒரு கோளப்பந்து உருக்கப்பட்டு $r_2$அலகுகள் ஆரமுடைய 8 சமகோள பந்துகளாக ஆக்கப்படுகிறது எனில் $r_1: r_2$

(1) 1 : 4 (2) 4 : 1 (3) 1:2 **(4) 2:1**

**13.** 1 செ.மீ ஆரமும் 5 செ.மீ உயரமும் கொண்ட ஒரு மர உருளையிலிருந்து அதிகபட்சக் கன அளவு கொண்ட கோளம் வெட்டி எடுக்கப்படுகிறது எனில், அதன் கன அளவு (க.செ.மீ–ல்)

(1) $5\pi$ **(2) $\frac{4}{3}\pi$** (3) $\frac{10}{3}\pi$ (4) $\frac{20}{3}\pi$

**14.** இடைக்கண்டத்தை ஒரு பகுதியாகக் கொண்ட ஒரு கூம்பின் உயரம் மற்றும் ஆரம் முறையே $h_1$அலகுகள் மற்றும் $r_1$அலகுகள் ஆகும். இடைக்கண்டத்தின் உயரம் மற்றும் சிறிய பக்க ஆரம் முறையே $h_2$ அலகுகள் மற்றும் $r_2$அலகுகள் மற்றும் $h_2 : h_1 = 1 : 2$எனில் $r_2 : r_1$ ன் மதிப்பு

**(1) 1:2** (2) 2:1 (3) 1:3 (4) 3:1

15. சமமான விட்டம் மற்றும் உயரம் உடைய ஓர் உருளை, ஒரு கூம்பு மற்றம் ஒரு கோளத்தின் கன அளவுகளின் விகிதம் (1) 1:2:3 **(2) 3:1:2** (3)2:1:3 (4)1:3:2

# இயல் – 8

# புள்ளியியலும் நிகழ்தகவும்

## 1 MARKS

1. கொடுக்கப்பட்டவைகளில் எது தவறானது ?

   (1) p(A) +P($\bar{A}$) =1 (2) P(∅) =0 (3) $0\leq P(A)\leq 1$ **(4) P(A)> 1**

2. P சிவப்பு, Q நீலம் மற்றும் R பச்சை நிறக் கூழாங்கற்கள் உள்ள ஒரு குடுவையில் இருந்து ஒரு சிவப்பு கூழாங்கல் எடுப்பதற்கான நிகழ்தகவானது.

   (1) $\frac{P+R}{P+Q+R}$ (2) $\frac{P+Q}{P+Q+R}$ **(3) $\frac{P}{P+Q+R}$** (4) $\frac{Q}{P+Q+R}$

3. ஒரு புத்தகத்திலிருந்து சமவாய்ப்பு முறையில் ஒரு பக்கம் தேர்ந்தெடுக்கப்ப்டுகிறது. அந்தப் பக்க எண்ணின் ஒன்றாம் இட மதிப்பானது 7–ஐ விடக் குறைவாக இருப்பதற்கான நிகழ்தகவு

   (1) $\frac{3}{9}$ (2) $\frac{7}{9}$ (3) $\frac{3}{10}$ **(4) $\frac{7}{10}$**

4. ஒரு நபருக்கு வேலை கிடைப்பதற்கான நிகழ்தகவானது $\frac{x}{3}$. வேலை கிடைக்காமல் இருப்பதற்கான நிகழ்தகவு $\frac{2}{3}$ எனில், x–யின் மதிப்பானது

   **(1)1** (2) 1.5 (3) 2 (4)3

5. கமலம் குலுக்கல் போட்டியில் கலந்துகொண்டாள். அங்கு மொத்தம் 135 சீட்டுகள் விற்கப்பட்டன. கமலம் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு $\frac{1}{9}$ எனில், கமலம் வாங்கிய சீட்டுகளின் எண்ணிக்கை

   (1) 20 **(2)15** (3)10 (4)5

6. ஆங்கில எழுத்துக்கள்(a,b,…,z) –யிலிருந்து ஓர் எழுத்து சமவாய்ப்பு முறையில் தேர்வு செய்யப்படுகிறது. அந்த எழுத்து x–க்கு முந்தைய எழுத்துகளில் ஒன்றாக இருப்பதற்கான நிகழ்தகவு ?

   (1) $\frac{1}{13}$ (2) $\frac{12}{13}$ (3) $\frac{3}{26}$ **(4) $\frac{23}{26}$**

7. ஒரு பணப்பையில் ரூ.2000 நோட்டுகள் 10–ம், ரூ.500 நோட்டுகள் 15–ம், ரூ.200 நோட்டுகள் 25–ம் உள்ளன. ஒரு நோட்டு சமவாய்ப்பு முறையில் எடுக்கப்படுகின்றது எனில், அந்த நோட்டு ரூ.500 நோட்டாவோ அல்லது ரூ.200 நோட்டாகவோ இருப்பதற்கான நிகழ்தகவு என்ன ?

   **(1)$\frac{4}{5}$** (2) $\frac{2}{3}$ (3) $\frac{3}{10}$ (4) $\frac{1}{5}$

## 2 MARKS

**1. ஒரு பையில் 5 நீல நிறப்பந்துகளும், 4 பச்சை நிறப்பந்துகளும் உள்ளன. பையிலிருந்து சமவாய்ப்பு முறையில் ஒரு பந்து எடுக்கப்படுகிறது. எடுக்கப்படும் பந்தானது (i) நீலமாக (ii) நீலமாக இல்லாமல் இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.**

**தீர்வு**

மொத்த வாய்ப்புகளின் எண்ணிக்கை n(S) = 5 + 4 = 9

(i) A என்பது நீல நிறப்பந்தை பெறுவதற்கான நிகழ்ச்சி என்க.

A நிகழ்வதற்கான வாய்ப்புகளின் எண்ணிக்கை n(A) = 5

நீலநிறப் பந்து கிடைப்பதற்கான நிகழ்தகவு, P(A) = $\frac{n(A)}{n(S)} = \frac{5}{9}$

(ii) $\bar{A}$ ஆனது நீல நிறப்பந்து கிடைக்காமல் இருக்கும் நிகழ்ச்சி. எனவே,

P($\bar{A}$ ) = 1 - P(A) = 1 - $\frac{5}{9}$ = $\frac{4}{9}$

**2. இரண்டு நாணயங்கள் ஒன்றாகச் சுண்டப்படுகின்றன. இரண்டு நாணயங்களிலும் வெவ்வேறு முகங்கள் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன ?**

<u>**தீர்வு**</u> இரண்டு நாணயங்கள் சுண்டப்படும்பொழுது அதன் கூறுவெளியானது
S = {HH, HT, TH, TT}; n(S) = 4
A ஆனது நாணயங்களில் வெவ்வேறு முகங்கள் கொண்ட நிகழ்ச்சி என்க.
A = { HT, TH }; n(A) = 2

$$P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{2}{4} = \frac{1}{2}$$

**3. ஒரு நெட்டாண்டில்( leap year) 53 சனிக்கிழமைகள் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன ?**

**( குறிப்பு 366 = 52 x 7 + 2)**

<u>**தீர்வு**</u> **S = {**(ஞாயிறு – திங்கள், திங்கள் – செவ்வாய், செவ்வாய் – புதன்,
புதன் – வியாழன், வியாழன் – வெள்ளி, வெள்ளி – சனி, சனி – ஞாயிறு) }
n(S) = 7
A என்பது 53–வது சனிக்கிழமை கிடைக்கும் நிகழ்ச்சி என்க.
எனவே A = **{** வெள்ளி – சனி, சனி – ஞாயிறு } n(A) = 2
53 சனிக்கிழமைகள் கிடைப்பதற்கான நிகழ்தகவானது $P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{2}{7}$


**4. ஒரு பகடை உருட்டப்படும் அதே நேரத்தில் ஒரு நாணயமும் சுண்டப்படுகிறது. பகடையில் ஒற்றைப்படை எண் கிடைப்பதற்கும், நாணயத்தில் தலைக் கிடைப்பதற்குமான நிகழ்தகவைக் காண்க.**

<u>**தீர்வு**</u> கூறுவெளி S = **{** 1H, 1T, 2H, 2T, 3H, 3T, 4H, 4T, 5H, 5T, 6H, 6T} n(S) = 12
A ஆனது ஒற்றைப்படை எண் மற்றும் தலைக் கிடைப்பதற்கான நிகழ்ச்சி என்க.
A = **{** 1H, 3H, 5H} ; n(A) = 3


$$P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{3}{12} = \frac{1}{4}$$

**5. மூன்று நாணயங்கள் சுண்டப்படும்பொழுது கிடைக்கும் கூறுவெளியை மர வரைபடத்தைப் பயன்படுத்தி எழுதுக.**

<u>**தீர்வு**</u> வரைபடத்திலிருந்து, மூன்று நாணயங்கள் சுண்டும்போது கூறுவெளி =
{ (HHH, HHT, HTH, HTT, THH, THT, TTH, TTT}




6. ஒரு பையிலுள்ள 1 முதல் 6 வரை எண்கள் குறிக்கப்பட்ட பந்துகளிலிருந்து இரண்டு பந்துகள் எடுப்பதற்கான கூறுவெளியை மர வரைபடம் மூலமாக குறிப்பிடுக. (மீண்டும் திரும்ப வைக்கும் முறை)




கூறுவெளி "S" = {(1,2), (1,3), (1,4), (1,5), (1,6)
(2,1), (2,2), (2,3), (2,4), (2,5), (2,6)
(3,1), (3,2), (3,3), (3,4), (3,5), (3,6)
(4,1), (4,2), (4,3), (4,4), (4,5), (4,6)
(5,1), (5,2), (5,3), (5,4), (5,5), (5,6)
(6,1), (6,2), (6,3), (6,4), (6,5), (6,6)}

7. மாணவர்கள் விளையாடும் ஒரு விளையாட்டில் அவர்களால் எறியப்படும் கல்லானது வட்டப்பரிதிக்குள் விழுந்தால் அதைத் வெற்றியாகவும், வட்டப்பரிதிக்கு வெளியே விழுந்தால் அதை தோல்வியாகவும் கருதப்படுகிறது. விளையாட்டில் வெற்றி கொள்வதற்கான நிகழ்தகவு என்ன ?




<u>**தீர்வு**</u>

மொத்த பரப்பளவு = 4 x 3 = 12 ச.அ

$\therefore n(S) = 12$

வெற்றி பெறும் பரப்பளவு = வட்டத்தின் பரப்பு = $\pi r^2 = \pi(1)^2$

$= \pi$ = 3.14 ச.அ

P(வெற்றி பெற) = $\frac{3.14}{12} = \frac{314}{1200} = \frac{157}{600}$

## 5 MARKS

1. இரண்டு பகடைகள் உருட்டப்படுகின்றன. கிடைக்கப்பெறும் முக மதிப்புகளின் கூடுதல் (i) 4 –க்குச் சமமாக (ii) 10–ஐ விடப் பெரிதாக (iii) 13–ஐ விடக் குறைவாக இருப்பதற்கான நிகழ்தகவு காண்க.

**தீர்வு** இரண்டு பகடைகள் உருட்டப்படும்பொழுது, கூறுவெளியானது

S = {(1,1), (1,2), (1,3), (1,4), (1,5), (1,6)
(2,1), (2,2), (2,3), (2,4), (2,5), (2,6)
(3,1), (3,2), (3,3), (3,4), (3,5), (3,6)
(4,1), (4,2), (4,3), (4,4), (4,5), (4,6)
(5,1), (5,2), (5,3), (5,4), (5,5), (5,6)
(6,1), (6,2), (6,3), (6,4), (6,5), (6,6)}என இருக்கும். எனவே n(S) =36

(i) A ஆனது முக மதிப்புகளின் கூடுதல் 4—ஆக இருப்பதற்கான நிகழ்ச்சி என்க.
A = {(1,3), (2,2), (3,1)}; n(A) = 3 $P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{3}{36} = \frac{1}{12}$

(ii) B ஆனது முக மதிப்புகளின் கூடுதல் 10—ஐ விட பெரிய எண்ணாக இருப்பதற்கான நிகழ்ச்சி என்க.
B = {(5,6), (6,5), (6,6)}; n(B) = 3 $P(B) = \frac{n(B)}{n(S)} = \frac{3}{36} = \frac{1}{12}$

(iii) C ஆனது முக மதிப்புகளின் கூடுதல் 13—ஐ விட குறைவாக இருப்பதற்கான நிகழ்ச்சி என்க. எனவே C =S.
ஆகவே, n(C) = n (S) = 36. $P(C) = \frac{n(C)}{n(S)} = \frac{36}{36} = 1$

**2. நன்கு கலைத்து அடுக்கப்பட்ட 52 சீட்டுகளைக் கொண்ட சீட்டுக்கட்டிலிருந்து சமவாய்ப்பு முறையில் ஒரு சீட்டு எடுக்கப்படுகிறது. அது (i) சிவப்பு நிறச் சீட்டு (ii) ஹார்ட் சீட்டு (iii) சிவப்பு நிற இராசா (iv) முக சீட்டு (v) எண் சீட்டாக இருப்பதற்கான நிகழ்தகவைக் கண்டறிக.**

**தீர்வு** n(S) = 52

(i) A என்பது சிவப்புச் சீட்டு கிடைக்கும் நிகழ்ச்சி என்க. n(A) = 26
சிவப்பு சீட்டுகள் கிடைப்பதற்கான நிகழ்தகவு $P(A) = \frac{26}{52} = \frac{1}{2}$

(ii) B என்பது ஹார்ட் சீட்டு கிடைக்கும் நிகழ்ச்சி என்க. n(B) = 13
ஹார்ட் சீட்டுகள் கிடைப்பதற்கான நிகழ்தகவு $P(B) == \frac{n(B)}{n(S)} = \frac{13}{52} = \frac{1}{4}$

(iii) C என்பது சிவப்பு நிற இராசா சீட்டு கிடைக்கும் நிகழ்ச்சி என்க. n(C) = 2
எனவே, சிவப்பு நிற இராசா சீட்டு கிடைப்பதற்கான நிகழ்தகவு $P(C) = \frac{n(C)}{n(S)} = \frac{2}{52} = \frac{1}{26}$

(iv) D என்பது முகச்சீட்டு கிடைக்கும் நிகழ்ச்சி என்க. முகச்சீட்டுகளாவன மந்திரி (J) அரசி (Q) மற்றும் இராசா (K) n(D) = 4 x 3 = 12
முகச்சீட்டுகள் கிடைப்பதற்கான நிகழ்தகவு $P(D) = \frac{n(D)}{n(S)} = \frac{12}{52} = \frac{3}{13}$

(v) E என்பது எண் சீட்டு கிடைக்கும் நிகழ்ச்சி என்க. எண் சீட்டுகளாவன 2,3,4,5,6,7,8,9 மற்றும் 10. n(E) = 4 x 9 = 36
எண் சீட்டுகள் கிடைப்பதற்கான நிகழ்தகவு $P(E) = \frac{n(E)}{n(S)} = \frac{36}{52} = \frac{9}{13}$

**3. ஒரு பையில் 6 பச்சை நிறப்பந்துகளும், சில கருப்பு மற்றம் சிவப்பு நிறப்பந்துகளும் உள்ளன. கருப்பு பந்துகளின் எண்ணிக்கை, சிவப்பு பந்துகளைப் போல் இருமடங்காகும். பச்சை பந்து கிடைப்பதற்கான நிகழ்தகவு சிவப்பு பந்து கிடைப்பதற்கான நிகழ்தகவைப் போல் மூன்று**

**மடங்காகும். இவ்வாறெனில், (i) கருப்பு பந்துகளின் எண்ணிக்கை (ii) மொத்த பந்துகளின எண்ணிக்கை ஆகியவற்றைக் காண்க.**

**தீர்வு** பச்சை பந்துகளின் எண்ணிக்கை n(G) = 6

சிவப்பு பந்துகளின் எண்ணிக்கை n(R) = x என்க

எனவே, கருப்பு பந்துகளின் எண்ணிக்கை n(B) = 2x

மொத்தப் பந்துகளின் எண்ணிக்கை n(S) = 6 +x + 2x = 6 +3x

கொடுக்கப்பட்டது, P(G) = 3 x P(R)

$$\frac{6}{6+3x} = 3 \times \frac{x}{6+3x}$$

3x = 6 லிருந்து, x = 2

(i) கருப்பு பந்துகளின் எண்ணிக்கை = 2 x 2 =4

(ii) மொத்த பந்துகளின் எண்ணிக்கை = 6 + (3x 2) = 12

**4. படத்தில் காட்டியுள்ள அம்புக்குறி சுழற்றும் விளையாட்டில் 1, 2, 3, ...12 என்ற எண்கள் சமவாய்ப்பு முறையில் கிடைக்க வாய்ப்புள்ளது. அம்புக்குறியானது (i)7 (ii) பகா எண் (iii) பகு எண் ஆகியவற்றில் நிற்பதற்கான நிகழ்தகவுகளைக் கண்டறிக ?**




**தீர்வு**

கூறுவெளி, S= {1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12}

n (S) = 12

(i) A ஆனது, அம்புக்குறி எண் 7–ல் நிற்பதற்கான நிகழ்ச்சி என்க. n(A) = 1

$P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{1}{12}$

(ii) B ஆனது, அம்புக்குறி பகா எண்ணில் நிற்பதற்கான நிகழ்ச்சி என்க.

B = {2, 3, 5, 7, 11} ; n(B) = 5

$P(B) = \frac{n(B)}{n(S)} = \frac{5}{12}$

(iii) C ஆனது, அம்புக்குறி பகு எண்ணில் நிற்பதற்கான நிகழ்ச்சி என்க.

C = {4, 6, 8, 9, 10, 12}; n(C) = 6

$P(C) = \frac{n(C)}{n(S)} = \frac{6}{12} = \frac{1}{2}$

**5. ஒரு சமவாய்ப்புச் சோதனையில் ஒரு நிகழ்ச்சி A என்க. இங்கு $P(A) : P(\bar{A}) = 17: 15$ மற்றும் n(S) = 640 எனில், (i) $P(\bar{A})$ (ii) n(A) – ஐக் காண்க.**

**தீர்வு** $\frac{P(A)}{P(\bar{A})} = \frac{17}{15}$

$\frac{1-P(\bar{A})}{P(\bar{A})} = \frac{17}{15}$

$15\,[1- P(\bar{A})] = 17\, P(\bar{A}) \implies 15 - 15\, P(\bar{A}) = 17\, P(\bar{A})$

$15 = 15\, P(\bar{A}) + 17\, P(\bar{A}) \implies 32\, P(\bar{A}) = 15$

$P(\bar{A}) = \frac{15}{32} \implies P(A) = 1 - P(\bar{A})$

$= 1 - \frac{15}{32} \quad = \frac{32-15}{32} \quad = \frac{17}{32}$

$P(A) = \frac{n(A)}{n(S)}$; $\frac{17}{32} = \frac{n(A)}{640}$ $\Longrightarrow n(A) = \frac{17 \times 640}{32}$ n(A) =340

**6. ஒரு பொது விழாவில், 1 முதல் 1000 வரை எண்களிட்ட அட்டைகள் ஒரு பெட்டியில் வைக்கப்பட்டுள்ளன. விளையாடும் ஒவ்வொருவரும் ஒரு அட்டையைச் சமவாய்ப்பு முறையில் எடுக்கிறார்கள். எடுத்த அட்டை திரும்ப வைக்கப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட அட்டையில் எண் 500–ஐ விட அதிகமாக உள்ள வர்க்க எண் இருந்தால், அவர் வெற்றிக்கான பரிசைப் பெறுவர். (i) முதலில் விளையாடுபவர் பரிசு பெற (ii) முதலாமவர் வெற்றி பெற்ற பிறகு இரண்டாவதாக விளையாடுபவர் வெற்றி பெற ஆகிய நிகழ்ச்சிகளுக்கான நிகழ்தகவுகளைக் காண்க.**

<u>தீர்வு</u>

n(S) = 1000 என்க

E என்பது எண் **500–**ஐ விட அதிகமுள்ள வர்க்க எண் கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

$\Rightarrow E = \{x : (\sqrt{500})^2 < x < (\sqrt{1000})^2 \}$ $(\because \sqrt{500} = 22.36. \sqrt{1000} = 31.62)$

$\therefore E = \{23^2, 24^2, 25^2, \ldots, 31^2\}$

$n(E) = 9$

$P(E) = \frac{n(E)}{n(S)} = \frac{9}{1000}$

**(i)** P(முதலில் விளையாடுபவர் பரிசு பெற) = $\frac{9}{1000}$

**(ii)** P(இரண்டாவது விளையாடுபவர் முதல் பரிசு பெற) = $\frac{8}{999}$. ($\therefore n(s) = 999$)

**7. ஒரு பையில் 12 நீல நிறப்பந்துகளும், x சிவப்பு நிறப்பந்துகளும் உள்ளன. சமவாய்ப்பு முறையில் ஒரு பந்து தேர்ந்தெடுக்கப்படுகிறது. (i) அது சிவப்பு நிறப்பந்தாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க. (ii) 8 புதிய சிவப்பு நிறப்பந்துகள் அப்பையில் வைத்த பின்னர், ஒரு சிவப்பு நிறப்பந்தை தேர்ந்தெடுப்பதற்கான நிகழ்தகவானது (i) 1 ல் பெறப்பட்ட நிகழ்தகவைப் போல இருமடங்கு எனில், x–ன் மதிப்பினைக் காண்க.**

<u>தீர்வு</u>

n(B) = 12; n(R) = x; n(S) = 12 + x. ($\because B$ – நீல நிறப்பந்து , R - சிவப்பு நிறப்பந்து)

(i) $P(R) = \frac{x}{12+x}$

(ii) 8 புதிய சிவப்பு நிறப்பந்துகள் கிடைக்க.

$\therefore n(S) = 20 + x$ ; n(R) = x + 8

$P(R) = \frac{x+8}{20+x}$

(2) ஆனது (1) –ஐ விட இரண்டு மடங்கு

$\Rightarrow \frac{x+8}{20+x} = \frac{2x}{12+x}$

$\Rightarrow$ **( 12** +x) (x + 8) = (20 + x) 2x

$\Rightarrow 12x + 96 + x^2 + 8x = 40x + 2x^2$

$\Rightarrow x^2 + 20x - 96 = 0 \Rightarrow (x - 4)(x + 24) = 0$

$\therefore x = 4$ ($\because x = -24$ பொருந்தாது)

(1) $\Rightarrow P(R) = \frac{4}{16} = \frac{1}{4}$

**8. இரண்டு சீரான பகடைகள் முறையாக ஒரே நேரத்தில் உருட்டப்படுகின்றன.**

**(i) இரண்டு பகடைகளிலும் ஒரே முக மதிப்பு கிடைக்க**

**(ii) முக மதிப்புகளின் பெருக்கற்பலன் பகா எண்ணாகக் கிடைக்க**

**(iii) முக மதிப்புகளின் கூடுதல் பகா எண்ணாகக் கிடைக்க**

**(iv) முக மதிப்புகளின் கூடுதல் 1 – ஆக இருக்க, ஆகிய நிகழ்ச்சிகளின் நிகழ்தகவுகளைக் காண்க.**

**<u>தீர்வு</u>** n(S) = 36

(i) A = இரண்டு பகடையிலும் ஒரே முகம் கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

A = {(1,1), (2,2), (3,3),(4,4),(5,5),(6,6)}

n(A) = 6 ; $P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{6}{36} = \frac{1}{36}$

(ii) B = முகமதிப்புகளின் பெருக்கற்பலன் பகா எண்ணாக இருப்பதற்கான நிகழ்ச்சி என்க

B = {(1,2), (1,3), (1,5), (2,1),(3,1), (5,1)}

n(B) = 6 ; $P(B) = \frac{n(A)}{n(S)} = \frac{6}{36} = \frac{1}{36}$

(iii) C = முக மதிப்புகளின் கூடுதல் பகா எண்ணாக கிடைக்கும் நிகழ்ச்சி என்க

C ={(1,1), (2,1), (1,2),(1,4), (4,1), (1,6), (6,1), (2,3), (2,5), (3,2), (3,4), (4,3), (5,2), (5,6), (6,5) }

n(C) = 15 ; $P(C) = \frac{n(C)}{n(S)} = \frac{15}{36}$

(iv) D = முக மதிப்புகளின் கூடுதல் 1 ஆக இருக்க நிகழ்ச்சி என்க

n(D) = 0 ; $P(D) = \frac{n(D)}{n(S)} = 0$

**9. மூன்று சீரான நாணயங்கள் முறையாக ஒரே நேரத்தில் சுண்டப்படுகின்றன. (i)அனைத்தும் தலையாகக் கிடைக்க (ii) குறைந்தபட்சம் ஒரு பூ கிடைக்க (iii) அதிகபட்சம் ஒரு தலை கிடைக்க (iv) அதிகபட்சம் இரண்டு பூக்கள் கிடைக்க ஆகியவற்றிற்கான நிகழ்தகவுகளைக் காண்க.**

**<u>தீர்வு</u>** S = { HHH, HHT, HTH, THH, TTT, TTH, THT, HTT} n(S) = 8

(i) A = அனைத்தும் தலை கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

A = { HHH} n(A) = 1 $P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{1}{8}$

(ii) B = குறைந்தபட்சம் ஒரு பூ கிடைக்கும் நிகழ்ச்சி என்க

B = { HHT, HTH, THH, TTT, TTH, THT, HTT}  n(B) = 7  P(B) = $\frac{n(B)}{n(S)} = \frac{7}{8}$

(iii) C = அதிகபட்சம் ஒரு தலை கிடைக்கும் நிகழ்ச்சி என்க

C = { TTT, TTH, THT, HTT}  n(C) = 4  P(C) = $\frac{n(C)}{n(S)} = \frac{4}{8} = \frac{1}{2}$

(iv) D = அதிகபட்சம் இரு பூக்கள் கிடைக்கும் நிகழ்ச்சி என்க

D = { TTH, THT, HTT, HHT, HTH, THH, HHH} n(D) = 7  P(D) = $\frac{n(D)}{n(S)} = \frac{7}{8}$

**10. ஒரு பையில் 5 சிவப்பு நிறப் பந்துகளும், 6 வெள்ளை நிறப் பந்துகளும், 7 பச்சை நிறப்பந்துகளும் 8 கருப்பு நிறப்பந்துகளும் உள்ளன. சமவாய்ப்பு முறையில் பையிலிருந்து ஒரு பந்து எடுக்கப்படுகிறது. அந்தப் பந்து (i) வெள்ளை (ii) கருப்பு அல்லது சிவப்பு (iii)வெள்ளையாக இல்லாமல் (iv) வெள்ளையாகவும், கருப்பாகவும் இல்லாமல் இருப்பதற்கான நிகழ்தகவுகளைக் காண்க.**

**<u>தீர்வு</u>** S = {5சி, 6வெ, 7ப, 8க} n(S) = 26

i) A என்பது வெள்ளை நிற பந்து என்க

n(A) = 6  ; P(A) = $\frac{6}{26} = \frac{3}{13}$

ii) B என்பது கருப்பு (அ) சிகப்பு நிற பந்து என்க

n(A) = 5 + 8 =13  ; P(B) = $\frac{13}{26} = \frac{1}{2}$

iii) A என்பது வெள்ளை நிற பந்து இல்லை என்க

n(A) = 20  ; P(A) = $\frac{20}{26} = \frac{10}{13}$

iv) A என்பது வெள்ளை அல்லது கருப்பு நிற பந்து என்க

n(A) = 12  ; P(A) = $\frac{12}{26} = \frac{6}{13}$

**11. ஒரு பெட்டியில் 20 குறைபாடில்லாத விளக்குகளும் ஒரு சில குறைபாடுடைய விளக்குகளும் உள்ளன. பெட்டியிலிருந்து சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு விளக்கானது குறைபாடுடையதாக இருப்பதற்கான வாய்ப்பு $\frac{3}{8}$ எனில், குறைபாடுடைய விளக்குகளின் எண்ணிக்கையைக் காண்க.**

**<u>தீர்வு</u>**

| குறைபாடுடைய விளக்குகள் | குறைபாடில்லாத விளக்குகள் |
|---|---|
| x | 20 |

விளக்குகளின் எண்ணிக்கை= n(S) = x + 20

A : குறைபாடுடைய விளக்குகள் எடுப்பதற்கான வாய்ப்பு

P(A) = $\frac{n(A)}{n(S)} \Rightarrow \frac{3}{8} = \frac{x}{20+x}$

3(20 + x) = 8x

60 + 3x = 8x

0 = 8x – 3x

60 = 5x

$x = \frac{60}{5} = 12$

**12. நன்கு கலைத்து அடுக்கப்பட்ட 52 சீட்டுகள் கொண்ட ஒரு சீட்டுக்கட்டில், டைமண்ட் சீட்டுகளிலிருந்து இராசா மற்றும் இராணி சீட்டுகளும், ஹார்ட் சீட்டுகளிலிருந்து, இராணி மற்றும் மந்திரி சீட்டுகளும், ஸ்பேடு சீட்டுகளிலிருந்து, மந்திரி மற்றும் இராசா சீட்டுகளும் நீக்கப்படுகிறது. மீதமுள்ள சீட்டுகளிலிருந்து, ஒரு சீட்டு சமவாய்ப்பு முறையில் எடுக்கப்படுகிறது. அந்த சீட்டானது (i) க்ளாவர் ஆக (ii) சிவப்பு இராணியாக (iii) கருப்பு இராசாவாக இருப்பதற்கான நிகழ்தகவுகளைக் காண்க.**

**<u>தீர்வு</u>** n(S) = 46

(i) A = கிளாவர் கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

n(A) = 13 $P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{13}{46}$

(ii) B = சிவப்பு இராணி கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

n(B) = 0 $P(B) = \frac{n(B)}{n(S)} = \frac{0}{46}$

(iii) C = கருப்பு இராசா கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

n(C) = 1 $P(C) = \frac{n(C)}{n(S)} = \frac{1}{46}$

**13. இரண்டு நுகர்வோர்கள் பிரியா மற்றும் அமுதன் ஒரு குறிப்பிட்ட அங்காடிக்கு, குறிப்பிட்ட வாரத்தில் (திங்கள் முதல் சனி வரை) செல்கிறார்கள். அவர்கள் அங்காடிக்கு சமவாய்ப்பு முறையில் ஒவ்வொரு நாளும் செல்கிறார்கள். இருவரும் அங்காடிக்கு, (1) ஒரே நாளில் (2) வெவ்வேறு நாட்களில் (3) அடுத்தடுத்த நாட்களில் செல்வதற்கான நிகழ்தவுகளைக் காண்க.**

**<u>தீர்வு</u>**

பிரியா மற்றும் அமுதன் அங்காடியை பார்வையிட $= \frac{1}{6}$

i) S = { S, M, T, W, T, F, S}

n(S) = 6

A : அதே நாளில் பார்வையிட

n(A) = 1

$\therefore P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{1}{6}$

ii) B : வெவ்வேறு நாட்களில் பார்வையிட

n(B) = 5

$\therefore P(B) = \frac{n(B)}{n(S)} = \frac{5}{6}$

iii) C : அடுத்தடுத்த நாட்களில் பார்வையிட

"S" = { (M,T), (T,W), (W,T), (T,F),(F,S), (S,M)}

n(S) = 6

n(C)= 5

$\therefore P(C) = \frac{n(C)}{n(S)} = \frac{5}{6}$

**14. ஒரு விளையாட்டிற்கான, நுழைவுக் கட்டணம் ரூ. 150. அந்த விளையாட்டில் ஒரு நாணயம் மூன்று முறை சுண்டப்படுகிறது. தனா, ஒரு நுழைவுச் சீட்டு வாங்கினாள். அவ்விளையாட்டில் ஒன்று அல்லது இரண்டு தலைகள் விழுந்தால் அவர் செலுத்திய நுழைவுக் கட்டணம் திரும்பக் கிடைத்துவிடும். மூன்று தலைகள் கிடைத்தால் அவளது நுழைவுக் கட்டணம் இரண்டு மடங்காகக் கிடைக்கும். இல்லையென்றால் அவளுக்கு எந்த கட்டணமும் திரும்பக் கிடைக்காது. இவ்வாறெனில், (i) இரண்டு மடங்காக (ii) நுழைவுக் கட்டணம் திரும்பப்பெற (iii) நுழைவுக் கட்டணத்தை இழப்பதற்கு, ஆகிய நிகழ்ச்சிகளுக்கான நிகழ்தகவுகளைக் காண்க.**

**<u>தீர்வு</u>**

Sample Space "S" = {HHH, HHT, HTH, THH, TTT, TTH, THT, HTT}

n(S) = 8

i) A : நுழைவுக் கட்டணம் இரு மடங்காக (3 தலைகள்)

n(A) = 1

$\therefore P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{1}{8}$

ii) B : நுழைவுக் கட்டணம் திரும்ப பெற (**1** அல்லது **2** தலைகள்)

n(B) = 6

$\therefore P(B) = \frac{n(B)}{n(S)} = \frac{6}{8} = \frac{3}{4}$

iii) C : நுழைவுக் கட்டணம் இழப்பதற்கு (தலை இல்லை)

n(C) = 1

$\therefore P(C) = \frac{n(C)}{n(S)} = \frac{1}{8}$

# STAGE - 2

## இயல் - 2

## எண்களும் தொடர்வரிசைகளும்

### 2 MARKS

1. **நம்மிடம் 34 கேக் துண்டுகள் உள்ளன. ஒவ்வொரு பெட்டியிலும் 5 கேக்குகள் மட்டுமே வைக்க இயலுமெனில் கேக்குகளை வைக்க எத்தனை பெட்டிகள் தேவை மற்றும் எத்தனை கேக்குகள் மீதமிருக்கும் எனக் காண்க.**

**தீர்வு**

30 கேக்குகளை வைக்க 6 பெட்டிகள் தேவைப்படுகின்றன. அதில் 4 கேக்குகள் மீதிமிருக்கும். கேக்குகளைப் பெட்டிகளில் வைக்கும் இம்முறையைப் பின்வருமாறு புரிந்து கொள்ளலாம்.

| 34 | = | 5 | X | 6 | + | 4 |
|---|---|---|---|---|---|---|
| மொத்தக் கேக்குகளின் எண்ணிக்கை | = | ஒவ்வொரு பெட்டியிலும் உள்ள கேக்குகளின் எண்ணிக்கை | | பெட்டிகளின் எண்ணிக்கை | + | மீதமுள்ள கேக்குகளின் எண்ணிக்கை |
| ↓ | | ↓ | | ↓ | | ↓ |
| (வகுபடும் எண்) a | = | (வகுக்கும் எண்) b | | (ஈவு ) q | + | (மீதி) r |

2. **ஒற்றை முழு எண்களின் வர்க்கமாது 4q + 1, (இங்கு q ஆனது முழு எண்) என்ற வடிவில் அமையும் எனக் காட்டுக.**

**தீர்வு**

x என்பது ஓர் ஒற்றை முழுக்கள் என்க. எந்தவொரு ஒற்றை முழுக்களுக்கும் ஏதேனும் ஓர் இரட்டை முழுக்களை விட ஒன்று அதிகமாக இருக்கும் என்பதால் $x = 2k + 1$ , இங்கு k என்பது ஏதேனும் ஒரு முழுக்கள்

$$x^2 = (2k + 1)^2$$
$$= 4k^2 + 4k + 1$$
$$= 4k(k + 1) + 1$$

$= 4q + 1$. இங்கு $q = k(k+1)$ என்பது முழுக்கள்

3. **210 மற்றும் 55 ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தியை 55x - 325, என்ற வடிவில் எழுதினால் x –யின் மதிப்புக் காண்க.**

**தீர்வு**

யூக்ளிடின் வகுத்தல் வழிமுறையைப் பயன்படுத்திக் கொடுக்கப்பட்ட எண்களுக்கு மீ.பொ.வ காண்போம்.

$210 = 55 \times 3 + 45$

$55 = 45 \times 1 + 10$

$45 = 10 \times 4 + 5$

$10 = 5 \times 2 + 0$

மீதி = **0**

ஆகவே, கடைசி படிநிலையின் வகுத்தி **5** ஆனது **210** மற்றும் **55**–யின் மீப்பெரு பொது வகுத்தியாகும். மீப்பெரு பொது வகுத்தியை 55x – 325 = 5 எனக் கொடுக்கப்பட்டுள்ளதால்.

55x = 330

x = 6

**4. 445 மற்றும் 572 –ஐ குறிப்பிட்ட எண்ணால் வகுக்கும்போது முறையே மீதி 4 மற்றும் 5–ஐ தரக்கூடிய மிகப்பெரிய எண்ணைக் கண்டறிக**

**தீர்வு**

**445** மற்றும் **572** –ஐ வகுக்கும்போது கிடைக்கும் மீதி **4** மற்றும் **5** எனில், நமக்குத் தேவையான எண் **445** – **4** = **441**, மற்றும் **572** – **5** = **567** ஆகியவற்றின மீப்பெரு பொது வகுத்தியாகத்தான் இருக்கும்.

எனவே, நாம் **441** மற்றும் **567** ஆகிய எண்களின் மீ.பொ.வ கண்டறிவோம். யூக்ளிடின் வகுத்தல் வழிமுறையின்படி நாம் பெறுவது

567 = 441 x 1 + 126

441 = 126 x 3 + 63

126 = 63 x 2 + 0

ஆகவே **441** மற்றும் **567** ஆகியவற்றின் மீ.பொ.வ **63** ஆகும். எனவே தேவையான எண் **63** ஆகும்.

**5. ஒரு நபரிடம் 532 பூந்தொட்டிகள் உள்ளன. அவர் வரிசைக்கு 21 பூந்தொட்டிகள் வீதம் அடுக்க விரும்பினார். எத்தனை வரிசைகள் முழுமை பெறும் எனவும் மற்றும் எத்தனை பூந்தொட்டிகள் மீதமிருக்கும் எனவும் காண்க.**

**தீர்வு**

யூக்ளிடின் தேற்றப்படி

a = bq + r

532 = 21 q + r ⇒ 532 = 21 x 25 + 7

25 வரிசைகள் முழுமைபெறும்

7 பூத்தொட்டிகள் மீதமிருக்கும்.

```
       25
21 | 532
   | 42
   |112
    105
      7
```

**6. தொடர்ச்சியான இரு மிகை முழுக்களின் பெருக்கற்பலன் 2 ஆல் வகுபடும் என நிறுவுக.**

**தீர்வு**

தொடர்ச்சியான இருமிகை முழு x மற்றும் x + 1 என்க

பெருக்கல் பலன் = x (x + 1)

case 1 : x என்பது ஓர் இரட்டைப்படை எண் எண்க

x = 2k ⇒ x(x+1) = 2k(2k+1+1) = 2k [2k + 2], 2 ஆல் வகுபடும்

case 2 : x என்பது ஓர் ஒற்றைப்படை எண் எண்க

x=2k + 1 ⇒ x(x+1)=(2k+1)(2k+1+1)=(2k+1)(2k+2)=(2k+1)(k+1) 2 ஆல் வகுபடும்

∴தொடர்ச்சியான இரண்டு மிகை முழுக்களின் பெருக்கல்பலன் **2**ஆல் வகுபடும்.

**7. எந்த மிகை முழுவின் வர்க்கத்தையும் 4 ஆல் வகுக்கும்போது மீதி 0 அல்லது 1 மட்டுமே கிடைக்கும் என நிறுவுக.**

__தீர்வு__

**நிலை1** : $x$ ஒரு ஒற்றை எண் என்க

$x = 2k + 1. \quad k \in z$

$x^2 = (2k + 1.)^2$

$x^2 = 4k^2 + 4k + 1$

$x^2 = 4k (k + 1) + 1 = 4q + 1$, இங்கு $q = k(k + 1)$ , , மீதி $r = 1$.

**நிலை 2** : $x$ ஒரு இரட்டை எண் என்க

$x = 2k, k \in Z$

$x^2 = (2k)^2$

$x^2 = 4k^2 = 4q$

$x^2 = 4q + 0$, இங்கு $q = k^2$ , மீதி $r = 0$

**8. யூக்ளிடின் வகுத்தல் வழிமுறையை பயன்படுத்திப் பின்வருவனவற்றின் மீ.பொ.வ காண்.**

**(i) 340 மற்றும் 412 (ii) 867 மற்றும் 255 (iii) 10224 மற்றும் 9648**

**(iv) 84, 90 மற்றும்120**

__தீர்வு__

**(i) 340 மற்றும் 412**

$412 = 340(1) + 72$
$340 = 72(4) + 52$
$72 = 52(1) + 20$
$52 = 20(2) + 12$
$20 = 12(1) + 8$
$12 = 8(1) + 4$
$8 = 4(2) + 0$
$\therefore$ மீ.பொ.வ $= 4$

(ii) **867 மற்றும் 255** $867 = 255 (3) + 102$
$255 = 102(2) + 51$
$102 = 51(2) + 0.$ $\therefore$ மீ.பொ.வ $= 51$

**(i) 10224 மற்றும் 9648**

$10224 = 9648 (1) + 576$
$9648 = 576(16) + 432$
$576 = 432 (1) + 144$
$432 = 144(3) + 0.$ $\therefore$ மீ.பொ.வ $= 144$

**(ii) 84, 90 மற்றும் 120**

யூக்ளிடின் தேற்றப்படி $a = bq + r$
$90 = 84q + r \quad (b \neq 0)$
$90 = 84x1+ 6 \implies \quad 84 = 6 x14 + 0$
$\therefore 84, 90$ ன் மீ.பொ.வ $= 6$.
மேலும் 120, 6ன் மீ.பொ.வ கான $120 = 6 x 20 + 0$
$\therefore 84, 90,120$ ன் மீ.பொ.வ $= 6$

**9. 1230 மற்றும் 1926 ஆகிய எண்களை வகுக்கும்போது மீதி 12–ஐத் தரக்கூடிய மிகப்பெரிய எண்ணைக் காண்க.**

**<u>தீர்வு</u>**

தேவையான எண் = மீ.பொ.வ (1230 – 12) = 1218 மற்றும் (1926 – 12) = 1914

$\Longrightarrow$ 1914 = 1218 (1) + 696

1218 = 696 (1) + 522

696 = 522(1) + 174

522 = 174(3) + 0. தேவையான மிகப்பெரிய எண் = **174**

**10. 32 மற்றும் 60 ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தி d என்க. d = 32 x + 60y எனில் x மற்றும் y என்ற முழுக்களைக் காண்க.**

**<u>தீர்வு</u>** யூக்ளிடின் தேற்றப்படி a = bq+r

60 = 32 x1 + 28 $\Longrightarrow$ 32 = 28 x1 +4

28 = 4 x 7 +0 ∴32,60 ன் மீ.பொ.வ = 4

அதாவது d=4. மேலும் d = 32x + 60y $\Longrightarrow$ 4 = 32x + 60y

4 = 32(2) + 60(-1) $\Longrightarrow$ ∴x = 2, y = -1 ஆகும்

**11. எந்த இரு அடுத்தடுத்த மிகை முழுவும் சார்பகா எண்கள் என நிறுவுக.**

**<u>தீர்வு</u>**

ஏதேனும் இரண்டு மிகை முழுக்கள் x+1 , x என்க.


(a,b) யின் மீ.பொ.வ = (a-b,b)யின் மீ.பொ.வ

(x+1,x) யின் மீ.பொ.வ = (x + 1 – x, x)யின் மீ.பொ.வ

(x+1,x) யின் மீ.பொ.வ = ( 1, x)யின் மீ.பொ.வ

(x+1,x) யின் மீ.பொ.வ = 1 ∴x+1, x என்பன சார்பகா எண்களாகும்.

**12. கொடுக்கப்பட்ட காரணி பிரித்தலில், m மற்றும் n என்ற எண்களைக் காண்க.**




**<u>தீர்வு</u>**

கீழிருந்து முதல் பெட்டியின் மதிப்பு = **5** x 2 = 10

n – யின் மதிப்பு = **5** x 10 = 50

கீழிருந்து இரண்டாம் பெட்டியின் மதிப்பு = **3** x 50 = 150

m – யின் மதிப்பு = **2** x 150 = 300

ஆகவே, தேவையான எண்கள் m = 300, n = 50

**13. $6^n$ ஆனது, n ஓர் இயல் எண் என்ற வடிவில் அமையும் எண்கள் 5 என்ற இலக்கத்தைக் கொண்டு முடியுமா ? உனது விடைக்குக் காரணம் கூறுக.**

**<u>தீர்வு</u>**

$6^n = (2 \times 3)^n = 2^n \times 3^n$ என்பதால்

**2** என்பது $6^n$ –யின் ஒரு காரணியாகும். எனவே $6^n$ ஓர் இரட்டைப்படை எண் ஆகும். ஆனால், கடைசி இலக்கம் **5**–யில் முடியும் எண்கள் அனைத்தும் ஒற்றைப்படை எண்கள் ஆகும்.

ஆகவே, $6^n$ –யின் கடைசி இலக்கம் **5** என முடிய வாய்ப்பில்லை.

**14. 7 x 5 x 3 x 2 + 3 என்பது ஒரு பகு எண்ணா ? உனது விடையை நியாயப்படுத்துக.**

<u>**தீர்வு**</u>

ஆம். கொடுக்கப்பட்ட எண் ஒரு பகு எண்ணாகும். ஏனெனில்,

$7 \times 5 \times 3 \times 2 + 3 = 3 \times (7 \times 5 \times 2 + 1) = 3 \times 71$

கொடுக்கப்பட்ட எண்ணானது இரு பகா எண்களின பெருக்கற்பலனாகக் காரணிப்படுத்தப்படுவதால், அது ஒரு பகு எண்ணாகும்.

**15. n ஓர் இயல் எண் எனில், எந்த n மதிப்புகளுக்கு $4^n$ ஆனது 6 என்ற இலக்கத்தைக் கொண்டு முடியுமா ?**

<u>**தீர்வு**</u>

$4^1 = 4,\ 4^2 = 16, 4^3 = 64,\ 4^4 = 256,\ 4^5 = 1024,\ 4^6 = 4096$

n ஒரு இரட்டைப்படை எண், $4^n$ ஆனது **6** என்ற இலக்கத்தில் முடியும்.

n ஒரு ஒற்றை எண் எனில் $4^n$ ஆனது **4** என்ற இலக்கத்தில் முடியும்.

**16. m மற்றும் n இயல் எண்கள் எனில், எந்த m–யின் மதிப்புகளுக்கு $2^n \times 5^m$ என்ற எண் 5 என்ற இலக்கத்தைக் கொண்டு முடியும் ?**

<u>**தீர்வு**</u>

$2^n$ என்பது எப்பொழுதும் ஒரு இரட்டைப்படை எண்

$5^m$ என்பது எப்பொழுதும் ஒரு ஒற்றைப்படை எண்

ஒரு ஒற்றைப்படை எண்ணையும் இரட்டைப்படை எண்ணையும் பெருக்கக் கிடைப்பது இரட்டைப்படை எண்.

ஆகவே $2^n \times 5^m$ - ன் எ என்பது **5** என்ற இலக்கத்தை கொண்டு முடியாது.

**17. 252525 மற்றும் 363636 என்ற எண்களின் மீ.பொ.வ. காண்க.**

<u>**தீர்வு**</u>

| | |
|---|---|
| 2 | 363636 |
| 2 | 181818 |
| 3 | 90909 |
| 3 | 30303 |
| 3 | 10101 |
| 7 | 3367 |
| 13 | 481 |
| 37 | 37 |
| | 1 |

| | |
|---|---|
| 3 | 252525 |
| 5 | 84175 |
| 5 | 16835 |
| 7 | 3367 |
| 13 | 481 |
| 37 | 37 |

$252525 = 3 \times 5^2 \times 7 \times 13 \times 37$

$363636 = 2^2 \times 3^3 \times 7 \times 13 \times 37$

மீ.பொ.வ. **252525** மற்றும் **363636**

$= 3 \times 7 \times 13 \times 37$

$= 10101.$

**18. அடிப்படை எண்ணியல் தேற்றத்தைப் பயன்படுத்தி 408 மற்றும் 170 என்ற எண்களின் மீ.பொ.ம மற்றும் மீ.பொ.வ. காண்க.**

<u>**தீர்வு**</u>

| | |
|---|---|
| 2 | 408 |
| 2 | 204 |
| 2 | 102 |
| 3 | 51 |
| 17 | 17 |
| | 1 |

| | |
|---|---|
| 2 | 170 |
| 5 | 85 |
| 17 | 17 |
| | 1 |

$408 = 2^3 \times 3 \times 17$

$170 = 2 \times 5 \times 17$

**19. முதல் 10 இயல் எண்கள் 1, 2, 3, ......,10**

**தீர்வு**

**10** இயல் எண்களின் மீ.பொ.ம

$2 = 2 \times 1$

$3 = 3 \times 1$

$4 = 2 \times 2 = 2^2$

$5 = 5 \times 1$

$6 = 2 \times 3$

$7 = 7 \times 1$

$8 = 2 \times 2 \times 2 = 2^3$

$9 = 3 \times 3 = 3^2$

$10 = 2 \times 5$

$\therefore$ மீ.பொ.ம $= 2^3 \times 3^2 \times 5 \times 7 = 8 \times 9 \times 5 \times 7 = 2520$

**20. பின்வரும் தொடர்வரிசையின் அடுத்த மூன்று உறுப்புகளைக் காண்க.** $\frac{1}{2}, \frac{1}{6}, \frac{1}{10}, \frac{1}{14}, \ldots$

**தீர்வு**

$\frac{1}{2}, \frac{1}{6}, \frac{1}{10}, \frac{1}{14}, \ldots$

மேற்கண்ட தொடர்வரிசையில் தொகுதி ஒரே எண்ணாக உள்ளது மற்றும் அடுத்தடுத்த உறுப்புகளின் பகுதியானது **4** அதிகரிக்கிறது.

$a_5 = \frac{1}{14+4} = \frac{1}{18}$

$a_6 = \frac{1}{18+4} = \frac{1}{22}$

$a_7 = \frac{1}{22+4} = \frac{1}{26}$

**21. பின்வரும் தொடர்வரிசையின் அடுத்த மூன்று உறுப்புகளைக் காண்க. 5, 2, -1, -4, …**

**தீர்வு**

5, 2, -1, -4, …

இங்கு ஒவ்வோர் உறுப்பும் முந்தைய உறுப்பைவிட **3** குறைவாக உள்ளது.

எனவே அடுத்த மூன்று உறுப்புகள் **−7, −10, −13.**

**22. பின்வரும் தொடர்வரிசையின் அடுத்த மூன்று உறுப்புகளைக் காண்க. 1,0.1,0.01,…**

**தீர்வு**

1,0.1,0.01,…

இங்கு ஒவ்வோர் உறுப்பும் முந்தைய உறுப்பைவிட **10**ல் வகுக்கக் கிடைக்கிறது. எனவே அடுத்த மூன்று உறுப்புகள்

$a_4 = \frac{0.01}{10} = 0.001$

$a_5 = \frac{0.001}{10} = 0.0001$

$a_6 = \frac{0.0001}{10} = 0.00001$

**23. பின்வரும் தொடர் வரிசையின்  பொது உறுப்பு காண்க  3,6,9,…**

**தீர்வு**

இங்குள்ள உறுப்புகள் 3–யின் மடங்குகளாக உள்ளன.  எனவே $a_n = 3n, n \in \mathbb{N}$

**24. பின்வரும் தொடர் வரிசையின்  பொது உறுப்பு காண்க  $\frac{1}{2}, \frac{2}{3}, \frac{3}{4}, \ldots$**

**தீர்வு**

$a_1 = \frac{1}{2}$ ; $a_2 = \frac{2}{3}$ ; $a_3 = \frac{3}{4}$ ;

இங்கு ஒவ்வோர் உறுப்பிலும் தொகுதியானது வரிசை இயல் எண்களாகவும், பகுதியானது தொகுதியைவிட ஒன்று கூடுதலாகவும் உள்ளது.  எனவே, பொது உறுப்பு  $a_n = \frac{n}{n+1}, n \in \mathbb{N}$

**25. பின்வரும் தொடர் வரிசையின்  பொது உறுப்பு காண்க (iii) 5, -25, 125,…**

**தீர்வு**

இங்கு தொடர்வரிசையின் அடுத்தடுத்த உறுப்புகளில் + மற்றும் – எனக் குறிகள் மாறி மாறி வந்துள்ளன.  மேலும் உறுப்புகள் 5–யின் அடுக்குகளாகவும்  அமைந்துள்ளன. எனவே பொது உறுப்பு $a_n = (-1)^{n+1} 5^n, n \in \mathbb{N}$

**26. ஒரு தொடர்வரிசையின் பொது உறுப்பு பின்வருமாறு வரையறுக்கப்படுகிறது,**

$$a_n = \begin{cases} n(n+3); n \in \mathbb{N} & \text{ஓர் ஒற்றை எண்} \\ n^2 + 1 \ ; n \in \mathbb{N} & \text{ஓர் இரட்டை எண்} \end{cases}$$

**11–வது உறுப்பு மற்றும் 18–வது உறுப்புக் காண்க.**

**தீர்வு**

n = 11 என்பது ஒற்றை எண் என்பதால், $a_{11}$ –யின் மதிப்புக் காண n = 11 என

$a_n = n(n + 3)$ –யில் பிரதியிட

11 –வது உறுப்பு  $a_{11} = 11(11 + 3) = 11(14) = 154.$

n = 18 என்பது இரட்டை எண் என்பதால், $a_{18}$ –யின் மதிப்புக் காண n = 18 என

$a_n = n^2 + 1$ –யில் பிரதியிட

18 –வது உறுப்பு  $a_{18} = 18^2 + 1 = 324 + 1 = 325.$

**27. பின்வரும் தொடர்வரிசையின் முதல் ஐந்து உறுப்புகளைக் காண்க.**

$$\mathbf{a_1 = 1, a_2 = 1, a_n = \frac{a_{n-1}}{a_{n-2}+3}} \ ; n \geq 3, n \in \mathbb{N}$$

**தீர்வு**

$a_1=1$, $a_2=1$ எனத் தொடர்வரிசையின் முதல்  இரண்டு உறுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. மூன்றாவது உறுப்பானது முதல் இரண்டு உறுப்புகளைச் சார்ந்தே உள்ளது.

$$a_3 = \frac{a_{3-1}}{a_{3-2}+3} = \frac{a_2}{a_1+3} = \frac{1}{1+3} = \frac{1}{4}$$

இதைப் போலவே நான்காம் உறுப்பு, $a_4$ ஆனது $a_2$ மற்றும் $a_3$ ஆகியவற்றைச் சார்ந்தே உள்ளது.

$$a_4 = \frac{a_{4-1}}{a_{4-2}+3} = \frac{a_3}{a_2+3} = \frac{\frac{1}{4}}{1+3} = \frac{\frac{1}{4}}{4} = \frac{1}{4} \times \frac{1}{4} = \frac{1}{16}$$

இதே வழிமுறையில் ஐந்தாம் உறுப்பு $a_5$ கணக்கிடப்படுகிறது.

$$a_5 = \frac{a_{5-1}}{a_{5-2}+3} = \frac{a_4}{a_3+3} = \frac{\frac{1}{16}}{\frac{1}{4}+3} = \frac{1}{16} \times \frac{4}{13} = \frac{1}{52}$$

எனவே, தொடர்வரிசையின் முதல் ஐந்து உறுப்புகள் **1, 1,** $\frac{1}{4}, \frac{1}{16}$ மற்றும் $\frac{1}{52}$ஆகும்.

**28. பின்வரும் தொடர்வரிசையின் அடுத்த மூன்று உறுப்புகளைக் காண்க. 8, 24, 72,…**

**<u>தீர்வு</u>**

**8, 24, 72,…**

ஒவ்வொரு உறுப்புகளும் **3** ஆல் பெருக்கக் கிடைக்கிறது.

∴ அடுத்த மூன்று உறுப்புகள்

72 x 3 = 216 ; 216 x 3 = 648; 648 x 3 = 1944

**29. பின்வரும் தொடர்வரிசையின் அடுத்த மூன்று உறுப்புகளைக் காண்க. 5,1,-3**

**தீர்வு**

**5,1,-3**

ஒவ்வொரு உறுப்புகளும் **–4** ஆல் கழிக்கக் கிடைக்கிறது.

∴ அடுத்த மூன்று உறுப்புகள்

-3 - 4 = -7; -7 - 4 = -11; -11 - 4 = -15;

**30. பின்வரும் தொடர்வரிசையின் அடுத்த மூன்று உறுப்புகளைக் காண்க.** $\frac{1}{4}, \frac{2}{9}, \frac{3}{16}, \ldots$

**தீர்வு** $\frac{1}{4}, \frac{2}{9}, \frac{3}{16}, \ldots$

$\Rightarrow \frac{1}{2^2}, \frac{2}{3^2}, \frac{3}{4^2}, \ldots$

∴ அடுத்த மூன்று உறுப்புகள்

$\frac{4}{5^2} = \frac{4}{25}, \frac{5}{6^2} = \frac{5}{36}$ **மற்றும்** $\frac{6}{7^2} = \frac{6}{49}$

**31. பின்வரும் n–வது உறுப்புகளைக் கொண்ட தொடர் வரிசையின் முதல் நான்கு உறுப்புகளைக் காண்க.** $a_n = n^3 - 2$

**தீர்வு** $a_n = n^3 - 2$

$a_1 = -1$ , $a_2 = 6$ , $a_3 = 25$ , $a_4 = 62$

**32. பின்வரும் n–வது உறுப்புகளைக் கொண்ட தொடர் வரிசையின் முதல் நான்கு உறுப்புகளைக் காண்க.** $a_n = (-1)^{n+1}$

**தீர்வு** $a_n = (-1)^{n+1}$

$a_1 = (-1)^{1+1} = 1$ $a_2 = (-1)^{2+1} = -1$

$a_3 = (-1)^{3+1} = 1$ $a_4 = (-1)^{4+1} = -1$

**33. பின்வரும் n–வது உறுப்புகளைக் கொண்ட தொடர் வரிசையின் முதல் நான்கு உறுப்புகளைக் காண்க.** $a_n = 2n^2 - 6$

**<u>தீர்வு</u>** $a_n = 2n^2 - 6$

$a_1 = 2(1) - 6 = -4$ , $a_2 = 2(4) - 6 = 2$

$a_3 = 2(9) - 6 = 12$ , $a_4 = 2(16) - 6 = 26$

**34. கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்வரிசையின் n –வது உறுப்பைக் காண்க. 2, 5, 10, 17, …**

**<u>தீர்வு</u>** 2, 5, 10, 17, … $\Rightarrow 1 + 1, 4 + 1, 9 + 1, 16 + 1$ $\therefore a_n = n^2 + 1, n \in \mathbb{N}$

**35. கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்வரிசையின் n –வது உறுப்பைக் காண்க.** $0, \frac{1}{2}, \frac{2}{3}, \ldots$

**<u>தீர்வு</u>**

$$0, \frac{1}{2}, \frac{2}{3}, \ldots \quad \Rightarrow \frac{1-1}{1}, \frac{2-1}{2}, \frac{3-1}{3}, \ldots \quad \therefore a_n = \frac{n-1}{n}, n \in \mathbb{N}$$

**36. கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்வரிசையின் n –வது உறுப்பைக் காண்க.** 3, 8, 13, 18,….

**<u>தீர்வு</u>**

$3, 8, 13, 18, \ldots \Rightarrow 5 - 2, 10 - 2, 15 - 2, 20 - 2, \ldots$

$\Rightarrow 5(1) - 2, 5(2) - 2, 5(3) - 2, 5(4) - 2, \ldots$

$\therefore a_n = 5n - 2, n \in \mathbb{N}$.

**37. 3,15,27,39 … என்ற தொடர்வரிசையின் 15வது மற்றும் 24 வது உறுப்பு காண்க.**

**<u>தீர்வு</u>** முதல் உறுப்பு a = 3 மற்றும் பொது வித்தியாசம் d = 15 – 3 = 12

முதல் உறுப்பு a, பொது வித்தியாசம் d ஆக உள்ள கூட்டுத் தொடர்வரிசையின் n –வது உறுப்பு என $t_n = a + (n - 1)d$ நாம் அறிவோம்.

$t_{15} = a + (15 - 1)d = a + 14d = 3 + 14(12) = 171$

(இங்கும் a = 3 மற்றும் d = 12)

$t_{24} = a + (24 - 1)d = a + 23d = 3 + 23(12) = 279$

n-வது உறுப்பு (பொது உறுப்பு) $t_n = a + (n - 1)d$

$t_n = 3 + (n - 1)12$

$t_n = 12n - 9$

**38. ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் 7–வது உறுப்பு –1 மற்றும் 16 வது உறுப்பு 17 எனில், அதன் பொது உறுப்பைக் காண்க.**

**<u>தீர்வு</u>** $t_1, t_2, t_3, t_4, \ldots$ என்பன தேவையான கூட்டுத் தொடர்வரிகை என்க.

$t_7 = -1$ மற்றும் $t_{16} = 17$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது

$a + (7 - 1)d = -1$ மற்றும் $a + (16 - 1)d = 17$

$a + 6d = -1$ …..(1)

$a + 15d = 17$ …..(2)

சமன்பாடு (2) – லிருந்து சமன்பாடு (1) ஐ கழிக்க, நாம் பெறுவது 9d = 18 –லிருந்து d = 2.

d = 2 எனச் சமன்பாடு (1) –யில் பிரதியிட நாம் பெறுவது, a + 12 = -1. எனவே, a = - 13

ஆகவே, பொது உறுப்பு $t_n = a + (n - 1)d = -13 + (n - 1)2 = 2n - 15$

**39. கீழே கொடுக்கப்பட்டுள்ள பொது உறுப்புகளையுடைய கூட்டுத் தொடர் வரிசைகளின் முதல் உறுப்பு மற்றும் பொது வித்தியாசம் காண்க. (i) $t_n = 3 + 2n$ (ii) $t_n = 4 – 7n$**

**தீர்வு**

**(i)** $\mathbf{t_n = 3 + 2n}$

$t_1 = 5$ , $t_2 = 7$ $\therefore a = 5, d = 2$

**(ii)** $\mathbf{t_n = 4 - 7n}$

$t_1 = -3$ , $t_2 = -10$

$d = t_2 - t_1 = -7$

$\therefore a = -3, d = -7$

**40. 9, 15, 21, 27,.......183 என்ற கூட்டுத் தொடர்வரிசையின் நடு உறுப்புகளைக் காண்க.**

**தீர்வு** a = 9, d = 6, l = 183

$$n = \frac{l-a}{d} + 1$$

$$= \frac{183-9}{6} + 1$$

$$= \frac{174}{6} + 1$$

$$= 29 + 1 = 30$$

∴ 15 ஆவது உறுப்பும், 16 ஆவது உறுப்பும் நடு உறுப்புகளாகும்.

$$t_n = a + (n-1)d$$

$\therefore t_{15} = a + 14d$
$= 9 + 14(6)$
$= 9 + 84$
$= 93$

$t_{16} = a + 15d$
$= 9 + 15(6)$
$= 9 + 90$
$= 99$

∴ 93, 99 என்பன இக்கூட்டுத் தொடர் வரிசையின் நடு உறுப்புகளாகும்.

**41. ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் ஒன்பதாவது உறுப்பின் ஒன்பது மடங்கும், பதினைந்தாவது உறுப்பின் பதினைந்து மடங்கும் சமம் இருபத்து நான்காவது உறுப்பின் ஆறு மடங்கானது பூச்சியம் என நிறுவுக.**

**தீர்வு** $9t_9 = 15\, t_{15}$ .....(1) என்க

$6t_{24} = 0$ எனக் காட்ட வேண்டும்

$(1) \Rightarrow 9(a + 8d) = 15(a + 14d)$ ; $9a + 72d = 15a + 210d$

$\Rightarrow 6a + 138d = 0$

$\Rightarrow 6(a + 23d) = 0$

$\Rightarrow 6\, t_{24} = 0$ என நிரூபிக்கப்பட்டது.

**42. ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் அமைந்த அடுத்தடுத்த மூன்று உறுப்புகளின் கூடுதல் 27 மற்றும் அவற்றின் பெருக்கற்பலன் 288 எனில், அந்த மூன்று உறுப்புகளைக் காண்க.**

**தீர்வு** கூட்டுத் தொடர்வரிசையில் அமைந்த அடுத்தடுத்த மூன்று உறுப்புகள் a-d, a, a+d என்க

கூடுதல் = 27

$a - d + a + a + d = 27$

$3a = 27,$

$a = \frac{27}{3}$

$a = 9$

பெருக்கற்பலன் = 288

$(a-d)\ (a)\ (a+d) = 288$

$a(a^2 - d^2) = 288$

$9(9^2 - d^2) = 288$

$81 - d^2 = \frac{288}{9}$

$81 - d^2 = 32$

$81 - 32 = d^2$

$49 = d^2 \quad \therefore d = \pm 7$

∴ கூட்டுத் தொடர்வரிசையில் அமைந்த மூன்று உறுப்புகள்= 2, 9,16 (அ) 16, 9, 2

## 5 MARKS

**1. 396,504,636 ஆகியவற்றின் மீ.பொ.வ காண்க**

**தீர்வு**

504 = 396x1 + 108

396=108 x 3 +72

108= 72 x 1 +36

72= 36 x 2 + 0

எனவே, 396 மற்றும் 504 – யின் மீ.பொ.வ. 36 ஆகும்.

636 = 36 x 17 + 24

36=24 x 1 +12

24= 12 x 2 +0

எனவே, 636 மற்றும் 36 –ன் மீ மீ.பொ.வ. 12 ஆகும்.

∴ 396, 504 , 636 ன் மீ.பொ.வ. = 12

**2. ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் அமைந்த அடுத்தடுத்த மூன்று உறுப்புகளின் கூடுதல் 28 மற்றும் அவற்றின் வர்க்கங்களின் கூடுதல் 276. அந்த நான்கு எண்களைக் காண்க.**

**தீர்வு**

கூட்டுத் தொடர்வரிசையில் அமைந்த அடுத்தடுத்த நான்கு எண்களை (a - 3d),(a – d),(a+d) மற்றும் (a +3d) என எடுத்துக்கொள்வோம்

நான்கு உறுப்புகளின் கூடுதல் 28 என்பதால்

$$a - 3d + a - d + a + d + a + 3d = 28$$

$$4a = 28,$$

$$a = 7$$

இதுபோலவே, அவற்றின் வர்க்கங்களின் கூடுதல் 276 என்பதால்,

$$(a - 3d)^2 + (a - d)^2 + (a + d)^2 + (a + 3d)^2 = 276$$

$$a^2 - 6ad + 9d^2 + a^2 - 2ad + d^2 + a^2 + 2ad + d^2 + a^2 + 6ad + 9d^2 = 276$$

$$4a^2 + 20d^2 = 276 \Rightarrow 4(7)^2 + 20d^2 = 276$$

$$196 + 20d^2 = 276$$

$$20d^2 = 80$$

$d^2 = 4 \Rightarrow d = \pm\sqrt{4}$ எனில் $d = \pm 2$

$a=7, d=2$ எனில், தேவையான நான்கு எண்கள் 7 – 3(2), 7 – 2, 7 + 2 மற்றும் 7+ 3(2)

அதாவது, 1, 5, 9 மற்றும் 13.

$a=7, d=-2$ எனில், தேவையான நான்கு எண்கள் 13, 9, 5 மற்றும் 1

∴ எனவே, கூட்டுத் தொடர்வரிசையில் அமைந்த நான்கு எண்கள் 1, 5, 9 மற்றும் 13.

**3. ஒரு தாய் தன்னிடம் உள்ள ₹207 ஐ கூட்டுத் தொடர் வரிசையில் அமையும் மூன்று பாகங்களாகப் பிரித்துத் தனது மூன்று குழந்தைகளுக்கும் கொடுக்க விரும்பினார். அவற்றில் இரு சிறிய தொகைகளின் பெருக்கற்பலன் ₹4623 ஆகும். ஒவ்வொரு குழந்தையும் பெறும் தொகையினை காண்க.**

**<u>தீர்வு</u>**

மூன்று குழந்தைகள் பெறும் தொகை கூட்டுத் தொடர்வரிசையில் அமைவதால் அவற்றை, $a - d, a, a + d$ என்க. தொகையின் கூடுதல் ₹207 என்பதால்

$$(a - d) + a + (a + d) = 207.$$

$3a = 207$ – லிருந்து $a = 69$.

இரு சிறிய தொகைகளின் பெருக்கற்பலன் 4623 என்பதால்

$$(a - d)a = 4623$$

$$(69 - d)69 = 4623 \ ; \ d = 2$$

எனவே, மூன்று குழந்தைகளுக்கும் தாய் பிரித்துக் கொடுத்த தொகை

₹(69 – 2), ₹69 , ₹(69 + 2) அதாவது ₹67, ₹69 மற்றும் ₹71.

**4. ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் 6–வது மற்றும் 8–வது உறுப்புகளின் விகிதம் 7 : 9 எனில், 9–வது மற்றும் 13–வது உறுப்புகளின் விகிதம் காண்க.**

**<u>தீர்வு</u>**

$$t_6 : t_8 = 7 : 9$$

$$\Rightarrow \frac{t_6}{t_8} = \frac{7}{9} \Rightarrow \frac{a+5d}{a+7d} = \frac{7}{9}$$

$\Rightarrow 9a + 45d = 7a + 49d \Rightarrow a = 2d$

$t_9 : t_{13}$ –வை காண வேண்டும்

$\Rightarrow \frac{t_9}{t_{13}} = \frac{a+8d}{a+12d} = \frac{10d}{14d} = \frac{5}{7}$

5 : 7 என்பன தேவையான விகிதமாகும்.

**5. ஒரு குளிர்காலத்தில் திங்கள்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை ஊட்டியின் வெப்பநிலை கூட்டுத் தொடர்வரிசையில் உள்ளன. திங்கள் கிழமை முதல் புதன்கிழமை வரை உள்ள வெப்பநிலைகளின் கூடுதல் 0°C மற்றும் புதன்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை உள்ள வெப்பநிலைகளின் கூடுதல் 18°C எனில், ஐந்து நாட்களின் வெப்பநிலைகளைக் காண்க.**

**<u>தீர்வு</u>**

$T_1, T_2, T_3, T_4, T_5$ என்பது திங்கள்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை உள்ள ஊட்டியின் வெப்பநிலை என்க

$T_1 + T_2 + T_3 = 0°C$ ----------------(1)

$T_3 + T_4 + T_5 = 18°C$ ----------------(2)

(1) $\Rightarrow a + a + d + a + 2d = 0$

$3a + 3d = 0; a + d = 0$ ----------------(3)$\because (a = -d)$

**(2)** $\Rightarrow a + 2d + a + 3d + a + 4d = 18$

$\Rightarrow 3a + 9d = 18; 6d = 18$ (a = -d)

$d = 3 \therefore a = -3$

$T_1 = -3°C, T_2 = 0°C, T_3 = 3°C, T_4 = 6°C, T_5 = 9°C$

**5. Priya earned ₹15,000 in the first month. Thereafter her salary increased by ₹1500 per year. Her expenses are ₹13,000 during the first year and the expenses increases by ₹900 per year. How long will it take for her to save ₹20,000 per month.**

| **<u>Solution</u>** | **1** year | **2 year** |
|---|---|---|
| Income | ₹15,000 | ₹16,500 |
| Expenses | ₹13,000 | ₹13,900 |
| Savings | ₹2,000 | ₹2,600 |

$\therefore$ **Annual Savings** ₹2,000, ₹2,600, ₹3,200…….a = 2,000, d = 600, $t_n$ = 20,000

$a + (n-1)d = 20,000$

$\Rightarrow 2000+(n-1)600 = 20,000$

$\Rightarrow 600n - 600 = 18,000$

$\Rightarrow 600n = 18,600$

$\Rightarrow n = \frac{18600}{6} = \frac{186}{6} = 31$

n= 31 years

The savings of Priya after 31 years is ₹ 20,000.

# இயல் - 3
# இயற்கணிதம்
## 2 MARKS

**1. சுருக்குக $\frac{b^2+3b-28}{b^2+4b+4} \div \frac{b^2-49}{b^2-5b-14}$**

**தீர்வு**

$$\frac{b^2+3b-28}{b^2+4b+4} \div \frac{b^2-49}{b^2-5b-14} = \frac{(b-4)\,(b+7)}{(b+2)(b+2)} \times \frac{(b-7)(b+2)}{(b+7)(\,b-7)} = \frac{b-4}{b+2}$$

**2. P(x) = $x^2$ – 5x – 14 என்ற பல்லுறுப்புக்கோவையை q(x) என்ற பல்லுறுப்புக் கோவையால் வகுக்க $\frac{x-7}{x+2}$ எனும் விடை கிடைக்கிறது எனில் q(x) –ஐக் காண்க.**

**<u>தீர்வு</u>** P(x) = $x^2$ – 5x – 14

$\frac{P(x)}{q(x)} = \frac{x-7}{x+2}$ என கொடுக்கப்பட்டுள்ளது

$\frac{x^2-5x-14}{q(x)} = \frac{x-7}{x+2}$

$\frac{(x-7)(x+2)}{q(x)} = \frac{x-7}{x+2}$

∴ q(x) = $(x + 2)^2$

**3. தீர்க்க $2m^2 + 19m + 30 = 0$.**

**<u>தீர்வு</u>** $2m^2 + 19m + 30 = 2m^2 + 4m + 15m + 30 = 2m(m+2) + 15(m + 2)$

$= (m + 2)(2m + 15)$

(m + 2 ) ( 2m + 15) = 0 -யின் காரணிகளைப் பூச்சியத்திற்குச் சமன்படுத்த

m + 2 = 0 ⇒ m = -2 அல்லது 2m + 15 = 0 ⇒ $m = \frac{-15}{2}$

மூலங்கள் **−2** அல்லது $\frac{-15}{2}$

**4. $\frac{x^2+20x+36}{x^2-3x-28} - \frac{x^2+12x+4}{x^2-3x-28}$ ஐக் காண்க**

**<u>தீர்வு</u>**

$$\frac{x^2+20x+36}{x^2-3x-28} - \frac{x^2+12x+4}{x^2-3x-28} = \frac{(x^2+20x+36)-(x^2+12x+4)}{x^2-3x-28}$$

$$= \frac{8x+32}{x^2-3x-28} = \frac{8(x+4)}{(x-7)(\,x+4)} = \frac{8}{x-7}$$

**5. காரணிப்படுத்தல் முறையைப் பயன்படுத்திப் பின்வரும் இருபடிச் சமன்பாடுகளைத் தீர்க்க.**

**$4x^2$ -7x – 2=0**

**<u>தீர்வு</u>** $4x^2 - 7x - 2 = 0$

$(x-2)(\,4x+1) = 0$

$x - 2 = 0$ (அல்லது) $4x + 1 = 0$

$x = +2, x = -\frac{1}{4}$

**6.** **காரணிப்படுத்தல் முறையைப் பயன்படுத்திப் பின்வரும் இருபடிச் சமன்பாடுகளைத் தீர்க்க.**

**$3(p^2 - 6) = p(p+5)$**

**தீர்வு**

**$3(p^2 - 6) = p(p+5)$**

$3p^2 - 18 = p^2 + 5p$

$2p^2 - 5p - 18 = 0$

$(2p - 9)(p + 2) = 0$

$2p - 9 = 0$ (அல்லது) $p + 2 = 0$

$p = +\frac{9}{2}$ , $p = -2$

**7.** **காரணிப்படுத்தல் முறையைப் பயன்படுத்திப் பின்வரும் இருபடிச் சமன்பாடுகளைத் தீர்க்க.**

$\sqrt{a(a-7)} = 3\sqrt{2}$

**தீர்வு**

$\sqrt{a(a-7)} = 3\sqrt{2}$ இருபுறமும் வர்க்கப்படுத்துக.

$a(a-7) = \left(3\sqrt{2}\right)^2$

$a^2 - 7a = (3\sqrt{2})^2$

$a^2 - 7a - 18 = 0$

$(a - 9)(a + 2) = 0$

$\therefore a = 9, a = -2$

**8.** **காரணிப்படுத்தல் முறையைப் பயன்படுத்திப் பின்வரும் இருபடிச் சமன்பாடுகளைத் தீர்க்க.**

**$\sqrt{2}x^2 + 7x + 5\sqrt{2} = 0$**

**தீர்வு**

$\sqrt{2}x^2 + 7x + 5\sqrt{2} = 0$

$(\sqrt{2}x + 5)\left(x + \sqrt{2}\right) = 0$

$\therefore x = -\frac{5}{\sqrt{2}}$ அல்லது $x = -\sqrt{2}$

**9.** **காரணிப்படுத்தல் முறையைப் பயன்படுத்திப் பின்வரும் இருபடிச் சமன்பாடுகளைத் தீர்க்க.**

**$2x^2 - x + \frac{1}{8} = 0$**

**தீர்வு**

$16x^2 - 8x + 1 = 0$

$(4x - 1)(4x - 1) = 0$

$\therefore x = \frac{1}{4}, x = \frac{1}{4}$

**10.** **சூத்திர முறையைப் பயன்படுத்திப் பின்வரும் இருபடிச் சமன்பாடுகளைத் தீர்க்க $2x^2 - 5x + 2 = 0$**

**தீர்வு**

$2x^2 - 5x + 2 = 0$

இங்கு a = 2, b = -5, c = 2

$$x = \frac{-b \pm \sqrt{b^2 - 4ac}}{2a} = \frac{5 \pm\sqrt{(-5)^2-4(2)(2)}}{2(2)}$$

$$x = \frac{5 \pm \sqrt{25-16}}{4} = \frac{5 \pm 3}{4}$$

$x = \frac{5+3}{4}$ அல்லது $x = \frac{5-3}{4}$

$\therefore x = 2$ (அல்லது ) $x = \frac{1}{2}$

**11. சூத்திர முறையைப் பயன்படுத்திப் பின்வரும் இருபடிச் சமன்பாடுகளைத் தீர்க்க**

**$3y^2 - 20y - 23 = 0$**

$3y^2 - 20y - 23 = 0$

இங்கு a =3, b = - 20, c = -23

$$x = \frac{-b \pm \sqrt{b^2 - 4ac}}{2a} = \frac{20 \pm\sqrt{(-20)^2-4(3)(-23)}}{2(3)}$$

$$x = \frac{20 \pm \sqrt{400+276}}{6} = \frac{20 \pm\sqrt{676}}{6}$$

$= \frac{20 \pm 26}{6} = \Rightarrow x = \frac{20+26}{6}$ (அல்லது ) $\frac{20-26}{6}$

$x = \frac{23}{3}, -1$

**12. குமரனின் தற்போதைய வயதின் இருமடங்கோடு ஒன்றைக் கூட்டினால் கிடைப்பது, குமரனின் இரண்டாண்டுகளுக்கு முந்தைய வயதையும் அவரின் 4 ஆண்டுகளுக்குப் பிந்தைய வயதையும் பெருக்கக் கிடைப்பதற்குச் சமம் எனில், அவரின் தற்போதைய வயதைக் காண்க.**

**<u>தீர்வு</u>** குமரனின் தற்போதைய வயது x ஆண்டுகள் என்க.

**2** ஆண்டுகளுக்கு முன் வயது = *(x – 2)* ஆண்டுகள்

**4** ஆண்டுகளுக்கு பிந்தைய வயது = (x + 4) ஆண்டுகள்

கொடுத்த தகவல்படி, (x – 2) (x + 4) = 1 + 2x

$x^2 + 2x - 8 = 1 + 2x \Rightarrow x^2 = 9 \Rightarrow \Rightarrow (x-3)(x+3) = 0$ – லிருந்து

$x = \pm 3$ வயது குறை எண்ணாக இருக்க முடியாது.

எனவே, குமரனின் தற்போதைய வயது **3** ஆண்டுகள்.

**13. ஓர் எண் மற்றும் அதன் தலைகீழியின் வித்தியாசம் $\frac{24}{5}$ எனில் அந்த எண்ணைக் காண்க.**

**<u>தீர்வு</u>**

x என்பது தேவையான எண் என்க. $x - \frac{1}{x} = \frac{24}{5}$ எனத் தரப்பட்டுள்ளது.

$\Rightarrow \frac{x^2 - 1}{x} = \frac{24}{5} \Rightarrow 5x^2 - 24x - 5 = 0$

$\Rightarrow (x-5)(5x+1) = 0$

$\therefore x = 5$ அல்லது $x = \frac{-1}{5}$

**14. $x^2 - 13x + k = 0$ என்ற சமன்பாட்டின் மூலங்களின் வித்தியாசம் 17 எனில், k–யின் மதிப்புகக் காண்க.**

**தீர்வு**

$x^2 - 13x + k = 0$ இங்கு, a = 1, b = -13, c = k

$\alpha$ மற்றும் $\beta$ சமன்பாட்டின் மூலங்கள் என்க.

$\alpha + \beta = \frac{-b}{a} = \frac{-(-13)}{1} = 13$ ……(1)

$\alpha - \beta = 17$ (கொடுக்கப்பட்டது) ……(2)

(1) + (2) காண, $2\alpha = 30$ கிடைக்கும். எனவே, $\alpha = 15$.

$\alpha = 15$ ஐ (1) –யில் பிரதியிட $15 + \beta = 13$, $\beta = -2$

ஆனால், (2) –லிருந்து $\alpha\beta = \frac{c}{a} = \frac{k}{1}$, $15 \times (-2) = k$ எனவே, $k = -30$

**15. $3x^2 + 7x - 2 = 0$ எனும் சமன்பாட்டின் மூலங்கள் $\alpha$ மற்றும் $\beta$ எனில், கொடுக்கப்பட்ட மதிப்புகளைக் காண்க.(i) $\frac{\alpha}{\beta} + \frac{\beta}{\alpha}$**

**தீர்வு**

$3x^2 + 7x - 2 = 0$ இங்கு, a = 3, b = 7, c = -2

$\alpha$ மற்றும் $\beta$ சமன்பாட்டின் மூலங்கள், எனவே,

$\alpha + \beta = \frac{-b}{a} = \frac{-7}{3}$

$\alpha\beta = \frac{c}{a} = \frac{-2}{3}$

$$\frac{\alpha}{\beta} + \frac{\beta}{\alpha} = \frac{\alpha^2+\beta^2}{\alpha\beta} = \frac{(\alpha+\beta)^2 - 2\alpha\beta}{\alpha\beta} = \frac{\left(\frac{-7}{3}\right)^2 - 2\left(\frac{-2}{3}\right)}{\frac{-2}{3}}$$

$$= \frac{\frac{49}{9} + \frac{4}{3}}{\frac{-2}{3}} = \frac{\frac{49+12}{9}}{\frac{-2}{3}} = \frac{61}{9} \times \frac{3}{-2} = \frac{-61}{6}$$

**16. $3x^2 + 7x - 2 = 0$ எனும் சமன்பாட்டின் மூலங்கள் $\alpha$ மற்றும் $\beta$ எனில், கொடுக்கப்பட்ட மதிப்புகளைக் காண்க. $\frac{\alpha^2}{\beta} + \frac{\beta^2}{\alpha}$**

**தீர்வு**

$$\frac{\alpha^2}{\beta} + \frac{\beta^2}{\alpha} = \frac{\alpha^3+\beta^3}{\alpha\beta} = \frac{(\alpha+\beta)^3 - 3\alpha\beta(\alpha+\beta)}{\alpha\beta} = \frac{\left(\frac{-7}{3}\right)^3 - 3\left(\frac{-2}{3}\right)\left(\frac{-7}{3}\right)}{\frac{-2}{3}}$$

$$= \frac{\frac{343}{27} - \frac{42}{9}}{\frac{-2}{3}} = \frac{\frac{343-126}{27}}{\frac{-2}{3}} = \frac{217}{27} \times \frac{3}{-2} = \frac{217}{-18}$$

17. **கொடுக்கப்பட்ட சமன்பாட்டின் மூலங்கள் மெய் மற்றும் சமம் எனில், k-யின் மதிப்பைக் காண்க. $(5k - 6)x^2 + 2kx + 1 = 0$**

**தீர்வு**

$(5K - 6)\ x^2 + 2kx + 1 = 0$

$a = 5k - 6,\ b = 2k,\ c = 1$

மூலங்கள் மெய் மற்றும் சமம் என்பதால்

$b^2 - 4ac = 0$

$(2k)^2 - 4(5k-6)1 = 0 \Longrightarrow 4k^2 - 20k + 24 = 0 \quad \div 4$

$k^2 - 5k + 6 = 0 \quad \Longrightarrow (k - 2)\ (k - 3) = 0$

$\therefore k = 3$ (அல்லது) $k = 2$

**18. கொடுக்கப்பட்ட சமன்பாட்டின் மூலங்கள் மெய் மற்றும் சமம் எனில், k-யின் மதிப்பைக் காண்க.**
**$kx^2 + (6k+2)x + 16 = 0$**

**தீர்வு** $kx^2 + (6k+2)x + 16 = 0$

$a = k,\ b = 6k+2,\ c = 16$

மூ லங்கள் மெய் மற்றும் சமம் என்பதால்

$b^2 - 4ac = 0$

$\Longrightarrow (6k+2)^2 - 4(k)16 = 0$

$\Longrightarrow 36k^2 + 24k + 4 - 64k = 0$

$\Longrightarrow 36k^2 - 40k + 4 = 0\ (\div 4)$

$\Longrightarrow 9k^2 - 10k + 1 = 0$

$\Longrightarrow (k - 1)\ (9k - 1) = 0$

$\therefore k = 1$ (அல்லது) $k = \frac{1}{9}$

**19. மெய்யெண்களை மூலங்களாகக் கொண்ட $3x^2 + kx + 81 = 0$ என்ற சமன்பாட்டின் ஒரு மூலம் மற்றொரு மூலத்தின் வர்க்கம் எனில், k –யின் மதிப்புக் க்ாண்க.**

**தீர்வு** $\alpha, \beta$ என்பன $3x^2 + kx + 81 = 0$ ன் மூலங்களாகும்.

$\alpha + \beta = -\frac{k}{3}$ ------ (1)

$\alpha\beta = 27$ ------ (2)

$\alpha = \beta^2$ எனக்கொடுக்கப்பட்டுள்ளது

(2) லிருந்து

$\beta^3 = 27$

$\beta = 3$

$\therefore \alpha = 9$

(1) $\Longrightarrow 9 + 3 = -\frac{k}{3}$

$12 = -\frac{k}{3}$

$k = -36$

## 5 MARKS

**1. பின்வரும் மூன்று மாறிகளில் அமைந்த நேரிய சமன்பாட்டு தொகுப்பினைத் தீர்க்க**

**3x–2y+ z = 2, 2x+3y–z = 5, x + y + z = 6.**

**தீர்வு**

3x–2y+ z = 2 ……(1)

2x+3y–z = 5 ……(2)

x + y + z = 6 ……(3)

(1) மற்றும் (2) ஐக் கூட்ட 3x–2y+ z = 2

2x+3y–z = 5 (+)

5x + y = 7 ……(4)

(2) மற்றும் (3) ஐக் கூட்ட 2x+3y- z = 5

x + y + z = 6 (+)

3x + 4y = 11 ……(5)

(4) × 4 − (5) 20x + 4y = 28

3x + 4y = 11 (-)

17x = 17 ⇒ $x = 1$

x = 1 என (4) –யில் பிரதியிட, 5 + y = 7 ⇒ $y = 2$

x = 1, $y$ = 2 என (3) – யில் பிரதியிட, 1 + 2 + z = 6 ⇒ $z = 3$

எனவே, $x = 1, y = 2, z = 3$

**2. தாத்தா, தந்தை, வாணி ஆகிய மூவரின் சராசரி வயது 53 ஆகும். தாத்தாவின் வயதில் பாதி, தந்தையின் வயதில் மூன்றில் ஒரு பங்கு மற்றும் வாணியின் வயதில் நான்கில் ஒரு பங்கு ஆகியவற்றின் கூடுதல் 65 ஆகும். நான்கு ஆண்டுகளுக்கு முன் தாத்தாவின் வயது வாணியின் வயதைப் போல் நான்கு மடங்கு எனில் மூவரின் தற்போதைய வயதைக் காண்க ?**

**தீர்வு** வாணி, தந்தை மற்றும் தாத்தாவின் தற்போதைய வயது x, y ,z என்க

$\frac{x+y+z}{3}$ = 53 ⇒ x + y + z = 159 ------- (1)

$\frac{1}{2}z + \frac{1}{3}y + \frac{1}{4}x = 65$

$\frac{6z+4y+3x}{12}$ = 65

3x + 4y + 6z = 780 ------- (2)

(z -4) = 4(x – 4) ⇒ 4x – z = 12 ------- (3)

(1) & (2) லிருந்து

(1) x (4) ⇒ 4x + 4y + 4z = 636

(2) ⇒ 3x + 4y + 6z = 780

(கழிக்க) x – 2z = - 144 ------- (4)

(3) & (4) லிருந்து

(3) x (2) $\Rightarrow 8x - 2z = 24$

(4) $\Rightarrow \underline{x - 2z = -144}$

(கழிக்க) $7x = 168$ ------- (4)

$x = \frac{168}{7} = 24$

x = 24 மதிப்பிடு (3)

$96 - z = 12$

$z = 84$

(1) $\Rightarrow 24 + y + 84 = 159$

$\Rightarrow y = 51$

வாணியின் தற்போதைய வயது = **24**

வாணியின் தந்தையின் தற்போதைய வயது = **51**

வாணியின் தாத்தாவின் தற்போதைய வயது = **84**

**3. $x^3 + x^2 - x + 2$ மற்றும் $2x^3 - 5x^2 + 5x - 3$ ஆகிய பல்லுறுப்பு கோவைகளின் மீ.பொ.வ காண்க.**

**<u>தீர்வு</u>**

$f(x) = 2x^3 - 5x^2 + 5x - 3$ மற்றும் $g(x) = x^3 + x^2 - x + 2$

$$
\begin{array}{r|l}
 & 2 \\
\hline
x^3 + x^2 - x + 2 & 2x^3 - 5x^2 + 5x - 3 \\
 & 2x^3 + 2x^2 - 2x + 4 \quad (-) \\
\hline
 & -7x^2 + 7x - 7
\end{array}
$$

$= -7(x^2 - x + 1)$

$7(x^2 - x + 1) \neq 0$ , - 7 என்பது g(x) –யின் ஒரு வகுத்திஅல்ல. $g(x) = x^3 + x^2 - x + 2$ – ஐ மீதியால் வகுக்க (மாறிலிக் காரணியை விடுத்து), நாம் பெறுவது

$$
\begin{array}{r|l}
 & x + 2 \\
\hline
x^2 - x + 1 & x^3 + x^2 - x + 2 \\
 & x^3 - x^2 + x \quad (-) \\
\hline
 & 2x^2 - 2x + 2 \\
 & 2x^2 - 2x + 2 \quad (-) \\
\hline
 & 0
\end{array}
$$

இந்நிலையில், மீதி பூச்சியம் ஆகும்

எனவே, மீ.பொ.வ $(2x^3 - 5x^2 + 5x - 3 , g(x) = x^3 + x^2 - x + 2) = x^2 - x + 1$

**4. கீழ்க்காணும் பல்லுறுப்புக் கோவையின் மீ.பொ.வ காண்க. $x^4 + 3x^3 + x - 3, x^3 + x^2 - 5x + 3$**

**தீர்வு** $f(x) = x^4 + 3x^3 + x - 3$ மற்றும் $g(x) = x^3 + x^2 - 5x + 3$

$x + 2$

$x^3 + x^2 - 5x + 3 \,\big)\, x^4 + 3x^3 + 0 \quad - x - 3$

$x^4 + x^3 - 5x^2 + 3x$ (-)

$2x^3 + 5x^2 - 4x - 3$

$2x^3 + 2x^2 - 10x + 6$ (-)

$3x^2 + 6x - 9$

$= 3(x^2 + 2x - 3)$

$x - 1$

$x^2 + 2x - 3 \,\big)\, x^3 + x^2 - 5x + 3$

$x^3 + 2x^2 - 3x$ (-)

$-x^2 - 2x + 3$

$-x^2 - 2x + 3$ (-)

$0$

$\therefore (f(x), g(x))$ - மீ.பொ.வ $= x^2 + 2x - 3$

**5. கீழ்க்காணும் பல்லுறுப்புக் கோவையின் மீ.பொ.வ காண்க. $x^4 - 1, x^3 - 11x^2 + x - 11$**

**தீர்வு** $f(x) = x^4 - 1$ மற்றும் $g(x) = x^3 - 11x^2 + x - 11$

$x + 11$

$x^3 - 11x^2 + x - 11 \,\big)\, x^4 + 0x^3 + 0x^2 - 0x - 1$

$x^4 - 11x^3 + x^2 - 11x$ (-)

$11x^3 - x^2 + 11x - 1$

$11x^3 - 121x^2 + 11x - 121$ (-)

$120x^2 + 120$

$= 120(x^2 + 1)$

$x - 11$

$x^2 - 0x + 1 \,\big)\, x^3 - 11x^2 + x - 11$

$x^3 + 0x^2 + x$ (-)

$-11x^2 + 0x - 11$

$-11x^2 + 0x - 11$ (-)

$0$

$\therefore (f(x), g(x))$ - மீ.பொ.வ $= x^2 + 1$

**6. கீழ்க்காணும் பல்லுறுப்புக் கோவையின் மீ.பொ.வ காண்க.**

**$3x^4 + 6x^3 - 12x^2 - 24x, 4x^4 + 14x^3 + 8x^2 - 8x$**

**<u>தீர்வு</u>**

$$f(x) = 3x^4 + 6x^3 - 12x^2 - 24x = 3x(x^3 + 2x^2 - 4x - 8)$$

$g(x) = 4x^4 + 14x^3 + 8x^2 - 8x = 2x(2x^3 + 7x^2 + 4x - 4)$ (3x,2x) - ன் மீ.பொ.வ. x

Quotient: $2$

Divisor: $x^3 + 2x^2 - 4x - 8$

$2x^3 + 7x^2 + 4x - 4$

$2x^3 + 4x^2 - 8x - 1$ (-)

$3x^2 + 12x + 12$

$= 3(x^2 + 4x + 4)$

Quotient: $x - 2$

Divisor: $x^2 + 4x + 4$

$x^3 + 2x^2 - 4x - 8$

$x^3 + 4x^2 + 4x$ (-)

$-2x^2 - 8x - 8$

$-2x^2 - 8x - 8$ (-)

$0$

$\therefore$ (f(x), g(x)) - மீ.பொ.வ = $x(x^2 + 4x + 4)$

**7. கீழ்க்காணும் பல்லுறுப்புக் கோவையின் மீ.பொ.வ காண்க. $3x^3 + 3x^2 + 3x + 3, 6x^3 + 12x^2 + 6x + 12$**

**$3x^3 + 3x^2 + 3x + 3, 6x^3 + 12x^2 + 6x + 12$**

$f(x) = 3x^3 + 3x^2 + 3x + 3 = 3(x^3 + x^2 + x + 1)$

$g(x) = 6x^3 + 12x^2 + 6x + 12 = 6(x^3 + 2x^2 + x + 2)$

(3,6) - ன்மீ.பொ.வ . = 3

Quotient: $1$

Divisor: $x^3 + x^2 + x + 1$

$x^3 + 2x^2 + x + 2$

$x^3 + x^2 + x + 1$ (-)

$x^2 + 0x + 1$

Quotient: $x + 1$

Divisor: $x^2 + 0x + 1$

$x^3 + x^2 + x + 1$

$x^3 + 0x^2 + x$ (-)

$x^2 + 0x + 1$

$x^2 + 0x + 1$ (-)

$0$

$\therefore$(f(x), g(x)) - மீ.பொ.வ = $3(x^2 + 1)$

**8. p(x) மற்றும் q(x) என்ற இரு பல்லுறுப்புக் கோவைகளின் மீ.பொ.ம மற்றும் மீ.பொ.வ கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து கீழ்க்கண்டவற்றைக் கண்டறிந்து நிரப்புக.**

| மீ.பொ.ம | மீ.பொ.வ | p(x) | q(x) |
|---|---|---|---|
| **$a^3 - 10a^2 + 11a + 70$** | **a - 7** | **$a^2 - 12a + 35$** | |

**பின்வரும் கோவைகளின் விலக்கப்பட்ட மதிப்பு காண்க.**

**தீர்வு**

மீ.பொ.ம = $a^3 - 10a^2 + 11a + 70$ , மீ.பொ.வ = (a-7) மற்றும்

$p(x) = a^2 - 12a + 35$

q(x) = (மீ.பொ.ம x மீ.பொ.வ) / p(x) $= \frac{(a^3 - 10a^2 + 11a + 70)(a-7)}{a^2 - 12a + 35}$

$$\begin{array}{r|l} & a + 2 \\ \hline a^2 - 12a + 35 & a^3 - 10a^2 + 11a + 70 \\ & a^3 - 12a^2 + 35a \quad (-) \\ \hline & 2a^2 - 24a + 70 \\ & 2a^2 - 24a + 70 \quad (-) \\ \hline & 0 \end{array}$$

$\therefore q(x) = (a + 2)(a - 7)$

**9. சுருக்குக $\frac{1}{x^2-5x+6} + \frac{1}{x^2-3x+2} - \frac{1}{x^2-8x+15}$**

**தீர்வு**

$$\frac{1}{x^2-5x+6} + \frac{1}{x^2-3x+2} - \frac{1}{x^2-8x+15}$$

$$= \frac{1}{(x-2)(x-3)} + \frac{1}{(x-2)(x-1)} - \frac{1}{(x-5)(x-3)}$$

$$= \frac{(x-1)(x-5)+(x-3)(x-5)-(x-1)(x-2)}{(x-1)(x-2)(x-3)(x-5)}$$

$$= \frac{(x^2-6x+5)+(x^2-8x+15)-(x^2-3x+2)}{(x-1)(x-2)(x-3)(x-5)}$$

$$= \frac{x^2-11x+18}{(x-1)(x-2)(x-3)(x-5)}$$

$$= \frac{(x-9)(x-2)}{(x-1)(x-2)(x-3)(x-5)}$$

$$= \frac{x-9}{(x-1)(x-3)(x-5)}$$

**10. $A = \frac{2x+1}{2x-1}$ மற்றும் $B = \frac{2x-1}{2x+1}$ எனில் $\frac{1}{A-B} - \frac{2B}{A^2-B^2}$ காண்க**

**தீர்வு**

$$\frac{1}{A-B} - \frac{2B}{A^2-B^2} = \frac{1}{A-B} - \frac{2B}{(A+B)(A-B)}$$

$$= \frac{A+B-2B}{(A+B)(A-B)} = \frac{(A-B)}{(A+B)(A-B)}$$

$$= \frac{1}{A+B} = \frac{1}{\frac{2x+1}{2x-1} + \frac{2x-1}{2x+1}}$$

$$= \frac{1}{\frac{(2x+1)^2+(2x-1)^2}{(2x+1)(2x-1)}} = \frac{(2x+1)(2x-1)}{(2x+1)^2+(2x-1)^2}$$

$$= \frac{[2x]^2 - 1^2}{4x^2+1+4x+4x^2+1-4x}$$

$$= \frac{4x^2-1}{8x^2+2}$$

$$= \frac{4x^2-1}{2(4x^2+1)}$$

**11. A = $\frac{x}{x+1}$ மற்றும் $B = \frac{1}{x+1}$, எனில் $\frac{(A+B)^2+(A-B)^2}{A \div B} = \frac{2(x^2+1)}{x(x+1)^2}$ காண்க.**

<u>**தீர்வு**</u> A = $\frac{x}{x+1}$ , $B = \frac{1}{x+1}$ என்க

$$\frac{(A+B)^2+(A-B)^2}{A \div B} = \frac{2(A^2+B^2)}{A \div B}$$

$$A^2 + B^2 = \frac{x^2}{(x+1)^2} + \frac{1}{(x+1)^2} = \frac{x^2+1}{(x+1)^2}$$

$$A \div B = \frac{x}{x+1} \times \frac{x+1}{1} = x$$

$$\frac{2(A^2+B^2)}{A \div B} = (2)\left(\frac{x^2+1}{(x+1)^2}\right)\left(\frac{1}{x}\right) = \frac{2(x^2+1)}{x(x+1)^2}$$

**12. சூத்திர முறையில் $x^2 + 2x - 2 = 0$ – ஐத் தீர்க்கவும்**

<u>**தீர்வு**</u>

$x^2 + 2x - 2 = 0$ – ஐ $ax^2 + bx + c = 0$ – உடன் ஒப்பிட,

a = 1, b = 2, c = -2

a, b, c –யின் மதிப்புகளைச் சூத்திரத்தில் பிரதியிட

$$x = \frac{-b \pm \sqrt{b^2 - 4ac}}{2a}$$

$$x = \frac{-2 \pm \sqrt{(2)^2 - 4(1)(-2)}}{2(1)} = \frac{-2 \pm \sqrt{12}}{2} = -1 \pm \sqrt{3}$$

எனவே, $x = -1 + \sqrt{3}, x = -1 - \sqrt{3}$

**13. சூத்திர முறையைப் பயன்படுத்தி $2x^2 - 3x - 3 = 0$ – ஐத் தீர்க்க.**

<u>**தீர்வு**</u>

$2x^2 - 3x - 3 = 0$ – ஐ $ax^2 + bx + c = 0$ – உடன் ஒப்பிட,

a = 2, b = -3, c = -3

a, b, c –யின் மதிப்புகளைச் சூத்திரத்தில் பிரதியிட

$$x = \frac{-b \pm \sqrt{b^2 - 4ac}}{2a}$$

$$x = \frac{-(-3) \pm \sqrt{(-3)^2 - 4(2)(-3)}}{2(2)} = \frac{3 \pm \sqrt{33}}{4}$$

எனவே, $x = \frac{3+\sqrt{33}}{4}, x = \frac{3-\sqrt{33}}{4}$

**14. சென்னையிலிருந்து விருதாச்சலத்திற்கு 240 கி.மீ தூரத்தைக் கடக்க ஒரு பயணிகள் தொடர்வண்டிக்கு ஒரு விரைவு தொடர்வண்டியைவிட 1 மணி நேரம் கூடுதலாகத் தேவைப்படுகிறது. பயணிகள் தொடர்வண்டியின் வேகம், விரைவு தொடர்வண்டியின் வேகத்தைவிட 20 கி.மீ/ மணி குறைவு எனில், இரு தொடர்வண்டிகளின் சராசரி வேகங்களைக் கணக்கிடுக.**

**தீர்வு**

பயணிகள் தொடர்வண்டியின் சராசரி வேகம் $x$ கி.மீ/மணி என்க

தற்போது, விரைவு தொடர்வண்டியின் சராசரி வேகம் $(x + 20)$ கி.மீ/மணி என்க

**240** கி.மீ கடக்கப் பயணிகள் தொடர்வண்டி எடுக்கும் நேரம் = $\frac{240}{x}$மணி

**240** கி.மீ கடக்கப் விரைவு தொடர்வண்டி எடுக்கும் நேரம் = $\frac{240}{x+20}$மணி

கொடுக்கப்பட்ட தகவல்களின்படி, $\frac{240}{x} = \frac{240}{x+20} + 1$

$240\left[\frac{1}{x} - \frac{1}{x+20}\right] = 1 \Rightarrow 240\left[\frac{x+20-x}{x(x+20)}\right] = 1 \Rightarrow 4800 = (x^2 + 20x)$

$x^2 + 20x - 4800 = 0 \Rightarrow (x + 80)(x - 60) = 0 \quad \Rightarrow x = -80$ அல்லது 60

வேகம் ஒரு குறை எண்ணாக இருக்க முடியாது–

எனவே, பயணிகள் தொடர்வண்டியின் சராசரி வேகம் **60** கி.மீ / மணி

எனவே, விரைவு தொடர்வண்டியின் சராசரி வேகம் **80** கி.மீ / மணி

**15. ஒரு செங்கோண முக்கோணத்தின் கர்ணம் 25 செ.மீ மற்றும் அதன் சுற்றளவு 56 செ.மீ எனில், முக்கோணத்தின் சிறிய பக்கத்தின் அளவைக் காண்க.**

**தீர்வு**

கர்ணம் **25** செ.மீ, x, y என்பன மற்ற பக்கங்கள் என்க.

சுற்றளவு = **56** செ.மீ

**25** + x + y = 56

$\therefore x + y = 31$

$y = 31 - x$

பிதாகரசு தேற்றப்படி

$x^2 + y^2 = 25^2$

$x^2 + (31 - x)^2 = 25^2$

$\Rightarrow x^2 + 961 + x^2 - 62x = 625$

$\Rightarrow 2x^2 - 62x + 336 = 0$

$\Rightarrow x^2 - 31x + 168 = 0$

$\Rightarrow (x - 24)(x - 7) = 0$

$\therefore x = 24$ அல்லது $x = 7$

செங்கோண முக்கோணத்தின் சிறிய பக்கத்தின் அளவு = **7** செ.மீ.

**16. $(c^2 – ab)x^2 – 2(a^2 – bc)x + b^2 – ac = 0$ என்ற சமன்பாட்டின் மூலங்கள் சமம் மற்றும் மெய் எனில், $a = 0$ அல்லது $a^3 + b^3 + c^3 = 3abc$ என நிரூபி.**

**தீர்வு**

$(c^2 – ab)x^2 – 2(a^2 – bc)x + b^2 – ac = 0$

$\mathbf{A} = c^2 – ab,\ B = – 2(a^2 – bc),\ C = b^2 – ac$

மூலங்கள் மெய் மற்றும் சமம் என்பதால் $\Delta = \mathbf{0}$

$B^2 – 4AC = 0$

$[-2(a^2 – bc)]^2 – 4[c^2 – ab]\ [b^2 – ac] = 0$

$4(a^2 – bc)^2 – 4\ (c^2 – ab)\ (b^2 – ac) = 0$

$4[a^4+ b^2c^2 – 2a^2bc] – 4\ [\ b^2c^2 – ac^3 – ab^3 + a^2bc] = 0 \qquad (\div 4)$

$a^4+ b^2c^2 – 2a^2bc – \ b^2c^2 \ +ac^3 +4ab^3 - a^2bc = 0$

$a^4+ ab^3 + ac^3 - 3a^2bc = 0$

$a\ [a^3+b^3+c^3 – 3abc] = 0$

$a = 0 \qquad \text{OR} \quad a^3+b^3+c^3 – 3abc = 0$


$\Rightarrow a^3+b^3+c^3 \quad = 3abc$

# இயல் – 4

## வடிவியல்

### 2 MARKS

**1. $\Delta PST \sim \Delta PQR$ என நிறுவுக.**




**தீர்வு**

$\Delta PST$ மற்றும் $\Delta PQR$ –யில்


$$\frac{PS}{PQ} = \frac{2}{2+1} = \frac{2}{3}, \frac{PT}{PR} = \frac{4}{4+2} = \frac{2}{3}$$

இதிலிருந்து, $\frac{PS}{PQ} = \frac{PT}{PR}$ மற்றும்

$\angle P$ ஆனது பொதுக் கோணம். எனவே,

SAS விதிமுறைப்படி $\Delta PST \sim \Delta PQR$

**2. ΔABC ~ ΔPQR ஆக இருக்குமா?**




**தீர்வு**

$\Delta ABC$ மற்றும் $\Delta PQR$ –யில்

$\frac{PQ}{AB} = \frac{3}{6} = \frac{1}{2}, \frac{QR}{BC} = \frac{4}{10} = \frac{2}{5}$

$\frac{1}{2} \neq \frac{2}{5}$ என்பதால் $\frac{PQ}{AB} \neq \frac{QR}{BC}$

ஒத்த பக்கங்கள் விகிதச் சமமாக இல்லை. எனவே, $\Delta ABC$ ஆனது $\Delta PQR$ – க்கு வடிவொத்ததாக அமையாது

**3. 90 செ.மீ உயரமுள்ள ஒரு சிறுவன் விளக்கு கம்பத்தின் அடியிலிருந்து 1.2மீ/வினாடி வேகத்தில் நடந்து செல்கிறான். தரையிலிருந்து விளக்கு கம்பத்தின் உயரம் 3.6மீ எனில், 4 வினாடிகள் கழித்துச் சிறுவனுடைய நிழலின் நீளத்தைக் காண்க.**

**தீர்வு**




Fig. 4.19

வேகம் = 1.2 மீ / வினாடி என்பது கொடுக்கப்பட்டது.

நேரம் = 4 வினாடி

தொலைவு = வேகம் × நேரம் = 1.2 × 4 = 4.8 மீ = BD

4 வினாடிகளுக்குப் பிறகு சிறுவனுடைய நிழலின் நீளம் $x$ என்க.

$\Delta ABE \sim \Delta CDE$ ஆகையால் $\frac{BE}{DE} = \frac{AB}{CD}$ எனவே $\frac{4.8+x}{x} = \frac{3.6}{0.9} = 4$

$\frac{4.8+x}{x} = 4$ – யிலிருந்து $3x = 4.8$ ஆகவே, $x = 1.6$ மீ

சிறுவனுடைய நிழலின் நீளம் DE = 1.6 மீ

**4. ΔABC ஆனது $\Delta DEF$ – க்கு வடிவொத்தவை. மேலும் BC= 3 செ.மீ, EF= 4 செ.மீ மற்றும் முக்கோணம் ABC –யின் பரப்பு = 54 செ.மீ$^2$ எனில், $\Delta DEF$ –யின் பரப்பைக் காண்க.**

**தீர்வு**

இரு வடிவொத்த முக்கோணங்களுடைய பரப்புகளின் விகிதமானது அவற்றின் ஒத்த

பக்கங்களுடைய வர்க்கங்களின் விகிதத்திற்குச் சமம் என்பதால்

$$\frac{\Delta ABC - \text{யின் பரப்பளவு}}{\Delta DEF - \text{யின் பரப்பளவு}} = \frac{BC^2}{EF^2}$$

எனவே $$\frac{54}{\Delta DEF - \text{யின் பரப்பளவு}} = \frac{3^2}{4^2}$$

$$\Delta DEF - \text{யின் பரப்பளவு} = \frac{16 \times 54}{9} = 96 \text{ செ.மீ}^2$$

**5. $\Delta$ ABC ~ $\Delta$ DEF–ல் $\Delta$ ABC–யின் பரப்பு 9செ.மீ$^2$, $\Delta$ DEF–யின் பரப்பு 16செ.மீ$^2$ மற்றும் BC = 2.1 செ.மீ எனில், EF – யின் நீளம் காண்க.**

**தீர்வு**

$\Delta ABC \sim \Delta DEF$ என்க

$$\frac{(\Delta ABC) - \text{ன் பரப்பளவு}}{(\Delta DEF) - \text{ன் பரப்பளவு}} = \frac{BC^2}{EF^2}$$

$$\Rightarrow \frac{9}{16} = \frac{(2.1)^2}{EF^2}$$

$$\Rightarrow EF^2 = (2.1)^2 \times \frac{16}{9}$$

$$\Rightarrow EF = 2.1 \times \frac{4}{3} = 2.8 \text{ செ.மீ}$$

**6. $\Delta$ABC–யில் D மற்றும் E என்ற புள்ளிகள் முறையே பக்கங்கள் AB மற்றும் AC ஆகியவற்றின் மீது அமைந்துள்ளன. பின்வருவனவற்றிற்கு DE|| BC என நிறுவுக.**

**(i) AB = 12 செ.மீ, AD = 8 செ.மீ, AE = 12 செ.மீ மற்றும் AC = 18 செ.மீ.**

**(ii) AB = 5.6 செ.மீ, AD = 1.4 செ.மீ, AC = 7.2 செ.மீ மற்றும் AE = 1.8 செ.மீ**

**தீர்வு**

DE|| BC என நிரூபிக்க வேண்டும்.

(i) AB = 12 செ.மீ, AD = 8 செ.மீ, AE = 12 செ.மீ மற்றும் AC = 18 செ.மீ.

$\frac{AD}{BD} = \frac{8}{4} = 2$ …………….. (1) $\because$ BD = AB - AD

$\frac{AE}{EC} = \frac{12}{6} = 2$ …………….. (2) $\because$ EC = AC - AE

(1) , (2) $\Rightarrow \frac{AD}{BD} = \frac{AE}{EC}$ $\therefore$ DE|| BC

(ii) AB = 5.6 செ.மீ, AD = 1.4 செ.மீ, AC = 7.2 செ.மீ மற்றும் AE = 1.8 செ.மீ

$\frac{AD}{BD} = \frac{1.4}{4.2} = \frac{1}{3}$ ………………(1) $\because$BD = AB - AD

$\frac{AE}{EC} = \frac{1.8}{5.4} = \frac{1}{3}$ ……………..(2) $\because$ EC = AC - AE

(1), (2) $\Rightarrow \frac{AD}{BD} = \frac{AE}{EC}$ $\therefore$ DE ||BC


7. **பின்வருவனவற்றுள் $\Delta ABC$ – யில் AD ஆனது $\angle A$ –யின் இருசமவெட்டி ஆகுமா எனச் சோதிக்கவும்.**

**(i) AB = 5 செ.மீ, AC =10 செ.மீ, BD =1.5 செ.மீ மற்றும் CD = 3.5 செ.மீ**

**(ii) AB = 4 செ.மீ, AC =6 செ.மீ, BD =1.6 செ.மீ மற்றும் CD= 2.4 செ.மீ**

**<u>தீர்வு</u>**

(i) AB = 5 செ.மீ, AC =10 செ.மீ, BD =1.5 செ.மீ மற்றும் CD = 3.5 செ.மீ





$\frac{AB}{AC} = \frac{5}{10} = \frac{1}{2}$ -------------(1)

$\frac{BD}{CD} = \frac{1.5}{3.5} = \frac{3}{7}$ -------------(2)

(1) , (2) ⇒ $\frac{AB}{AC} \neq \frac{BD}{CD}$(கோண இருசமவெட்டி தேற்றப்படி)

$\angle A$ -ன் கோண இருசமவெட்டி AD அல்ல

(ii) AB = 4 செ.மீ, AC =6 செ.மீ, BD =1.6 செ.மீ மற்றும் CD= 2.4 செ.மீ





$\frac{AB}{AC} = \frac{4}{6} = \frac{2}{3}$ -------------(1)

$\frac{BD}{CD} = \frac{1.6}{2.4} = \frac{2}{3}$ -------------(2)

(1) , (2) ⇒ $\frac{AB}{AC} = \frac{BD}{CD}$(கோண இருசமவெட்டி தேற்றப்படி)

$\angle A$ -ன் கோண இருசமவெட்டி AD ஆகும்.

8. **ஒரு மனிதன் 18 மீ கிழக்கே சென்று பின்னர் 24மீ வடக்கே செல்கிறான். தொடக்க நிலையிருந்து அவர் இருக்கும் தொலைவைக் காண்க ?**





**<u>தீர்வு</u>** $AC^2 = AB^2 + BC^2$

$AC^2 = (18)^2 + (24)^2 = 324 + 576$

$AC^2 = 900$ $AC = \sqrt{900}$ ⇒AC = 30 மீ

∴ தொடக்கநிலையில் இருந்து அவர் கடந்த தூரம் = 30மீ

9. **சாராவின் வீட்டிலிருந்து ஜேம்ஸின் வீட்டிற்குச் செல்லும் இரண்டு வழிகள் உள்ளன. ஒரு வழி C என்ற தெரு வழியாகச் செல்வதாகும். மற்றொரு வழி A மற்றும் B ஆகிய தெருக்கள் வழியாகச் செல்வதாகும். நேரடி பாதை C வழி செல்லும்போது தொலைவு எவ்வளவு குறையும் ? (படத்தைப் பயன்படுத்துக)**




**<u>தீர்வு</u>** SJ $= \sqrt{(1.5)^2 + (2)^2}$

$= \sqrt{2.25 + 4}$ $= \sqrt{6.25}$ = 2.5 மைல்கள்

B மற்றும் A வழிச் செல்லுதல்


SP + PJ = 1.5 + 2 = 3.5 மைல்கள்

நேரடியாக **C** என்ற தெருவழியே சென்றால் 1 மைல் குறையும்

10. **A என்ற புள்ளியில் இருந்து B என்ற புள்ளிக்குச் செல்வதற்கு ஒரு குளம் வழியாக, நடந்து செல்ல வேண்டும். குளம் வழியே செல்வதைத் தவிர்க்க 34 மீ தெற்கேயும், 41 மீ கிழக்கு நோக்கியும்**

**நடக்க வேண்டும். குளம் வழியாகச் செல்வதற்குப் பாதை அமைத்து அப்பாதை வழியே சென்றால் எவ்வளவு மீட்டர் தொலைவு சேமிக்கப்படும் ?**

**<u>தீர்வு</u>** நேரடியாக குளம் வழியே செல்லுதல்




$AB^2 = AC^2 + BC^2$

$= (34)^2 + (41)^2 = 1156 + 1681$

$AB^2 = 2837$

$AB = \sqrt{2837} = 53.26$ மீ


கிழக்கு தெற்காக செல்லுதல்

AB = AC + BC = 34 + 41 = 75 மீ

நேரடியாக குளம் வழியே சென்றால் **75.00 – 53.26 = 21.74** மீ தூரம் குறையும்

**11. இரண்டு பொது மைய வட்டங்களில், 16 செ.மீ நீளமுடைய பெரிய வட்டத்தின் நாணானது 6 செ.மீ ஆரமுள்ள சிறிய வட்டத்திற்குத் தொடுகோடாக அமைந்தால், பெரிய வட்டத்தின் ஆரம் காண்க.**

**<u>தீர்வு</u>**




AB = 16செ.மீ மற்றும் OC = 6 செ.மீ

ஆனால் OC ⊥ AB மற்றும் C ஆனது AB –ஐ, **2** சம பாகங்களாகப் பிரிக்கின்றது (வட்டத்துக்கான தேற்றப்படி)

மற்றும் AC = CB = 8செ.மீ

OB காண வேண்டும்


பிதாகரஸ் தேற்றபடி, OB = $\sqrt{OC^2 + BC^2} = \sqrt{6^2 + 8^2} = \sqrt{36 + 64}$

OB = 10 செ.மீ

## 5 MARKS

**1. $\Delta ABC$ –யின் பக்கங்கள் AB மற்றும் AC – யின் மீதுள்ள புள்ளிகள் முறையே D மற்றும் E. ஆனது DE|| BC என்றவாறு அமைந்துள்ளது. (i) $\frac{AD}{DB} = \frac{3}{4}$ மற்றும் AC = 15 செ.மீ எனில் AE – யின் மதிப்பு காண்க. (ii) AD = 8x – 7, DB = 5x – 3, AE = 4 x- 3 மற்றும் EC =3x – 1 எனில், x – ன் மதிப்பு காண்க.**

**<u>தீர்வு</u>**




(i) $\frac{AD}{DB} = \frac{3}{4}$ மற்றும் AC = 15 செ.மீ DE || BC, தேல்ஸ் தேற்றப்படி,

$\frac{AD}{AB} = \frac{AE}{AC}$

$\Rightarrow \frac{3}{7} = \frac{AE}{15} \Rightarrow AE = \frac{3}{7} \times 15 = 6.43$ செ.மீ

(ii) கொடுக்கப்பட்டவை AD = 8x – 7, DB = 5x – 3, AE = 4x- 3 மற்றும் EC = 3x – 1

தேல்ஸ் தேற்றப்படி,

$\frac{AD}{DB} = \frac{AE}{EC} \Rightarrow \frac{8x-7}{5x-3} = \frac{4x-3}{3x-1}$

$\Rightarrow (8x-7)(3x-1) = (5x-3)(4x-3)$

$\Rightarrow 24x^2 - 29x + 7 = 20x^2 - 27x + 9$


$\Rightarrow 4x^2 - 2x - 2 = 0$

$\Rightarrow 2x^2 - x - 1 = 0$

$(2x + 1)(x - 1) = 0$

$x = 1, x = -\frac{1}{2}. \quad \therefore x = 1.$

**2. WXYZ என்ற செவ்வகத்தில், XY + YZ = 17 செ.மீ மற்றும் XZ + YW = 26செ.மீ எனில் செவ்வகத்தின் நீளம் மற்றும் அகலத்தைக் கணக்கிடுக.**




**<u>தீர்வு</u>**

XY + YZ = 17 செ.மீ. ---------(1)

XZ + YW = 26 செ.மீ. ---------(2)

XZ = YW (∵ செவ்வகத்தின் மூலைவிட்டங்கள் சமம்)

∴ XZ = YW = 13 செ.மீ.

(1) ⇒ a + b = 17 ---------(3)

பிதாகரஸ் தேற்றப்படி,

$a^2 + b^2 = d^2 \Rightarrow a^2 + b^2 = 169$ ---------(4)

(3) $\Rightarrow (a + b)^2 = (17)^2 \Rightarrow a^2 + b^2 + 2ab = 289$

169 + 2ab = 289

2ab = 120

ab = 60

a(17 – a) = 60

$17a - a^2 - 0 = 0$


$a^2 - 17a + 60 = 0$

(a – 5) (a – 12) = 0

. ∴ நீளம் 12 செ.மீ., அகலம் 5 செ.மீ.

**3. ஒரு செங்கோண முக்கோணத்தின் கர்ணம் சிறிய பக்கத்தின் 2 மடங்கை விட 6 மீ அதிகம், மேலும், மூன்றாவது பக்கமானது கர்ணத்தை 2 மீ குறைவு எனில், முக்கோணத்தின் பக்கங்களைக் காண்க ?**

**தீர்வு**




படத்திலிருந்து z கர்ணம் மற்றும் x > y

z = 2y + 6 ……(1)

x = z - 2 ……(2)

(2) ⇒ x = 2y + 6 -2 = 2y + 4

x = 2y + 4 ……(3)

பிதாகரஸ் தேற்றப்படி, $x^2 + y^2 = z^2$

$\Rightarrow (2y + 4)^2 + y^2 = (2y + 6)^2$ $\because$ (1) (3) -யிலிருந்து

$4y^2 + 16y + 16 + y^2 = 4y^2 + 24y + 36$

$y^2 - 8y - 20 = 0$

$(y - 10)(y + 2) = 0$


$y = 10, -2$ ($\because y = -2$ இது பொருந்தாது)

(1) மற்றும் (3) –ல் y =10 எனப்பிரதியிட x = 24, z= 26

முக்கோணத்தில் பக்கங்கள் முறையே **24** செ.மீ, **26** செ.மீ மற்றும் **10** செ.மீ.

**4. 5மீ நீளமுள்ள ஓர் ஏணியானது ஒரு செங்குத்து சுவர் மீது சாய்த்து வைக்கப்படுகிறது. ஏணியின் மேல் முனை சுவரை 4மீ உயரத்தில் தொடுகிறது. ஏணியின் கீழ்முனை சுவரை நோக்கி 1.6மீ நகர்த்தப்படும்போது, ஏணியின் மேல்முனை சுவரில் எவ்வளவு தொலைவு மேல்நோக்கி நகரும் எனக் கண்டுபிடி.**

**தீர்வு**




படத்திலிருந்து (i), பிதாகரஸ் தேற்றப்படி,

$AB = \sqrt{AC^2 - BC^2} = \sqrt{25 - 16}$

AB = 3

(ii) $\Rightarrow$ AB = AD + BD $\Rightarrow BD = 1.4$

$\Delta$DBE –ல் பிதாகரஸ் தேற்றப்படி

$(BE)^2 = (DE)^2 - (BD)^2$

$(4 + x)^2 = 5^2 - (1.4)^2$

$(4 + x)^2 = 23.04$

$4 + x = \sqrt{23.04} = 4.8$

$\therefore x = 0.8$

ஏணி மேல் நோக்கி நகரும் தொலைவு **0.8**மீ.

# இயல் – 5

## ஆயத்தொலை வடிவியல்

### 2 MARKS

**1. ஒரு கோட்டின் சாய்வுக் கோணம் 30° எனில், அக்கோட்டின் சாய்வைக் காண்க.**

**தீர்வு**

இங்கு $\theta = 30°$

சாய்வு, m = $\tan\theta$

எனவே, சாய்வு m = $\tan 30° = \frac{1}{\sqrt{3}}$

**2. ஒரு கோட்டின் சாய்வு $\sqrt{3}$ எனில், அக்கோட்டின் சாய்வுக் கோணம் காண்க.**

**தீர்வு**

சாய்வு m = $\sqrt{3}, \theta$ என்பது கோட்டின் சாய்வுக் கோணம் என்க.

$\tan\theta = \sqrt{3}$

நாம் பெறுவது, $\theta = 60°$

**3. (-2,2),(5,8) என்ற புள்ளிகள் வழிச் செல்லும் நேர்க்கோடு r மற்றும் (-8,7),(-2,0) ஆகிய புள்ளிகள் வழிச்செல்லும் நேர்க்கோடு s ஆகும் எனில், நேர்க்கோடு r–ஆனது நேர்க்கோடு s–க்கு செங்குத்தாக அமையுமா ?**

**தீர்வு**

சாய்வு , m = $\frac{y_2 - y_1}{x_2 - x_1}$

நேர்க்கோடு r–யின் சாய்வு , $m_1 = \frac{8-2}{5+2} = \frac{6}{7}$

நேர்க்கோடு s–யின் சாய்வு , $m_2 = \frac{0-7}{-2+8} = \frac{-7}{6}$

சாய்வுகளின் பெருக்கல் $= \frac{6}{7} \times \frac{-7}{6} = -1$

அதாவது, $m_1 m_2 = -1$

எனவே, நேர்கோடு r ஆனது, நேர்க்கோடு s–க்கு செங்குத்தாக அமையும்.

**4. (3, -2), (12, 4) என்ற புள்ளிகள் வழிச் செல்லும் நேர்க்கோடு p மற்றும் (6, -2) மற்றும் (12,2) என்ற புள்ளிகள் வழிச் செல்லும் நேர்க்கோடு q ஆகும். p ஆனது q –க்கு இணையாகுமா?**

**தீர்வு**

p –யின் சாய்வு $m_1 = \frac{4+2}{12-3} = \frac{6}{9} = \frac{2}{3}$

q –யின் சாய்வு , $m_2 = \frac{2+2}{12-6} = \frac{4}{6} = \frac{2}{3}$

இதிலிருந்து நேர்க்கோடு p –யின் சாய்வு = நேர்க்கோடு q –யின் சாய்வு. எனவே, நேர்க்கோடு p –யானது நேர்க்கோடு q –க்கு இணை ஆகும்.

**5. x அச்சுடன் மிகை திசையில் சாய்வு கோணத்தைக் கொண்ட கோட்டின் சாய்வு என்ன ? (i) 90° (ii)0°**

**<u>தீர்வு</u>** (i) $\theta = 90°$ என்க

சாய்வு = m = tan $\theta = m = tan 90° =$ வரையறுக்கப்படாதது

(i) $\theta = 0°$ என்க

சாய்வு = m = tan $\theta = m = tan 0° = \mathbf{0}$

**6. (-2,a) மற்றும் (9,3) என்ற புள்ளி வழிச்செல்லும் நேர்கோட்டின் சாய்வு– $\frac{1}{2}$ எனில் a ன் மதிப்பு யாது ?**

**<u>தீர்வு</u>**

சாய்வு = $\frac{y_2 - y_1}{x_2 - x_1} = \frac{3-a}{9+2} = \frac{3-a}{11}$

கொடுக்கப்பட்ட சாய்வு = $-\frac{1}{2}$

$\therefore \frac{3-a}{11} = -\frac{1}{2}$

6 – 2a = - 11

2a = 17

a = $\frac{17}{2}$

**7. (–2,6) மற்றும் (4,8) என்ற புள்ளிகளின் வழிச் செல்லும் நேர்க்கோடானது (8,12) மற்றும் (x,24) என்ற புள்ளிகளின் வழிச் செல்லும் நேர்க்கோட்டிற்கு செங்குத்து எனில் x-ன் மதிப்பு காண்க.**

**<u>தீர்வு</u>** **(–2,6)** மற்றும் **(4,8)** ஆகிய புள்ளிகளின் சாய்வு

$m_1 = \frac{8-6}{4+2} = \frac{2}{6} = \frac{1}{3}$

**(8, 12)** மற்றும் **(x,24)** ஆகிய புள்ளிகளின் சாய்வு

$m_2 = \frac{24-12}{x-8} = \frac{12}{x-8}$

இரண்டு நேர்க்கோடுகளும் செங்குத்து என்பதால் $m_1$ x $m_2$ = -1

$\Longrightarrow \frac{1}{3} \times \frac{12}{x-8} = -1$

$\Longrightarrow \frac{4}{x-8} = -1$

$\Longrightarrow$ x- 8 = -4

$\Longrightarrow$ x = 4

**8. (2,5) மற்றும் (4,7) என்ற புள்ளிகளைச் சேர்க்கும் நேர்க்கோட்டிற்குச் செங்குத்தாகவும், A(1,4) என்ற புள்ளி வழி செல்லுவதுமான நேர்க்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.**

**<u>தீர்வு</u>**

கொடுக்கப்பட்ட புள்ளிகள் A(1,4), B(2,5), C(4,7)

BC –யின் சாய்வு = $\frac{7-5}{4-2} = \frac{2}{2} = 1$

தேவையான நேர்கோட்டின் சாய்வு m என்க

இந்த நேர்கோடு, BC –க்கு செங்குத்தாக உள்ளது

எனவே, $m \times 1 = -1$

$m = -1$

இக்கோடானது A(1,4) வழி செல்வதால்

தேவையான நேர்கோட்டின் சமன்பாடு $y - y_1 = m(x - x_1)$

$y - 4 = -1(x - 1)$

$y - 4 = -x + 1$

எனவே,, $x + y - 5 = 0$.

**9. பின்வரும் விவரங்களைப் பயன்படுத்தி நேர்க்கோட்டின் சமன்பாடு காண்க. சாய்வு 5 மற்றும் y வெட்டுத்துண்டு –9**

**<u>தீர்வு</u>**

சாய்வு, $m = 5$, y வெட்டுத்துண்டு, $c = -9$

நேர்க்கோட்டின் சமன்பாடு , $y = mx + c$

$y = 5x - 9$

$0 = 5x - y - 9$

தேவையான சமன்பாடு , $5x - y - 9 = 0$

**10. பின்வரும் விவரங்களைப் பயன்படுத்தி நேர்க்கோட்டின் சமன்பாடு காண்க. சாய்வுக் கோணம் 45° மற்றும் y வெட்டுத்துண்டு 11**

**<u>தீர்வு</u>**

சாய்வுக் கோணம் $\theta = 45°$

சாய்வு $m = \tan\theta$

$m = \tan 45°$

சாய்வு $m = \mathbf{1}$

Y வெட்டுத்துண்டு, $C = 11$

நேர்க்கோட்டின் சமன்பாடு , $y = mx + C$

$y = 1x + 11$

$0 = x + 11 - y$

$\therefore$ தேவையானசமன்பாடு $x - y + 11 = 0$

**11. $8x - 7y + 6 = 0$ என்ற கோட்டின் சாய்வு மற்றும் y வெட்டுத்துண்டு ஆகியவற்றைக் காண்க.**

**<u>தீர்வு</u>** $8x - 7y + 6 = 0$

$8x + 6 = 7y$

7 ஆல் வகுக்க $\frac{8}{7}x + \frac{6}{7} = \frac{7}{7}y$

$\frac{8}{7}x + \frac{6}{7} = y$

y = mx + C யுடன் ஒப்பிட

சாய்வு, m = $\frac{8}{7}$

y வெட்டுத்துண்டு, C = $\frac{6}{7}$

**12. (3,−4) என்ற புள்ளியின் வழி செல்லும் $-\frac{5}{7}$ ஐ சாய்வாக உடையதுமான நேர்க்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.**

**தீர்வு** $(x_1, y_1) = (3, -4)$

சாய்வு, m = $-\frac{5}{7}$

நேர்க்கோட்டின் சமன்பாடு $y - y_1 = m(x - x_1)$

$y - (-4) = -\frac{5}{7}(x - 3)$

7(y +4) = -5(x –3)

7y + 28 = - 5x +15

5x + 7y + 28 – 15 = 0

5x + 7y + 13 =0

**13. (5,−3) மற்றும் (7, −4) என்ற இருபுள்ளிகள் வழிச் செல்லும் நேர்க்கோட்டின் சமன்பாடு காண்க.**

**தீர்வு** $(x_1, y_1)$ $(x_2, y_2)$

**(5, −3) (7, −4)**

இருபுள்ளிவழிச் செல்லும் நேர்க்கோட்டின் சமன்பாடு

$$\frac{y - y_1}{y_2 - y_1} = \frac{x - x_1}{x_2 - x_1}$$

$$\frac{y - 3}{-4 - (-3)} = \frac{x - 5}{7 - 5}$$

$$\frac{y - 3}{-4 + 3} = \frac{x - 5}{2}$$

2( y + 3) = -1(x – 5)

2y + 6 = -x +5

x +2y +6 – 5 =0

x +2y +1 =0

**14. (−1, 2) என்ற புள்ளி வழி செல்வதும், சாய்வு $\frac{-5}{4}$ உடையதுமான நேர்கோட்டின் சமன்பாட்டை காண்க.**

**தீர்வு**

தரப்பட்ட புள்ளி **(−1,2)**, சாய்வு $\frac{-5}{4}$

தேவையான சமன்பாடு, $y - y_1 = m(x - x_1)$

$\Rightarrow \quad \mathbf{y - 2} = \frac{-5}{4}\left(x - (-1)\right) \Rightarrow 4y - 8 = -5x - 5$

$\Rightarrow \quad 5x + 4y - 3 = 0$

**15. கொடுக்கப்பட்ட நேர்கோடுகளின் சமன்பாட்டிலிருந்து ஆய அச்சுகளின் மேல் ஏற்படுத்தும் வெட்டுத்துண்டுகளைக் காண்க.** $3x - 2y - 6 = 0$

**தீர்வு**

வெட்டுத் துண்டு வடிவச் சமன்பாடு $\frac{x}{a} + \frac{y}{b} = 1$

$\because a-$x வெட்டுத் துண்டு, b- y வெட்டுத்துண்டு

$\Rightarrow 3x - 2y = 6 \Rightarrow \frac{3x}{6} - \frac{2y}{6} = 1$

$\Rightarrow \frac{x}{2} + \frac{y}{-3} = 1 \Rightarrow \therefore a = 2, b = -3$

**16. கொடுக்கப்பட்ட நேர்கோடுகளின் சமன்பாட்டிலிருந்து ஆய அச்சுகளின் மேல் ஏற்படுத்தும் வெட்டுத்துண்டுகளைக் காண்க.** $4x + 3y + 12 = 0$

**தீர்வு**

வெட்டுத் துண்டு வடிவச் சமன்பாடு $\frac{x}{a} + \frac{y}{b} = 1$

$\because a-$x வெட்டுத் துண்டு, b- y வெட்டுத்துண்டு

$4x + 3y = -12 \quad (\div -12)$

$\Rightarrow \frac{4x}{-12} + \frac{3y}{-12} = 1$

$\Rightarrow \frac{x}{-3} + \frac{y}{-4} = 1 \Rightarrow \therefore a = -3, b = -4$

**17. நேர்க்கோட்டின் சமன்பாட்டினைக் காண்க. (1,-4) என்ற புள்ளி வழிச் செல்வதும், வெட்டுத்துண்டுகளின் விகிதம் 2** : 5

**தீர்வு**

வெட்டுத் துண்டுகளின் விகிதம் , $\frac{a}{b} = \frac{2}{5}$

$\therefore a = \frac{2b}{5}$ ----------(1)

வெட்டுத் துண்டுகளின் சமன்பாடு $\frac{x}{a} + \frac{y}{b} = 1$

$\Rightarrow \frac{x}{\frac{2b}{5}} + \frac{y}{b} = 1 \Rightarrow \frac{5x}{2b} + \frac{y}{b} = 1$

$\frac{5(1)}{2b} + \frac{(-4)}{b} = 1$ ( $\because (1, -4)$வழிச் செல்கிறது)

$\Rightarrow \frac{5}{2b} + \frac{-8}{2b} = 1 \Rightarrow -3 = 2b \Rightarrow b = -\frac{3}{2}$

$\therefore a = \frac{2}{5} \times \left(\frac{-3}{2}\right) = \frac{-3}{5}$ (1) – லிருந்து

தேவையான சமன்பாடு $\frac{x}{\frac{-3}{5}} + \frac{y}{\frac{-3}{2}} = 1$

$\Rightarrow 5x + 2y = -3 \Rightarrow 5x + 2y + 3 = 0$

**18. கொடுக்கப்பட்டுள்ள x,y வெட்டுத்துண்டுகளைக் கொண்ட நேர்க்கோடுகளின் சமன்பாடுகளைக் காண்க . 4,-6**

**தீர்வு** x வெட்டுத்துண்டு a = **4**, y வெட்டுத்துண்டு b =**-6**

நேர்க்கோட்டின் சமன்பாடு $\frac{x}{a} + \frac{y}{b} = 1$

$$\frac{x}{4} + \frac{y}{-6} = 1$$

$$\frac{x}{4} - \frac{y}{6} = 1$$

$$\frac{6x-4y}{24} = 1$$

$$\frac{2(3x-2y)}{24} = 1$$

$$\frac{3x-2y}{12} = 1$$

3x – 2y = 12

3x – 2y – 12 = 0

**19. கொடுக்கப்பட்டுள்ள x,y வெட்டுத்துண்டுகளைக் கொண்ட நேர்க்கோடுகளின் சமன்பாடுகளைக் காண்க . -5, $\frac{3}{4}$**

**தீர்வு**

x வெட்டுத்துண்டு a = **-5**, y வெட்டுத்துண்டு b = $\frac{3}{4}$

நேர்க்கோட்டின் சமன்பாடு $\frac{x}{a} + \frac{y}{b} = 1$

$$\frac{x}{-5} + \frac{y}{\frac{3}{4}} = 1$$

$$\frac{x}{-5} + \frac{4y}{3} = 1$$

$$\frac{3x-20y}{-15} = 1$$

3x – 20y = -15

3x – 20y + 15 = 0

**20. ஒரு பூனை xy–தளத்தில் (–6, –4) என்ற புள்ளியில் உள்ளது. (5, 11) என்ற புள்ளியில் ஒரு பால் புட்டி வைக்கப்பட்டுள்ளது. பூனை மிகக் குறுகிய தூரம் பயணித்துப் பால் அருந்த விரும்புகிறது எனில், பாலைப் பருகுவதற்குத் தேவையான பாதையில் சமன்பாட்டைக் காண்க.**

**தீர்வு** (-6, -4) மற்றும் **(5, 11)** என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டின் சமன்பாடு

$$\frac{y-y_1}{y_2-y_1} = \frac{x-x_1}{x_2-x_1}$$

$\Rightarrow \frac{y-(-4)}{11-(-4)} = \frac{x-(-6)}{5-(-6)}$ $\Rightarrow \frac{y+4}{15} = \frac{x+6}{11}$

⇒ 11y + 44 = 15x + 90

$\Rightarrow 15x - 11y + 90 - 44 = 0$

$\Rightarrow 15x - 11y + 46 = 0$

**21. நேர்க்கோட்டின் சமன்பாட்டினைக் காண்க (-8,4) என்ற புள்ளி வழிச் செல்வதும், ஆய அச்சுகளின் வெட்டுத்துண்டுகள் சமம்.**

**<u>தீர்வு</u>** a = b (வெட்டுத்துண்டுகள் சமம்)

தேவையான சமன்பாடு $\frac{x}{a}+\frac{y}{b}=1$

$\Rightarrow x+y=a$ ------ (1) ( $\because$ (1) சமன்பாடு $(-8,4)$வழிச் செல்கின்றது)

$\Rightarrow -8+4=a \Rightarrow a=-4$

$\therefore (1) \Rightarrow x+y=-4 \Rightarrow x+y+4=0$

**5 MARKS**

**1. P(-1, -4), Q(b,c) மற்றும் R(5, -1) என்பன ஒரே நேர்கோட்டில் அமையும் புள்ளிகள் என்க. மேலும், 2b + c = 4 எனில், bமற்றும் c–யின் மதிப்பு காண்க.**

**<u>தீர்வு</u>**

P(-1, -4), Q(b,c) மற்றும் R(5, -1) என்ற புள்ளிகள் ஒரே நேர்கோட்டில் அமைவதால்

ΔPQR –யின் பரப்பு = **0**

$$\frac{1}{2}\begin{vmatrix} -1 & -4 \\ b & c \\ 5 & -1 \\ -1 & -4 \end{vmatrix} = 0$$

$\frac{1}{2}$ {(-c – b - 20) – ( -4b + 5c + 1)} = 0

-c – b – 20 + 4b – 5c – 1 = 0

3b – 6c = 21 (÷ 3)

b – 2c = 7 ----------- (1)

மேலும், 2b + c = 4(கொடுக்கப்பட்டது) ----------- (2)

(1) x 1 ⇒ b – 2c = 7

(2) x 2 ⇒ <u>4b + 2c = 8</u>

5b = 15

b = 3

(1) ⇒ **3** – 2c = 7 ⇒ - 2c = 4

c = - 2

(2) மற்றும் (2) – ஐ தீர்ப்பதன் மூலம் நாம் பெறுவது b = 3, c = -2

**2. கீழ்க்காணும் புள்ளிகள் ஒரே நேர்கோட்டில் அமையுமா எனத் தீர்மானிக்கவும்.**
**(a, b+c), (b, c + a) மற்றும் (c, a + b)**

**<u>தீர்வு</u>**

Δ ன் பரப்பு $= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} a & b+c \\ b & c+a \\ c & a+b \\ a & b+c \end{vmatrix}$

$= \frac{1}{2}[(ac + a^2 + ab + b^2 + bc + c^2) - (b^2 + bc + c^2 + ca + a^2 + ab]$

$= \frac{1}{2}[ac + a^2 + ab + b^2 + bc + c^2 - b^2 - bc - c^2 - ca - a^2 - ab] = \frac{1}{2}[\ 0\ ] = \mathbf{0}$

∴கொடுக்கப்பட்ட மூன்று புள்ளிகள் ஒரே நேர் கோட்டில் அமையும்

**3. கொடுக்கப்பட்ட புள்ளிகள் ஒரு கோட்டில் அமைந்தவை எனில், `a` –யின் மதிப்பைக் காண்க. (a, 2 - 2a) ,(-a+1, 2a) மற்றும் (-4- a, 6-2a)**

**<u>தீர்வு</u>**

$\Delta = 0$ ச.அ

$$\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \mathbf{0} \Rightarrow \begin{vmatrix} a & 2-2a \\ -a+1 & 2a \\ -4-a & 6-2a \\ a & 2-2a \end{vmatrix} = \mathbf{0}$$

$(2a^2 - 6a + 2a^2 + 6 - 2a - 8 + 8a - 2a + 2a^2) - (-2a + 2a^2 + 2 - 2a - 8a - 2a^2 + 6a - 2a^2) = 0$

$= (6a^2 - 2a - 2) - (-2a^2 - 6a + 2) = 0 \Longrightarrow 8a^2 + 4a - 4 = 0 \div 4$

$2a^2 + a - 1 = 0$

$(a + 1)(2a - 1) = 0$

$\Longrightarrow \therefore\ a = +\frac{1}{2}$ மற்றும் $a = -1$

**4. A (–3,9), B(a,b) மற்றும் C(4, –5) என்பன ஒரு கோட்டமைந்த புள்ளிகள் மற்றும் a +b = 1 எனில் a மற்றும் b –யின் மதிப்பைக் காண்க.**

**<u>தீர்வு</u>** A (-3,9), B(a,b), C(4, -5) என்பன ஒரு கோட்டமைந்த புள்ளிகள் மற்றும் a +b = **1** → **(1)**

**3** புள்ளிகள் கொண்ட முக்கோணத்தின் பரப்பு = **0**

$$\frac{1}{2}\begin{vmatrix} -3 & 9 \\ a & b \\ 4 & -5 \\ -3 & 9 \end{vmatrix} = \mathbf{0}$$

$\Rightarrow (-3b - 5a + 36) - (9a + 4b + 15) = 0 \quad \Rightarrow -5a - 3b + 36 - 9a - 4b - 15 = 0$

$\Rightarrow -14a - 7b + 21 = 0$

$\Rightarrow -14a - 7b = -21$

$\Rightarrow 14a + 7b = 21\ (\div 7)$

$\Rightarrow 2a + b = 3$ ……..(2)

$a + b = \mathbf{1}$ … … … **(1)**

**(1)** $- (2) \Rightarrow a = 2 \quad b = -1$

**5. ΔABC –யின் பக்கங்கள் AB, BC மற்றும் AC ஆகியவற்றின் நடுப்புள்ளிகள் முறையே P(11,7), Q (13.5, 4) மற்றும் R (9.5, 4) என்ற முக்கோணத்தின் முனைப் புள்ளிகள்A, B மற்றும் C காண்க. மேலும் ΔABC –யின் பரப்பை ΔPQR–யின் பரப்புடன் ஒப்பிடுக.**

**<u>தீர்வு</u>**

P = AB –ன் மையப்புள்ளி

$\Rightarrow \left(\frac{x_1 + x_2}{2}, \frac{y_1 + y_2}{2}\right) = (11, 7)$

$\Rightarrow \quad \frac{x_1 + x_2}{2} = 11 \Rightarrow x_1 + x_2 = 22$ ……….(1)

$\Rightarrow \quad \frac{y_1 + y_2}{2} = 7 \Rightarrow y_1 + y_2 = 14$ ……….(2)

Q = BC – ன் மையப்புள்ளி

$\Rightarrow \left(\frac{x_2 + x_3}{2}, \frac{y_2 + y_3}{2}\right) = (13.5, 4)$

$\Rightarrow \frac{x_2 + x_3}{2} = 13.5 \quad \Rightarrow x_2 + x_3 = 27$ ……….(3)

$\Rightarrow \frac{y_2 + y_3}{2} = 4 \quad \Rightarrow y_2 + y_3 = 8$ ……….(4)

R = AC – ன் மையப்புள்ளி

$\Rightarrow \left(\frac{x_1 + x_3}{2}, \frac{y_1 + y_3}{2}\right) = (9.5, 4)$

$\Rightarrow \frac{x_1 + x_3}{2} = 9.5 \quad \Rightarrow x_1 + x_3 = 19$ ……….(5)

$\Rightarrow \frac{y_1 + y_3}{2} = 4 \quad \Rightarrow y_1 + y_3 = 8$ ……….(6)

$(3) - (1) \Rightarrow x_3 - x_1 = 5$ ……….(7)

$(5) + (7) \Rightarrow 2x_3 = 24 \quad \Rightarrow x_3 = 12$

$x_3 = 12$ – ஐ (5) ல் பிரதியிட

$\Rightarrow \quad x_1 = 19 - 12 = 7$

$\Rightarrow \quad x_1 = 7$

$x_1 = 7$ – ஐ (1) ல் பிரதியிட

$\Rightarrow \quad x_2 = 22 - 7 = 15$

$\Rightarrow \quad x_2 = 15$

$(2) - (4) \Rightarrow \quad y_1 - y_3 = 6$ …………(8)

$(6) + (8) \Rightarrow \quad 2y_1 = 14$

$\Rightarrow \quad y_1 = 7$

$\Rightarrow \quad y_1 = 7$ – ஐ (6) பிரதியிட

$\Rightarrow \quad y_3 = 8 - 7 = 1$

$\Rightarrow \quad y_3 = 1$

$y_3 = 1$ – ஐ (4) பிரதியிட

$\Rightarrow \; y_2 + 1 = 8$

$\Rightarrow \; y_2 = 7$

A(7,7), B(15,7) மற்றும் C(12,1)

$\Delta$ABC–ன் பரப்பு = $\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} 7 & 7 \\ 15 & 7 \\ 12 & 1 \\ 7 & 7 \end{vmatrix}$

$= \frac{1}{2}$ [(49 + 15 + 84) – (105 +84 +7)]

$= \frac{1}{2}$ [148 - 196] $= \frac{1}{2}$ [-48]= 24 ச.அ (∵பரப்பளவு குறையாக இருக்காது)

$\Delta PQR$−ன் பரப்பு $= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} 11 & 7 \\ 13.5 & 4 \\ 9.5 & 4 \\ 11 & 7 \end{vmatrix}$


$= \frac{1}{2}$ [(44 + 54 + 66.5) – (94.5 +38 +44)]

$= \frac{1}{2}$ [164.5 – 176.5] $= \frac{1}{2}$ [-12] = 6 ச.அ (∵பரப்பளவு குறையாக இருக்காது)

இப்போது$\Delta PQR$−ன் பரப்பு = 6 ச.அ, ΔABC−ன் பரப்பு = 24 ச.அ

∴ ΔABC−ன் பரப்பு = **4** × $\Delta PQR$−ன் பரப்பு

**6. படத்தை பயன்படுத்திப் பரப்பைக் காண்க. (i) முக்கோணம் AGF (ii) முக்கோணம் FED (iii) நாற்கரம் BCEG**




<u>**தீர்வு**</u>

(i) ΔAGF−ன் பரப்பளவு $= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -5 & 3 \\ -4.5 & 0.5 \\ -2 & 3 \\ -5 & 3 \end{vmatrix}$

$= \frac{1}{2}$ [(-2.5 – 13.5 - 6) - (-13.5 - 1 - 15)]

$= \frac{1}{2}$ [-22+29.5]

$= \frac{1}{2}$ [7.5]

= **3.75** ச.அ

(ii) ΔFED−ன் பரப்பளவு $= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -2 & 3 \\ 1.5 & 1 \\ 1 & 3 \\ -2 & 3 \end{vmatrix}$

$= \frac{1}{2}$ [(-2 + 4.5 + 3)- (4.5 + 1 -6 )]

$= \frac{1}{2}$ [5.5 + 0.5]

$= \frac{1}{2}$ [6]

= **3** ச.அ

(iii) நாற்கரம் BCEG−ன் பரப்பு $= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_4 & y_4 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -4 & -2 \\ 2 & -1 \\ 1.5 & 1 \\ -4.5 & 0.5 \\ -4 & -2 \end{vmatrix}$

$= \frac{1}{2}$ [(4 + 2 + 0.75 + 9)- (- 4 - 1.5 – 4.5 - 2 )]

$= \frac{1}{2}[15.75 + 12]$

$= \frac{1}{2}[27.75]$

= **13.875 ச.அ**

7. **பிதாகரஸ் தேற்றத்தைப் பயன்படுத்தாமல் (1,−4), (2,−3) மற்றும் (4,−7) ஆகியப் புள்ளிகள் ஒரு செங்கோன முக்கோணத்தினைஉருவாக்கும் என நிறுவுக.**

**<u>தீர்வு</u>** A(1, -4) , B(2,-3) மற்றும் C(4,-7) ஆகியன முக்கோணத்தின் முனைப் புள்ளிகள் என்க.

AB –யின் சாய்வு = $\frac{-3+4}{2-1} = \frac{1}{1} = 1$

BC –யின் சாய்வு = $\frac{-7+3}{4-2} = \frac{-4}{2} = -2$

AC –யின் சாய்வு = $\frac{-7+4}{4-1} = \frac{-3}{3} = -1$

AB –யின் சாய்வு × AC –யின் சாய்வு = (1) (−1) = −1

ஆகவே, AB ஆனது AC க்கு செங்கத்தாகும். $\angle A = 90°$

எனவே, $\Delta ABC$ ஆனது செங்கோண முக்கோணம் ஆகும்.

**8. கொடுக்கப்பட்ட புள்ளிகள் செங்கோண முக்கோணத்தை அமைக்கும் எனக் காட்டுக. மேலும் பிதாகரஸ் தேற்றத்தை நிறைவு செய்யுமா என ஆராய்க.**

**(i) A(1,-4), B(2,-3) மற்றும் C(4,-7) (ii) L(0,5), M(9,12) மற்றும் N(3,14)**

**<u>தீர்வு</u>**

(i) A(1,-4), B(2,-3) மற்றும் C(4,-7)

AB−யின் சாய்வு = $\frac{-3-(-4)}{2-1} = \frac{1}{1} = 1$

BC−யின் சாய்வு = $\frac{-7-(-3)}{4-2} = \frac{-4}{2} = -2$

AC−யின் சாய்வு = $\frac{-7+4}{4-(+1)} = \frac{-3}{3} = -1$

(AB−யின் சாய்வு) ×( AC−யின் சாய்வு) = $1 \times (-1) = -1$

$\therefore \Delta ABC$ என்பது செங்கோண முக்கோணமாகும். ($\because AB \perp AC$)

பிதாகரஸ் தேற்றப்படி, $AB^2 + AC^2 = BC^2$ ($\because d = \sqrt{(x_2 - x_1)^2 + (y_2 - y_1)^2}$

$AB^2 = (2-1)^2 + (-3 + 4)^2 = (1)^2 + (1)^2 = 2$

$AC^2 = (4-1)^2 + (-7 + 4)^2 = (3)^2 + (-3)^2 = 18$

$BC^2 = (4-2)^2 + (-7 + 3)^2 = (2)^2 + (-4)^2 = 4 + 16 = 20$

$AB^2 + AC^2 = 2 + 18 = 20 = BC^2$ என நிரூபிக்கப்பட்டது.

(ii) **L(0,5), M(9,12) மற்றும் N(3,14)**

LM−யின் சாய்வு = $\frac{12-5}{9-0} = \frac{7}{9}$

MN−யின் சாய்வு = $\frac{14-12}{3-9} = \frac{2}{-6} = -\frac{1}{3}$

LN−யின் சாய்வு = $\frac{14-5}{3-0} = \frac{9}{3} = 3$

(MN−யின் சாய்வு) × ( LN−யின் சாய்வு) = $\left(-\frac{1}{3}\right) \times (3) = -1$

$\therefore$ MN ⊥ rLN. Δ LMN ஒரு செங்கோண முக்கோணமாகும்.

பிதாகரஸ் தேற்றப்படி , $MN^2 + LN^2 = LM^2$

$MN^2 = (3-9)^2 + (14-12)^2 = (-6)^2 + (2)^2 = 36 + 4 = 40$


$LN^2 = (3-0)^2 + (14-5)^2 = (3)^2 + (9)^2 = 9 + 81 = 90$

$LM^2 = (9-0)^2 + (12-5)^2 = (9)^2 + (7)^2 = 81 + 49 = 130$

இங்கு $MN^2 + LN^2 = LM^2$

**9. *A*(6,2), B(-5, -1) மற்றும் C(1,9) ஆகியவற்றை முனைகளாகக் கொண்ட ΔABC -ன் முனை A யிலிருந்து வரையப்படும் நடுக்கோடு மற்றும் குத்துக்கோட்டின் சமன்பாடுகளைக் காண்க.**

**<u>தீர்வு</u>** A யிலிருந்து வரையப்பட்ட நடுக்கோட்டின் சமன்பாடு:




BC யின் நடுப்புள்ளி = D $\left(\frac{-5+1}{2}, \frac{-1+9}{2}\right)$

= D(-2, 4)

AD யின் சமன்பாடு A(6,2), D(-2,4)

$\frac{y-y_1}{y_2-y_1} = \frac{x-x_1}{x_2-x_1}$

$\Rightarrow \frac{y-2}{4-2} = \frac{x-6}{-2-6}$

$\Rightarrow \frac{y-2}{2} = \frac{x-6}{-8}$

$\Rightarrow \frac{y-2}{1} = \frac{x-6}{-4}$

$\Rightarrow x - 6 = -4y + 8$

$\Rightarrow x + 4y - 14 = 0$

<u>A யிலிருந்து வரையப்பட்ட குத்துக்கோட்டின் சமன்பாடு</u>

சாய்வு BC = $\frac{y_2-y_1}{x_2-x_1} \frac{9+1}{1+5} = \frac{10}{6} = \frac{5}{3}$

AD ⊥ BC என்பதால் சாய்வு AD = $\frac{-3}{5}$ மற்றும் A (6,2)

AD என்ற குத்துக்கோட்டின் சமன்பாடு

$y - y_1 = m(x - x_1)$

$\Rightarrow y - 2 = \frac{-3}{5}(x - 6)$

$\Rightarrow 5y - 10 = -3x + 18$

$\Rightarrow 3x + 5y - 28 = 0$


# இயல் – 6

## முக்கோணவியல்

### 5 MARKS

**1. இரு கப்பல்கள் கலங்கரை விளக்கத்தின் இரு பக்கங்களிலும் கடலில் பயணம் செய்கின்றன. இரு கப்பல்களிலிருந்து கலங்கரை விளக்கத்தின் உச்சியின் ஏற்றக் கோணங்கள் முறையே 30° மற்றும் 45° ஆகும். கலங்கரை விளக்கத்தின் உயரம் 200 மீ எனில், இரு கப்பல்களுக்கு இடையே உள்ள தொலைவைக் காண்க. ($\sqrt{3} = 1.732$)**

**தீர்வு** கலங்கரை விளக்கம் AB என்க. C மற்றும் D என்பன இரு கப்பல்கள் இருக்கும் இடங்கள் என்க. மேலும் , AB = 200மீ




$\angle ACB = 30°, \angle ADB = 45°$

செங்கோண முக்கோணம் $BAC$ –ல் $\tan 30° = \frac{AB}{AC}$

$\frac{1}{\sqrt{3}} = \frac{200}{AC}$ இதிலிருந்து AC = 200 $\sqrt{3}$ -----(1)

செங்கோண முக்கோணம் $BAD$ –ல் $\tan 45° = \frac{AB}{AD}$

$1 = \frac{200}{AD}$ இதிலிருந்து AD = 200 -----(2)

தற்போது, CD = AC + AD = 200$\sqrt{3}$ + 200 [(1), (2) –லிருந்து]

CD =200 ($\sqrt{3}$ + 1) = 200 x 2.732 = 546.4

இரு கப்பல்களுக்கு இடையே உள்ள தொலைவு **546.4** மீ ஆகும்.

**2. தரையின்மீது ஒரு புள்ளியிலிருந்து 30 மீ உயரமுள்ள கட்டடத்தின் மேலுள்ள கோபுரத்தின் அடி மற்றும் உச்சியின் ஏற்றக்கோணங்கள் முறையே 45°மற்றும் 60° எனில், கோபுரத்தின் உயரத்தைக் காண்க. ($\sqrt{3} = 1.732$)**




**தீர்வு** ΔAPB யில் $\tan\theta = \frac{\text{எதிர்பக்கம்}}{\text{அடுத்துள்ள பக்கம்}}$

$\tan 45° = \frac{30}{BP}$

$1 = \frac{30}{BP}$

BP = 30 மீ

ΔBPC யில் $\tan 60° = \frac{BC}{BP}$

$\sqrt{3} = \frac{h+30}{30}$

$30\sqrt{3} = h + 30$


$h = 30\sqrt{3} - 30$

$= 30(1.732 - 1) = 30(0.732)$

$= 21.960$

∴கோபுரத்தின் உயரம் = **21.96** மீ

3. **படத்தில் உள்ளவாறு ஒரு சமதளத் தரையில் இரண்டு மரங்கள் உள்ளன. தரையில் உள்ள X என்ற புள்ளியிலிருந்து இரு மர உச்சிகளின் ஏற்றக்கோணமும் 40° ஆகும். புள்ளி X –லிருந்து சிறிய மரத்திற்கான கிடைமட்டத் தொலைவு 8 மீ மற்றும் இரண்டு மரங்களின் உச்சிகளுக்கிடையே உள்ள தொலைவு 20 மீ எனில்,**




   **(i) புள்ளி X –க்கும் சிறிய மரத்தின் உச்சிக்கும் இடைப்பட்ட தொலைவு**

   **(ii) இரண்டு மரங்களுக்கும் இடையேயுள்ள கிடைமட்டத் தொலைவு ($cos40^{\circ} = 0.7660$) ஆகியவற்றைக் கணக்கிடுக.**

**தீர்வு**

பெரிய மரத்தின் உயரம் AB என்க. சிறிய மரத்தின் உயரம் CD என்க. தரையில் உள்ள ஒரு புள்ளி X என்க

(i) செங்கோண ΔXCD –ல்

$\cos 40^{\circ} = \frac{CX}{XD}$

$XD = \frac{8}{0,7660} = 10.44$ மீ

எனவே, புள்ளி X –க்கும் சிறிய மரத்தின் உச்சிக்கும் இடையே உள்ள தொலைவு .

XD = 10.44 மீ


(ii) செங்கோண ΔXAB –ல்

$\cos 40^{\circ} = \frac{AX}{BX} = \frac{AC+CX}{BD+DX}$

$0.7660 = \frac{AC+8}{20+10.44} \Rightarrow AC = 23.32 - 8 = 15.32$மீ

இரண்டு மரங்களுக்கு இடையேயுள்ள கிடைமட்டத் தொலைவு AC= **15.32**மீ

4. **ஒருவர் அவருடைய வீட்டிற்கு வெளியில் நின்றுகொண்டு ஒரு ஜன்னலின் உச்சி மற்றும் அடி ஆகியவற்றை முறையே 60° மற்றும் 45° ஆகிய ஏற்றக்கோணங்களில் காண்கிறார். அவரின் உயரம் 180 செ.மீ. மேலும் வீட்டிலிருந்து 5 மீ தொலைவில் அவர் உள்ளார் எனில், ஜன்னலின் உயரத்தைக் காண்க. ($\sqrt{3}$= 1.732).**




**தீர்வு**

AC – நிற்பவரின் இடம், EF – ஜன்னல், CF – வீடு

படத்திலிருந்து, EF = h, ED = x, DEF = x + h.

$\Delta ADE$ –ல் $\tan 45^{\circ} = \frac{DE}{AD} \Rightarrow 1 = \frac{x}{500} \Rightarrow x = 500$

$\Delta ADF$ –ல் $\tan 60^{\circ} = \frac{DF}{AD} \Rightarrow \sqrt{3} = \frac{h+x}{500}$

$\Rightarrow h + x = \sqrt{3}(500)$

$\Rightarrow h = (500 \times \sqrt{3}) - 500$

$= 500[\sqrt{3} - 1]$

$= 500[1.732 - 1]$

$= 500[0.732]$

= 366 செ.மீ

= **3.66** மீ

**5. 15 மீ உயரமுள்ள ஒரு கோபுரம் உள்ளது. ஒரு மின் கம்பத்தின் அடி மற்றும் உச்சியிலிருந்து கோபுரத்தின் உச்சியை முறையே 60° ,30° என்ற ஏற்றக்கோணங்களில் பார்த்தால் மின் கம்பத்தின் உயரத்தைக் காண்க.**


**தீர்வு**

AB – மின் கம்பம் , CE – கோபுரம்

படத்திலிருந்து, AB = x, CE = 15 மீ, DE = 15 - x, BC = AD = y

$\Delta ADE$ –ல் $\tan 30° = \frac{DE}{AD} \Rightarrow \frac{1}{\sqrt{3}} = \frac{15-x}{y}$

$x = (15 - x)\sqrt{3}$ ….(1)




$\Delta BCE$ –ல் $\tan 60° = \frac{CE}{BC} \Rightarrow \sqrt{3} = \frac{15}{y}$

$y = \frac{15}{\sqrt{3}} = 5\sqrt{3}$ ….(2)

(1) = (2) $\Rightarrow (15 - x)\sqrt{3} = 5\sqrt{3}$

$15 - x = 5 \Rightarrow x = 10$ மீ

மின் கம்பத்தின் உயரம் **10** மீ.


**6. 50மீ உயரமுள்ள ஒரு கோபுரத்தின் உச்சியில் இருந்து ஒரு மரத்தின் உச்சி மற்றும் அடி ஆகியவற்றின் இறக்கக் கோணங்கள் முறையே 30° மற்றும் 45° எனில் ஒரு மரத்தின் உயரத்தைக் காண்க. ($\sqrt{3} = 1.732$)**

**தீர்வு** கோபுரத்தின் உயரம் AB = 50 மீ

மரத்தின் உயரம் = CD = y மற்றும் BD = $x$ என்க

படத்திலிருந்து, ∠XAC = 30° = ∠ACM மற்றும் ∠XAD = 45° =∠ADB

$\tan 45° = \frac{AB}{BD}$




$1 = \frac{50}{x}$ இதிலிருந்து $x = 50$ மீ

செங்கோண முக்கோணம் AMC –ல்

$\tan 30° = \frac{AM}{CM}$

$\frac{1}{\sqrt{3}} = \frac{AM}{50}$ [DB = CM என்பதால்]


$AM = \frac{50}{\sqrt{3}} = \frac{50\sqrt{3}}{3} = \frac{50 \times 1.732}{3} = 28.87$ மீ

CD = MB = AB – AM = 50 -28.87 = 21.13 மீ

எனவே, மரத்தின் உயரம் 21.13 மீ ஆகும்

7. **60 மீ உயரமுள்ள கலங்கரை விளக்கத்தின் உச்சியிலிருந்து ஒருவர் கடல்மட்டத்திலுள்ள இரு கப்பல்களை முறையே 28° மற்றும் 45° இறக்கக்கோணத்தில் பார்க்கிறார். ஒரு கப்பல் மற்றொரு கப்பலுக்குப் பின்னால் ஒரே திசையில் கலங்கரை விளக்கத்துடன் நேர்கோட்டில் உள்ளது எனில், இரண்டு கப்பல்களுக்கும் இடையேயுள்ள தொலைவைக் காண்க. (tan 28° = 0.5317)**

**<u>தீர்வு</u>** கலங்கரை விளக்கத்தின் உயரம் CD என்க.




D என்பது உற்று நோக்குபவர் இருக்கும் இடம் என்க

கலங்கரை விளக்கத்தின் உயரம் CD = 60மீ

படத்திலிருந்து, ∠ XDA = 28° = ∠ DAC மற்றும்

∠ XDB = 45° = ∠ DBC

செங்கோண முக்கோணம் DCB– ல்

$\tan 45° = \frac{DC}{BC}$

$\mathbf{1} = \frac{60}{BC}$

BC = 60மீ

செங்கோண முக்கோணம் DCA– ல்

$\tan 28° = \frac{DC}{AC}$

$\mathbf{0.5317} = \frac{60}{AC}$

$AC = \frac{60}{0.5317}$

AC = 112.85 **மீ**

இரண்டு கப்பல்களுக்கும் இடையேயான தொலைவு AB = AC – BC = 52.85 மீ


8. **ஒருவர், கோபுரத்திலிருந்து விலகி கடலில் சென்று கொண்டிருக்கும் படகு ஒன்றை, கோபுரத்தின் உச்சியிலிருந்து பார்க்கிறார். தொலைவினில் படகு இருக்கும்போது, படகை அவர் 60° இறக்கக்கோணத்தில் காண்கிறார். 10 வினாடிகள் கழித்து இறக்கக்கோணம் 45° ஆக மாறுகிறது எனில், படகு செல்லும் வேகத்தினைத் (கி.மீ/மணியில்) தோராயமாக கணக்கிடுக. மேலும் படகு நிலையான தண்ணீரில் செல்கிறது எனக் கருதுக. ($\sqrt{3} = 1.732$)**

**<u>தீர்வு</u>** AB என்பது கோபுரம் என்க.

C மற்றும் D என்பன படகு இருக்கும் நிலைகள் என்க. படத்திலிருந்து

∠ XAC = 60° = ∠ACB மற்றும்

∠ XAD = 45° = ∠ADB, BC = 200மீ




செங்கோண முக்கோணம் ABC –ல் $\tan 60° = \frac{AB}{BC}$

$\sqrt{3} = \frac{AB}{200}$ இதிலிருந்து AB= **200** $\sqrt{3}$ **–––––– (1)**

செங்கோண முக்கோணம் ABD –ல்

$\tan 45° = \frac{AB}{BD}$ இதிலிருந்து, **1** = $\frac{200\sqrt{3}}{BD}$ **–– (1)...** லிருந்து

எனவே, BD= 200 $\sqrt{3}$

இப்போது, CD = BD – BC

= 200 $\sqrt{3}$ – 200

= 200 ($\sqrt{3}$ – 1) = 146.4

CD என்ற தொலைவை பயணிக்கத் தேவைப்படும் நேரம் 10 வினாடிகள், எனக் கொடுக்கப்பட்டுள்ளது.

அதாவது, 146.4 மீ தொலைவை 10 வினாடிகளில் படகு கடக்கிறது.

எனவே, படகின் வேகம் = $\frac{\text{தொலைவு}}{\text{காலம்}}$ = $\frac{146.4}{10}$

= 14.64 மீ/வி. இதிலிருந்து 14.64 x $\frac{3600}{1000}$ கி.மீ / மணி

= 52.704 கி.மீ/ மணி.

**9. 1800 மீ உயரத்தில் பறக்கும் ஒரு விமானத்திலிருந்து ஒரே திசையில் விமானத்தை நோக்கி செல்லும் இரு படகுகள் பார்க்கப்படுகிறது. விமானத்திலிருந்து இரு படகுகளை முறையே 60° மற்றும் 30° இறக்கக்கோணங்களில் உற்று நோக்கினால், இரண்டு படகுகளுக்கும் இடைப்பட்டத் தொலைவைக் காண்க. ( $\sqrt{3}$= 1.732).**

**<u>தீர்வு</u>**

படத்திலிருந்து, A – விமானம், C, D இரு படகுகள்

படத்திலிருந்து, AB = 1800 மீ, BC = y, CD = x, BD = x + y

ΔABC –ல் $\tan 60° = \frac{AB}{BC}$

$\Rightarrow \sqrt{3} = \frac{1800}{y}$

$\Rightarrow y = \frac{1800}{\sqrt{3}} = 600\sqrt{3}$ மீ


ΔABD –ல் $\tan 30° = \frac{AB}{BD}$

$\Rightarrow \frac{1}{\sqrt{3}} = \frac{1800}{x+y}$

$\Rightarrow x + y = 1800\sqrt{3}$

$\Rightarrow x = 1800\sqrt{3} - 600\sqrt{3}$

$\Rightarrow 1200\sqrt{3}$ மீ = 1200 x 1.732





இருபடகுகளுக்கு இடைபட்ட தூரம் = 2078.4மீ

**10. ஒரு கலங்கரை விளக்கத்தின் உச்சியிலிருந்து எதிரெதிர் பக்கங்களில் உள்ள இரண்டு கப்பல்கள் 30° மற்றும் 60° இறக்கக்கோணத்தில் பார்க்கப்படுகின்றன. கலங்கரை விளக்கத்தின உயரம் h மீ. இரு கப்பல்கள் மற்றும் கலங்கரை விளக்கத்தின் அடிப்பகுதி ஆகியவை ஒரே நேர்கோட்டில் அமைகின்றன எனில், இரண்டு கப்பல்களுக்கு இடைப்பட்ட தொலைவு $\frac{4h}{\sqrt{3}}$ மீ என நிரூபிக்க.**

**தீர்வு**

C, D – கப்பல்களின் நிலைகள்

கலங்கரை விளக்கத்தின் உயரம் AB = h மீ




Δ ABC யில் tan$\theta$ = $\frac{\text{எதிர்பக்கம்}}{\text{அடுத்துள்ள பக்கம்}}$

$\tan 30° = \frac{h}{x}$

$\frac{1}{\sqrt{3}} = \frac{h}{x}$

$x = h\sqrt{3}$

Δ ABD யில்

$\tan 60° = \frac{h}{y}$

$\sqrt{3} = \frac{h}{y}$

$y = \frac{h}{\sqrt{3}}$

இரண்டு கப்பல்களுக்கு இடைப்பட்ட தொலைவு (x + y) = $h\sqrt{3} + \frac{h}{\sqrt{3}}$

$$d = \frac{3h}{\sqrt{3}} + \frac{h}{\sqrt{3}} = \frac{3h+h}{\sqrt{3}} = \frac{4h}{\sqrt{3}}$$ மீ

## இயல் – 7

## அளவியல்

## 2 MARKS

**1. ஓர் உருளை வடிவப் பீப்பாயின் உயரம் 20 செ.மீ அடிப்புற ஆரம் 14 செ.மீ எனில், அதன் மொத்த புறப்பரப்பு காண்க.**

**தீர்வு** உருளையின் மொத்தப் புறப்பரப்பு = $2\pi r$ (h + r) ச.அ

= $2 \times \frac{22}{7} \times 14\ (20+14)$

= 2 x 22 x 2 x 34

= 2992 செ.மீ$^2$

வளைபரப்பு = $2\pi r$h = $2 \times \frac{22}{7} \times 14 \times 20$ = 1760 செ.மீ$^2$

**2. 88 ச.செ.மீ வளைபரப்புடைய ஒரு நேர்வட்ட உருளையின் உயரம் 14 செ.மீ எனில், உருளையின் விட்டம் காண்க.**

**தீர்வு** உருளையின் வளைபரப்பு = 88 ச.செ.மீ

$2\pi r$h = 88 $\Longrightarrow$ $2 \times \frac{22}{7} \times r \times 14 = 88$ $\Longrightarrow$ $2r = \frac{88}{14} \times \frac{7}{22}$ $\Longrightarrow 2r = 2$

உருளையின் விட்டம் = 2 செ.மீ

**3. நீளம் 3 மீ மற்றும் விட்டம் 2.8மீ உடைய ஒரு சமன்படுத்தும் உருளையைக் கொண்டு ஒரு தோட்டம் சமன்படுத்தப்படுகிறது. 8 சுற்றுகளில் எவ்வளவு பரப்பை உருளை சமன் செய்யும் ?**

**தீர்வு** விட்டம் d = 2.8 மீ

ஆரம் r = 1.4 மீ, உயரம் h = 3 மீ

உருளை ஒரு சுற்றில் சமன்படுத்தும் பரப்பு = சமன்படுத்தும் உருளையின் வளைபரப்பு

= $2\pi r$ h ச.அ = $2 \times \frac{22}{7} \times 1.4 \times 3$

உருளை ஒரு சுற்றில் சமன்படுத்தும் பரப்பு = 26.4 ச.மீ

8 சுற்றுகளில் சமன்படுத்தப்படும் மொத்தப் பரப்பு = 8 x 26.4 = 211.2மீ$^2$

**4. 704 ச.செ.மீ மொத்தப் புறப்பரப்பு கொண்ட ஒரு கூம்பின் ஆரம் 7 செ.மீ எனில் அதன் சாயுயரம் காண்க.**

**தீர்வு** கூம்பின் மொத்தப் புறப்பரப்பு = 704 ச.செ.மீ

$\pi r\ (l + r)$ = 704

$\frac{22}{7} \times 7\ (l + 7)$ = 704

$l + 7 = \frac{704}{22} = \frac{64}{2} = 32$

$l + 7 = 32$, $l = 32 - 7 = 25$ செ.மீ

**5. ஒரு கோளத்தின் புறப்பரப்பு 154 ச.மீ எனில், அதன் விட்டம் காண்க.**

**தீர்வு** கோளத்தின் புறப்பரப்பு =154 ச.மீ

$4\pi r^2 = 154$ $\Longrightarrow$ $4 \times \frac{22}{7} \times r^2 = 154$

$r^2 = \frac{154}{4} \times \frac{7}{22} = \frac{7}{2}$

கோளத்தின் ஆரம், r = $\frac{7}{2}$ செ.மீ ; கோளத்தின் விட்டம் d = 7 மீ

**6. ஒரு கோள வடிவ வளிக் கூண்டினுள் (Balloon) காற்று உந்தப்படும்போது அதன் ஆரம் 12 செ.மீ லிருந்து 16 செ.மீ ஆக உயருகிறது. இரு புறப்பரப்புகளின் விகிதம் காண்க.**

**தீர்வு** $r_1$ மற்றும் $r_2$ வளிக்கூண்டின் ஆரங்கள் என்க.

$\frac{r_1}{r_2} = \frac{12}{16} = \frac{3}{4}$

எனவே புறப்பரப்புகளின் விகிதம் $= \frac{4\pi r_1^2}{4\pi r_2^2} = \frac{r_1^2}{r_2^2} = \left(\frac{r_1}{r_2}\right)^2 = \left(\frac{3}{4}\right)^2 = \frac{9}{16}$

புறப்பரப்புகளின் விகிதம் = **9 : 16**

**7. ஒரு திண்ம அரைக்கோளத்தின் அடிப்பரப்பு 1386 ச.மீ எனில் அதன் மொத்தப் புறப்பரப்பைக் காண்க.**

**தீர்வு** திண்ம அரைக்கோளத்தின் அடிப்பரப்பு, $\pi r^2$ = **1386 ச.மீ**

அரைக்கோளத்தின் மொத்தப்பரப்பு = **3** $\pi r^2$ =**3** x1386=4158 ச.மீ

ஆகவே அரைக்கோளத்தின் மொத்தப்பரப்பு = 4158 ச.மீ

**8. ஓர் உள்ளீடற்ற அரைக்கோள ஓட்டின் உள் மற்றும் வெளிப்புற ஆரங்கள் முறையே 3மீ மற்றும் 5மீ ஆகும். ஓட்டின் மொத்தப் புறப்பரப்பு மற்றும் வளைபரப்பைக் காண்க.**

**தீர்வு**

ஓட்டின் உள் மற்றும் வெளிப்புற ஆரங்கள் முறையே, r மற்றும் R என்க.

இங்கு, R = **5** மீ, r = **3** மீ

உள்ளீடற்ற அரைக்கோளத்தின் வளைபரப்பு

$= 2\pi\ (R^2 + r^2)$ ச.அ

$= 2\times \frac{22}{7}\ (25 + 9)$ = **213.71**


உள்ளீடற்ற அரைக்கோளத்தின் மொத்தப் புறப்பரப்பு

$= \pi(3R^2 + r^2)$ ச.அ

$= \frac{22}{7}\ (75 + 9)$ = **264**

ஆகவே, வளைபரப்பு **213.71** ச.மீ மற்றும் மொத்தப் புறப்பரப்பு **264** ச.மீ ஆகும்.

**9. ஒரு கோளம், உருளை மற்றும் கூம்பு ஆகியவற்றின் ஆரங்கள் சமம். படத்தி ல் உள்ளபடி கூம்பு மற்றும் உருளையின் உயரங்கள்ஆரத்திற்குச் சமம் எனில், அவற்றின் வளைபரப்புகளின் விகிதம் காண்க.**



**தீர்வு**

இங்கு தேவையான விகிதம்

= கோளதின் வளைபரப்பு : உருளையின் வளைபரப்பு : கூம்பின் வளைபரப்பு

$= 4\pi r^2 : 2\pi rh : \pi rl\ \ (l = \sqrt{r^2 + h^2} = \sqrt{2r^2} = \sqrt{2}r\ \ (\because h = r)$

$= 4\pi r^2 : 2\pi r^2 : \pi r\sqrt{2}r$

$= 4\pi r^2 : 2\pi r^2 : \sqrt{2}\,\pi r^2$

$= 4 : 2 : \sqrt{2} = 2\sqrt{2} : \sqrt{2} : 1$

**10. ஓர் கூம்பின் இடைக்கண்டச் சாயுயரம் 5 செ.மீ ஆகும். அதன் இரு ஆரங்கள் 4 செ.மீ மற்றும் 1 செ.மீ எனில் இடைக்கண்டத்தின் வளைபரப்பைக் காண்க.**

**<u>தீர்வு</u>** l = 5 செ.மீ, R = 4 செ.மீ r = 1 செ.மீ

இடைக்கண்டத்தின் வளைபரப்பு = $\pi$ (R + r) l ச.அ

$= \frac{22}{7}(4+1) \times 5 \quad = \frac{22\times5\times5}{7} = \frac{550}{7} = 78.57$ ச.செ.மீ

**11. ஓர் உருளையின் ஆரம் மற்றும் உயரங்களின் விகிதம் 5 : 7 ஆகும் . அதன் வளைபரப்பு 5500 ச.செ.மீ எனில், உருளையின் ஆரம் மற்றும் உயரம் காண்க.**

**<u>தீர்வு</u>**

r: h = 5 : 7 ⇒ r = $5x$செ.மீ, h= 7 $x$செ.மீ

வளைபரப்பு = 5500 ச.செ.மீ

$2\pi rh = 5500 \Rightarrow 2 \times \frac{22}{7} \times 5x \times 7x = 5500$

$x^2 = \frac{5500}{2\times22\times5} = 25 \Rightarrow x = 5$

ஆரம் = $5 \times 5 = 25$ செ.மீ, உயரம் = $7\times 5 = 35$ செ.மீ

**12. உயரம் 2 மீ மற்றும் அடிப்பரப்பு 250 ச. மீ கொண்ட ஓர் உருளையின் கனஅளவைக் காண்க.**

**<u>தீர்வு</u>**

உருளையின் ஆரம் மற்றும் உயரம் முறையே r மற்றும் h என்க.

இங்கு, உயரம் h =2மீ, அடிப்பரப்பு = 250 ச.மீ

உருளையின் கன அளவு = $\pi r^2 h$ க.அ. = அடிப்பரப்பு $\times h$

$= 250 \times 2 = 500$ மீ$^3$

எனவே, உருளையின் கன அளவு = 500 க.மீ.

**13. ஓர் உள்ளீடற்ற உருளையின் உயரம், உட்புற மற்றும் வெளிப்புற ஆரங்கள் முறையே 9 செ.மீ, 21 செ.மீ மற்றும் 28 செ.மீ ஆகும். உருளையை உருவாக்கத் தேவைப்படும் இரும்பின் கன அளவைக் காண்க.**

**<u>தீர்வு</u>**

உள்ளீடற்ற உருளையின் உயரம், உட்புற ஆரம் மற்றும் வெளிப்புற ஆரம் முறையே h, r மற்றும் R என்க.

இங்கு, r = 21செ.மீ, R = 28செ.மீ , h = 9 செ.மீ

உள்ளீடற்ற உருளையின் கன அளவு = $\pi(R^2 - r^2)h$ க.அ.

$= \frac{22}{7}(28^2 - 21^2) \times 9 = \frac{22}{7}(784 - 441) \times 9 = 9702$

ஆகவே, தேவையான இரும்பின் கன அளவு = 9702 செ.மீ$^3$

**14. ஒரு நேர் வட்டக் கூம்பின் கன அளவு 11088 க.செ.மீ ஆகும். கூம்பின் உயரம் 24 செ.மீ எனில், அதன் ஆரம் காண்க.**

**<u>தீர்வு</u>**

கூம்பின் உயரம் மற்றும் ஆரம், h மற்றும் r என்க.

இங்கு, h = 24 செ.மீ., கூம்பின் கன அளவு = 11088 க.செ.மீ

$\frac{1}{3}\pi r^2 h$ = 11088

$\frac{1}{3} \times \frac{22}{7} \times r^2 \times 24$ = 11088

$r^2$ = 441

கூம்பின் ஆரம், r = 21 செ.மீ

**15. இரு கூம்புகளுடைய கன அளவுகளின் விகிதம் 2 : 3ஆகும். இரண்டாம் கூம்பின் உயரம் முதல் கூம்பின் உயரத்தைப் போல் இரு மடங்கு எனில், அவற்றின் ஆரங்களின் விகிதம் காண்க.**

**<u>தீர்வு</u>**

$r_1, h_1$ என்பன முதல் கூம்பின் ஆரம் மற்றும் உயரம் என்க. $r_2, h_2$ என்பன இரண்டாம் கூம்பின் ஆரம் மற்றும் உயரம் என்க.

இங்கு, $h_2 = 2h_1$ மற்றும் $\frac{\text{முதல் கூம்பின் கன அள}}{\text{இரண்டாம் கூம்பின் கன அளவு}} = \frac{2}{3}$

$\frac{\frac{1}{3}\pi {r_1}^2 h_1}{\frac{1}{3}\pi {r_2}^2 h_2} = \frac{2}{3} \Rightarrow \frac{{r_1}^2}{{r_2}^2} \times \frac{h_1}{2h_1} = \frac{2}{3}$

$\frac{{r_1}^2}{{r_2}^2} = \frac{4}{3}$ இதிலிருந்து $\frac{r_1}{r_2} = \frac{2}{\sqrt{3}}$

ஆகவே, ஆரங்களின் விகிதம் = 2 : $\sqrt{3}$

**16. 45 செ.மீ உயரமுள்ள ஓர் இடைக்கண்டத்தின் இருபுற ஆரங்கள் முறையே 28 செ.மீ, 7 செ.மீ எனில் இடைக்கண்டத்தின் கன அளவைக் காண்க.**

**<u>தீர்வு</u>** h = 45 செ.மீ, R = 28 செ.மீ, r = 7 செ.மீ

இடைகண்டத்தின் கனஅளவு = $\frac{1}{3}\pi h[\ R^2 + Rr + r^2\ ]$ க.அ

= $\frac{1}{3} \times \frac{22}{7} \times 45[\ 28^2 + 28 \times 7 + 7^2\ ]$ = $\frac{1}{3} \times \frac{22}{7} \times 45[\ 784 + 196 + 49\ ]$

= $\frac{1}{3} \times \frac{22}{7} \times 45 \times 1029$ = 22 x 15 x 147 = 48510 செ.மீ$^3$

**17. சம ஆரங்கள் கொண்ட இரு கூம்புகளின் கன அளவுகள் 3600 செ.மீ$^3$ மற்றும் 5040 செ.மீ$^3$ எனில் அவற்றின் உயரங்களின் விகிதம் காண்க.**

**<u>தீர்வு</u>** கன அளவுகளின் விகிதம் = $h_1 : h_2$

= 3600 : 5040

= 360 : 504

= 40 : 56

= 5 : 7

**18. ஆரம் 10 மீட்டரும், உயரம் 15 மீட்டரும் உடைய ஒரு கூம்பு வடிவக் கொள்கலன் முழுமையாகக் பெட்ரோலால் நிரம்பியுள்ளது. நிமிடத்திற்கு 25 கன மீட்டர் பெட்ரோல் கொள்கலனின் அடிப்புறம் வழியாக வெறியேற்றப்பட்டால் எத்தனை நிமிடங்களில் கொள்கலன் காலியாகும். விடையை நிமிடத் திருத்தமாகத் தருக.**

**தீர்வு**

கூம்பு வடிவ கொள்கலனில், r =10மீ, h = 15மீ

கன அளவு = $\frac{1}{3}\pi r^2 h = \frac{1}{3} \times \frac{22}{7} \times 10 \times 10 \times 15$

= 1570 கனமீட்டர்

நிமிடத்திற்கு 25 க.மீ வீதம் பெட்ரோல் வெளியேற்றப்படுகிறது.

கொள்கலன் காலியாக தேவைப்படும் நேரம் = $\frac{1570}{25} = 62.8$ நிமிடங்கள்

தேவையான நேரம் = 63 நிமிடம்

**19. இரு கோளங்களின் ஆரங்களின் விகிதம் 4 : 7 எனில், அவ.றின் கன அளவுகளின் விகிதம் காண்க.**

**தீர்வு**

இரு கோளங்களின் ஆரங்களின் விகிதம் = 4 : 7 = $\frac{4}{7}$

கோளம் 1–ன் ஆரம் $r_1 = 4x$

கோளம் 2–ன் ஆரம் $r_2 = 7x$

கன அளவுகளின் விகிதம் = $\frac{\frac{4}{3}\pi r_1^3}{\frac{4}{3}\pi r_2^3} = \frac{r_1^3}{r_2^3} = \frac{(4x)^3}{(7x)^3} = \frac{4^3\times x^3}{7^3\times x^3}$

$= \frac{4^3}{7^3} = \frac{64}{343}$

கன அளவுகளின் விகிதம் 64 : 343

**20. ஓர் அரைக்கோளத்தின் மேல் ஓர் உள்ளீடற்ற உருளையைப் பொருத்திய வடிவத்தில் அமைந்த ஒரு கிண்ணத்தின் விட்டம் 14 செ.மீ மற்றும் உயரம் 13 செ.மீ எனில், அதன் கொள்ளளவைக் காண்க.**

**தீர்வு**

அரைக்கோளத்தின் ஆரம் , r = 7 செ.மீ, உருளையின் ஆரம், r = 7 செ.மீ,

உருளையின் உயரம், h = 6 செ.மீ

பாத்திரத்தின் கனஅளவு = உருளையின் கன அளவு + அரைக்கோளத்தின் கன அளவு

$= \pi r^2 h + \frac{2}{3}\pi r^3 = \pi r^2\left(\mathrm{h} + \frac{2}{3}\mathrm{r}\right)$

$= \frac{22}{7} \times 7 \times 7 \times \left(6 + \frac{2}{3} \times 7\right) = 22 \times 7 \times \frac{32}{3}$

= **1642.67** செ.மீ$^3$

பாத்திரத்தின் கொள்ளவு **1642.67** செ.மீ$^3$

**21. சாயுயரம் 19 மீ கொண்ட கூம்பு வடிவக் கூடாரத்தில் நால்வர் உள்ளனர். ஒருவருக்கு 22 ச.மீ. பரப்பு தேவை எனில், கூடாரத்தின் உயரத்தைக் கணக்கிடவும்.**

**<u>தீர்வு</u>**

கூம்பு வடிவ கூடாரத்தின்

கூம்பின் அடிப்பக்க பரப்பு = **4** $\times 22$

$\pi r^2$ = **88**

$r^2$ = **88** $\times \frac{7}{22}$ = **28** செ.மீ$^2$ மற்றும் $l = 19$ செ.மீ

h = $\sqrt{l^2 - r^2} = \sqrt{19^2 - 28} = \sqrt{361 - 28}$

h = $\sqrt{333} = 18.25$செ.மீ

## 5 MARKS

**1. தடிமன் 2மீ, உட்புற ஆரம் 6மீ மற்றும் உயரம் 25மீ உடைய ஓர் உருளை வடிவக் சுரங்கப்பாதையின் உள் மற்றும் வெளிப்புறப் பரப்புகளுக்கு வர்ணம் பூசப்படுகிறது. ஒரு லிட்டர் வர்ணத்தைக் கொண்டு 10 ச.மீ பூச முடியுமானால், சுரங்கப்பாதைக்கு வர்ணம் பூச எத்தனை லிட்டர் வர்ணம் தேவை ?**

**<u>தீர்வு</u>**

h, r மற்றும் R என்பன முறையே உள்ளீற்ற உருளையின் உயரம், உட்புற ஆரம் மற்றும் வெளிப்புற ஆரம் என்க.

இங்கு உயரம் h = **25**மீ, உட்புற ஆரம் r = 6மீ

தடிமன், W = R - r ⇒ **2** = R - 6 ,

தற்போது, வெறிப்புற ஆரம் R = **6** + **2** = **8**மீ

சுரங்கப்பாதையின் வளைபரப்பு = உள்ளீடற்ற உருளையின் வளைபரப்பு

= $2\pi(R + r)h$ ச.அ

= **2** $\times \frac{22}{7}(8 + 6) \times 25$


எனவே, சுரங்கப்பாதையின் வளபரப்பு = **2200** ச.மீ

ஒரு லிட்டர் வர்ணம் பூசக்கூடிய பரப்பு = **10** ச.மீ

எனவே, தேவைப்படும் வர்ணம் = $\frac{2200}{10} = 220$லி

ஆகவே, சுரங்கப்பாதைக்கு வர்ணம் பூச **220** லிட்டர் வர்ணம் தேவைப்படும்.

2. **2.4 செ.மீ உயரமுள்ள ஒரு திண்ம உருளையின் விட்டம் 1.4 செ.மீ ஆகும். உருளையினுள் அதே ஆரமுள்ள கூம்பு வடிவக் குழிவு உருளையின் உயரத்திற்கு ஏற்படுத்தப்படுகிறது எனில் மீதமுள்ள திண்மத்தின் மொத்த புறப்பரப்பு காண்க.**




**தீர்வு** h = **2.4** செ.மீ, d = 1.4 செ.மீ, $\Rightarrow r = 0.7$ செ.மீ

மீதமுள்ள திண்மத்தின் மொத்த புறப்பரப்பு

= உருளையின் வளைபரப்பு + கூம்பின் வளைப்பரப்பு + அடிப்பரப்பு

= $(2\pi rh + \pi rl + \pi r^2)$ ச.அ

= $\pi r$ (2h + l + r) ச.அ

l=$\sqrt{r^2 + h^2}$=$\sqrt{(0.7)^2 + (2.4)^2}$= $\sqrt{0.49 + 5.76}$ =$\sqrt{6.25}$= 2.5 செ.மீ

மீதமுள்ள திண்மத்தின் மொத்தப் புறப்ரப்பு = $\pi r(2h + l + r)$ ச.அ

= $\frac{22}{7} \times 0.7[2(2.4)+ 2.5 + 0.7)]$

= 22 x 0.1 (4.8 + 2.5 + 0.7)

= 22 x 0.1 x 8.0 = 2.2 x 0.8 = 17.6 செ.மீ$^2$

3. **தொழிற்சாலையின் உலோக வாளி, கூம்பு இடைக்கண்ட வடிவில் உள்ளது. அதன் மேற்புற, அடிப்புற விட்டங்கள் முறையே 10 மீ, 4 மீ ஆகும். அதன் உயரம் 4 மீ எனில், இடைக்கண்டத்தின் வளைபரப்பு, மொத்தபரப்பு காண்க.**

**தீர்வு** மேல்விட்டம் = **10**மீ, ஆரம் R = **5** மீ

கீழ்விட்டம் = **4**மீ, ஆரம் r = **2**மீ

உயரம் h = **4**மீ

சாயுரம் l = $\sqrt{h^2 + (R - r)^2}$ = $\sqrt{4^2 + (5 - 2)^2}$ = $\sqrt{16 + 9}$

= $\sqrt{25}$ = 5 மீ $\Rightarrow$ l = 5 மீ

இடைக்கண்டத்தின் வளைபரப்பு = $\pi$ (R + r) l ச.அ

= $\frac{22}{7}$ ( 5 + 2) x 5

= $\frac{22}{7} \times 7 \times 5$ = 110 மீ$^2$

இடைக்கண்டத்தின் மொத்தபரப்பு = $[\pi (R + r) l + \pi R^2 + \pi r^2]$ச.அ

= $\pi [(R + r) l + R^2 + r^2]$

= $\frac{22}{7}[(5 + 2)5 + 25 + 4] = \frac{1408}{7} = 201.14$

4. **ஒரு திண்ம இரும்பு உருளையின் மொத்தப் புறப்பரப்பு 1848 ச.மீ மேலும் அதன் வளைபரப்பு, மொத்தப் புறப்பரப்பில் ஆறில் ஐந்து பங்காகும் எனில், இரும்பு உருளையின் ஆரம் மற்றும் உயரம் காணவும்.**

**தீர்வு**

உருளையின் வளைபரப்பு CSA = $\frac{5}{6}$ TSA

$\Rightarrow 2\pi rh = \frac{5}{6} \times 308 = 1540$ (மொத்தப் புறப்பரப்பு = **1848**) …..(1)

ஆனால், மொத்த புறப்பரப்பு = **1848**

$2\pi r(h + r) = 1848$

$2\pi rh + 2\pi r^2 = 1848$

$2\pi r^2 = 1848 - 1540$

$2\pi r^2 = 308$

$2 \times \frac{22}{7} \times r^2 = 308$

$r^2 = 308 \times \frac{1}{2} \times \frac{7}{22}$

$r^2 = 49 \Rightarrow r = 7$மீ

$(1) \Rightarrow 2 \times \frac{22}{7} \times 7 \times h = \frac{5}{6} \times 1540$

h = 35 மீ

ஆரம் = **7** மீ, உயரம் = **35**மீ

5. **ஓர் உள்ளீடற்ற மர உருளையின் வெளிப்புற ஆரம் மற்றும் நீளம் முறையே 16 செ.மீ மற்றும் 13 செ.மீ ஆகும். அதன் தடிமன் 4 செ.மீ எனில் உருளையின் மொத்தப் புறப்பரப்பு எவ்வளவு ?**

**<u>தீர்வு</u>**

உள்ளீடற்ற உருளையின் R = 16மீ, h = **13**செ.மீ

தடிமன், W = R - r ⇒ **4** = **16** – r

r = 16 - 4 = 12 செ.மீ

உள்ளீடற்ற அரைக்கோளத்தின் புறப்பரப்பு = $2\pi(R + r)\ (R - r + h)$ ச.அ

$= 2 \times \frac{22}{7} \times (16 + 12)(16 - 12 + 13)$


$= 2 \times \frac{22}{7} \times 28 \times 17$

உள்ளீடற்ற அரைக்கோளத்தின் மொத்த புறப்பரப்பு = **2992** செ.மீ$^2$

6. **ஓர் உருளையின் மீது ஓர் அரைக்கோளம் இணைந்தவாறு உளள ஒரு பொம்மையின் மொத்த உயரம் 25 செ.மீ ஆகும். அதன் விட்டம் 12 செ.மீ எனில், பொம்மையின் மொத்த புறப்பரப்பைக் காண்க.**

**<u>தீர்வு</u>** விட்டம் d = 12 செ.மீ, r = 6 செ.மீ,

உருளையின் உயரம் h = **25** – **6** = **19** செ.மீ,




பொம்மையின் மொத்த புறப்பரப்பு

= உருளையின் வளைபரப்பு + அரைக்கோளத்தின் வளைபரப்பு + உருளையின் அடிப்பரப்பு

$= 2\pi rh + 2\pi r^2 + \pi r^2$ ச.அ

$= 2\pi rh + 3\pi r^2 = \pi r\,(2h + 3r)$

$= \frac{22}{7} \times 6 \times (38 + 18) = \frac{22}{7} \times 6 \times 56 =$ $= 1056$ செ.மீ$^2$

**7. ஓர் உருளையின் மீது ஓர் இடைக்கண்டம் இணைந்தவாறு அமைந்த ஒரு புனலின் மொத்த உயரம் 20 செ.மீ, உருளையின் உயரம் 12 செ.மீ, விட்டம் 12 செ.மீ ஆகும். இடைக்கண்டத்தின் மேற்புற விட்டம் 24 செ.மீ எனில், புனலின் வெளிப்புறப் பரப்பைக் கணக்கிடுக.**


**<u>தீர்வு</u>** $h_1$ மற்றும் $h_2$ என்பன முறையே இடைக்கண்டம் மற்றும் உருளையின் உயரம் என்க. R மற்றும் r என்பன இடைக்கண்டத்தின் மேல் மற்றும் கீழ்ப்புற ஆரங்கள் என்க.

இங்கு, R = 12 செ.மீ, r = 6 செ.மீ, $h_2$ = 12 செ.மீ, $h_1$ = 20 – 12 = 8 செ.மீ

இடைக்கண்டத்தின் சாயுயரம் $l = \sqrt{(R-r)^2 + h_1^2}$ அலகுகள்

$= \sqrt{36 + 64}$

$l = 10$ செ.மீ




வெளிப்புறப் பரப்பு $= 2\pi r h_2 + \pi(R+r)l$ ச.அலகுகள்

$= \pi(2rh_2 + (R+r)l)$


$= \pi[(2 \times 6 \times 12) + (18 \times 10)]$

$= \pi(144 + 180)$

$= \frac{22}{7} \times 324 = 1018.28$

எனவே, புனலின் வெளிப்புற பரப்பு **1018.28 ச. செ.மீ. ஆகும்.**

**8. நாதன் என்ற பொறியில் மாணவர் ஓர் உருளையின் இருபுறமும் கூம்புகள் உள்ளவாறு மாதிரி ஒன்றை உருவாக்கினார். மாதிரியின் நீளம் 12 செ.மீ மற்றும் விட்டம் 3 செ.மீ ஆகும். ஒவ்வொரு கூம்பின் உயரமும் 2 செ.மீ இருக்குமானால் நாதன் உருவாக்கிய மாதிரியின் கன அளவைக் காண்க.**




**<u>தீர்வு</u>**

<u>உருளை</u> விட்டம் d =**3** செ.மீ, ஆரம் r=**1.5** செ.மீ உயரம் $h_1$ = **12 – (2+2) = 8** செ.மீ

<u>கூம்பு</u> $r = \frac{3}{2}$ செ.மீ, உயரம் $h_2$ = **2** செ.மீ

மாதிரியின் கனஅளவு = உருளையின் கனஅளவு + **2** கூம்பின் கனஅளவு

$= \pi r^2 h_1 + 2 \times \frac{1}{3} \pi r^2 h_2 = \pi r^2 \; [h_1 + 2\frac{1}{3} h_2]$

$= \frac{22}{7} \times \frac{3}{2} \times \frac{3}{2}[8 + \frac{2}{3} \times 2] = \frac{11}{7} \times \frac{9}{2}[8 + \frac{4}{3}]$

$= \frac{99}{14}[\frac{28}{3}] = 65.99$ செ.மீ

∴ நாதன் உருவாக்கிய மாதிரியின் கன அளவு = **66** க.செ.மீ

**9. ஒரு மருந்து குப்பி, ஓர் உருளையின் இருபுறமும் அரைக்கோளம் இணைந்த வடிவில் உள்ளது. குப்பியின் மொத்த நீளம் 12 மி.மீ விட்டம் 3 மி.மீ எனில் அதில் அடைக்கப்படும் மருந்தின் கனஅளவைக் காண்க.**

**<u>தீர்வு</u>**

உருளை வடிவத்தின் ஆரம் = அரைக்கோளத்தின் ஆரம் = $\frac{3}{2}$ = மி.மீ , உயரம் =h = **9** மி.மீ

தேவையான கன அளவு = உருளையின் கன அளவு + (**2**xஅரைக்கோளத்தின் கன அளவு)

$$= \pi r^2 h + 2 \times \frac{2}{3} \pi r^3 = \pi r^2 \left(h + \frac{2 \times 2}{3} \times r\right)$$

$$= \frac{22}{7} \times \frac{3^2}{2^2} \times \left(9 + \frac{2 \times 2}{3} \times \frac{3}{2}\right)$$

$$= \frac{22 \times 9 \times 11}{7 \times 4} = 77.785 \text{ மி.மீ}^3$$

அடைக்கப்பபட்டுள்ள மருந்தின் கன அளவு **77.785** மி.மீ$^3$

**10. ஒரு சிறுமி தனது பிறந்த நாளைக் கொண்டாடக் கூம்பு வடிவத் தொப்பிகளை 5720 ச.செ.மீ பரப்புள்ள காகிதத்தாளை பயன்படுத்தித் தயாரிக்கிறாள். 5 செ.மீ ஆரமும், 12 செ.மீ உயரமும் கொண்ட எத்தனை தொப்பிகள் தயாரிக்க முடியும் ?**

**<u>தீர்வு</u>**

கூம்ப வடிவ தொப்பியின் $r = 5$செ.மீ, ன் $h = $**12**செ.மீ

$\therefore l = \sqrt{h^2 + r^2} = \sqrt{12^2 + 5^2} = \sqrt{144 + 25} = \sqrt{169} = 13$ செ.மீ

மொத்த தொப்பிகள் = n

n x CSA = 5720

$n = \frac{5720}{CSA} = n = \frac{5720}{\pi r l}$

$= \frac{5720}{\frac{22}{7} \times 5 \times 13}$

$n = \frac{5720 \times 7}{22 \times 5 \times 13} = 28$

மொத்த தொப்பிகள் **28.**